# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 32
கதிர் 270
ஆடி 07ஆம் நாள்
புதன்கிழமை
23 ஓகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048


# இடியப்ப சிக்கலில் வடக்கு அமைச்சர் விவகாரம்

## சாண் ஏறினால் முழம் சறுக்குகிறது முதலமைச்சருக்கு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 23

வடக்கு மாகாண சபையின் அமைச்சரவையை மீள உருவாக்குவது மேலும் மேலும் சிக்கலாகிக் கொண்டே செல்கிறது. முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் புதிய அமைச்சர்களை நியமிப்பதில் காட்டும் தேர்வு முறைமை கட்சிகளுடன் முரண்பாடுகளை ஏற்படுத்துவதால் தெளிவான ஓர் அமைச்சரவை அமைவது இன்னமும் முடிவாக வில்லை.

முதன் முதலில் தான் அமைத்த அமைச்சரவையைக் கலைத்து விட்டுப் புதிதாக ஒன்றை அமைக்க முதலமைச்சர் விரும்பினார். முதல் அமைச்சரவையில் அவருக்கு நெருக்கமானவர்களாக இருந்த இரு அமைச்சர்கள், ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களில் சிக்கிக்கொண்டு பதவி விலகவேண்டி ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர் இந்த முடிவை எடுத்தார்.

ஆனால், மற்றைய இரு அமைச்சர்களையும் பதவி >> 25

# பதவி நீக்கினாலும்கூட நான் விலகமாட்டேன்

## சவால் விடுக்கிறார் டெனீஸ்

யாழ்ப்பாணம், ஓக. 23

முதலமைச்சர் தன்னைப் பதவி நீக்கிவிட்டார் என்று அறிவித்துவிட்டாலும் தனது பதவி விலகலுக்கான சம்மதக் கடிதத்தை நான் வழங்கப் போவதில்லை என்று அமைச்சர் பா.டெனீஸ்வரன் வடக்கு >> 25



ஞா.குணசீலன்



க.சிவநேசன்

# குணசீலன், பவான் இன்று பதவியேற்க ஒழுங்குகள்

வடக்கு மாகாண சபையின் புதிய அமைச்சர்களாக ரெலோவைச் சேர்ந்த ஞா.குணசீலன் மற்றும் புளொட்டைச் சேர்ந்த க.சிவநேசன் ஆகியோர் வடக்கு மாகாண ஆளுநர் முன்னிலையில் இன்று பிற்பகல் 2 மணிக்குப் பதவியேற்பதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால், அமைச்சர் பா.டெனீஸ்வரனைப் பதவி நீக்கலாமா என்பது தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்திடமிருந்து >> 25

# விந்தன்வேண்டாம்

அமைச்சைக் கொண்டு நடத்துவதற்கு தொழில் ரீதியான தகைமை விந்தனிடம் இல்லாததால் அவரது கட்சிக்கென ஒதுக்கப்பட்ட சுகாதார அமைச்சுப் பதவியை அவருக்கு வழங்க முடியாது என்று முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ரெலோவின் கட்சிச் செயலர் ந.சிறிகாந்தாவுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், புதிய அமைச்சரவையில் நீங்கள் >> 25

# குணசீலனின் நியமனத்தை ரெலோ ஏற்கவேமாட்டாது

## அரசியல் தவறைத் திருத்துங்கள் என்று சிறிகாந்தா முதலமைச்சர் மீது காட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 23

அமைச்சர் டெனீஸ்வரனுக்குப் பதில் ரெலோவின் மாகாண சபை உறுப்பினர் க.விந்தனை நியமிக்காமல் அந்தக் கட்சியைச் சேர்ந்தவரான மருத்துவர் ஜி.குணசீலனுக்கு அமைச்சர் நியமனம் வழங்கப்படும் என முதலமைச்சர் அறிவித்திருப்பதை ரெலோ அடியோடு நிராகரித்துள்ளது.

"ரெலோவின் சார்பில் ஜி.குணசீலனை நீங்களே தேர்ந்தெடுத்து அமைச்சராக்குவது >> 25

நீதிபதியின் காவலர் கொலை சந்தேகநபருக்கு

# தனி அறையால் மன அழுத்தமாம்

யாழ்ப்பாணம், ஓக. 23

"சிறைச்சாலையில் தனி அறையில் அடைத்து வைத்திருப்பதால் நான் மனஅழுத்தத்துக்கு உள்ளாகிறேன்." இவ்வாறு நீதிமன்றில் தெரிவித்தார், நீதிபதி இளஞ்செழியன் மீது துப்பாக்கிச்சூடு நடத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் உள்ள முதன்மைச் சந்தேகநபரான ஜெயந்தன். >> 23

# விஜயதாசவை உடன் நீக்குக!

## மைத்திரியிடம் ரணில் கோரிக்கை

கொழும்பு, ஓக. 23

நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்சவை அவரது அனைத்து அமைச்சுப் பொறுப்புகளில் இருந்தும் உடன் நீக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று அதிகாலை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க >> 25

சுவிஸ்குமாரை விடுவித்த வழக்கில்

# பொலிஸ் அதிகாரி தப்ப முயன்ற சிசிரிவி பதிவுகளைப் பெற உத்தரவு

ஊர்காவற்றுறை,ஓக. 23

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரி சுவிஸ்குமார் தப்பிச் செல்ல உதவிய அதிகாரிகளில் ஒருவரான உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் நாட்டைவிட்டுத் தப்பிச் செல்ல முற்பட்டமை தொடர்பில் கட்டுநாயக்க வானூர்தி நிலைய பாதுகாப்பு கமராக்களின் பதிவுகளை பெற்றுக்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுப் >> 23

தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக

# ஒருதலைப்பட்சமாகச் செயற்படுகிறது யாழ்ப்பாண கத்தோலிக்கத் திருச்சபை

## கட்சியின் செயலாளர் சேவியர் குலநாயகம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 23

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக கத்தோலிக்க மதகுருமார்கள் சிலர் செயற்படுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டியிருக்கிறது அந்தக் கட்சி. யாழ்ப்பாண கத்தோலிக்க திருச்சபை ஒருதலைப்பட்சமான அரசியல் நிலைப்பாட்டை எடுப்பது எந்தளவுக்குச் சரியானது என்று எனக்குத் தெரியவில்லை என்று யாழ். ஆயருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கட்சியின் செயலர் சேவியர் குலநாயகம் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நீதி சமாதான ஆணைக் குழுவின் தலைவர் எஸ்.வி.பி.மங்களராஜாவால் 'மக்களின் ஆணையை மீறும் செயல்' என்று தலைப்பிட்டு ஜூன் மாதம் 16ஆம் திகதி வெளியிடப்பட்ட துண்டறிக்கை ஜூலை மாதம் 2ஆம் திகதி சில தேவாலயங்களில் குருமட மாணவர்களால் விநியோகிக்கப்பட்டது.

இது தொடர்பில் சில >> 25









# திருப்பெருந்துறை குப்பை மேட்டில் தீ

மட்டக்களப்பு, ஓக 23

மட்டக்களப்பு மாநகர சபைப் பிரிவுக்குட்பட்ட திருப்பெருந்துறை திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் நேற்று அதிகாலை தீ பரவியது. தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் தீயணைப்புப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

"இந்த நிலையம் பாதுகாப்புடன் காணப்பட்டது. இந்தப் பகுதியிலுள்ள சிலரது திட்டமிட்ட செயலாலேயே தீ பரவியுள்ளது. இதனால் ஏற்படும் விளைவை அறியாதவர்களே இவ்வாறு செய்துள்ளனர். தீயைக் கட்டுப்படுத்த பொலிஸார், விமானப்படையினரின் உதவியுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது" - என்று மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் வே. தவராஜா தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலை காரணமாகத் தீயை அணைக்க அதிகளவு நீர் தூர இடங்களிலிருந்து எடுத்து வரப்படுகின்றது. பலத்த காற்று வீசுவதால் தீயைக் கட்டுப்படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையம் சுமார் 9 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. அதில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கும் திண்ம க்கழிவுகள் களஞ்சியப்படுத்தப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாநகர சபையால் தினமும் 70 தொன் திண்மக் கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன. அவற்றுள் 36 தொன் திண்மக் கழிவுகள் இயற்கை உரம் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. ஏனையவை உக்காத கழிவுப் பொருள்களாகும். திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தில் நில மட்டத்திற்கு மேல் ஆயிரத்து 500 தொன் திண்மக் கழிவுகளும், நில மட்டத்திற்குக் கீழ் 10ஆயிரம் தொன் திண்மக்கழிவுகளும் சேமிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது

அந்தப் பகுதி மக்கள் கடந்த பல வருடங்களாக முகாமைத்துவ நிலையத்தைப் பொருத்தமான இடத்துக்கு மாற்ற வேண்டும் என்று கோரிய போதும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. (ந-10,46)



பதுளை ஸ்ரீமாணிக்க விநாயகர் கதிர்வேலாயுத சுவாமி ஆலய அலங்கார உற்சவக் கொடியேற்றத் திருவிழா நேற்று இடம்பெற்றது. (ந-10,41)

# மக்களுக்கு உணவில் விழிப்புணர்வு தேவை

## கிழக்கு சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, ஓக. 23

அரை நூற்றாண்டு காலமாக அதிக நஞ்சூட்டப்பட்ட உணவு வகைகளை உட்கொள்வதால் நாம் நோயாளிகளாக்கப்பட்டுள்ளோம். நஞ்சாக்கப்பட்ட உணவு வகைகளைத் தவிர்ப்பது தொடர்பில் அரச அதிகாரிகள் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.முஹம்மட் நஸீர் தெரிவித்தார்.

ஆரோக்கியமான. சமூகத்தைக் கட்டியெழுப்ப நிரந்தர தீர்வு" ஹெலசுவய" எனும் தலைப்பில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் கருத்தரங்கு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இன்றைய சமூகம் அதிகமாக நஞ்சுள்ள உணவுகளை விரும்பி உட்கொள்கின்றது. கொழுப்புக்கள் படிந்து நோயின் சக்திக்குள் உள்வாங்கி வருகின்றது. மக்கள் நவீன யுகத்தில் காண்பதை எல்லாம் உட்கொள்வதன் மூலம் பல நோய்களுக்கு உள்ளாவதையும், உயிரிழப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இலங்கையில் உள்ள மக்கள் தற்போது அதிகமாக நஞ்சு கலக்கப்பட்ட உணவுகளையே பெரும்பாலும் பாவிக்கின்றனர். நஞ்சற்ற உணவுகளை உள்கொள்வதில் இருந்து தவிர்த்துக் கொள்ள இலங்கை அரசின் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமே "ஹெலசுவய"எனும் தலைப்பிலான சிறப்பு செயலமர்வு திட்டம். அரச உத்தியோகத்தர்கள் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதற்காக சிறப்புத் திட்டங்களை கையாண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ரீ.ஜே. அதிசயராஜ், அட்டாளைச்சேனை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் அலாவுதீன், மருத்துவ அத்தியட்சகர்கள் உள்ளிட்டவர்களுடன் அட்டாளைச்சேனை பிரதேச செயலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ந-10, 48)

# வறட்சிப் பாதிப்பு: உதவி பொருள்கள் விநியோகம்

தென்மராட்சி, ஓக. 23

தென்மராட்சிப் பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இலகு வேலைத் திட்ட உலர் உணவுப் பொருள்கள் நேற்றுத் தொடக்கம் விநியோகிக்கப்படுகின்றது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் கடைகளில் இவை விநியோகிக்கப்பட்டு வருகின்றன என பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. நிவாரணம் பெறுவதற்கு வறட்சி பெயர்ப்பட்டியல்களில் பெயர் உள்ளவர்கள் தமது அடையாள அட்டை, குடும்ப அட்டை என்பவற்றைக் கொண்டுசெல்ல வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடர் முகாமைத்துவ அமைச்சின் அறிவித்தலின் பிரகாரம் பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட வறட்சியினால் பாதிக்கப்பட்ட 5 ஆயிரத்து 949 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-10,9)

# பணிப் புறக்கணிப்பு

கொழும்பு, ஓக.23

தென் மாகாணத்தில் உள்ள அரச மருத்துவமனைகளில் கடமையாற்றும் மருத்துவத் துறையினர் நேற்று பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களின் போராட்டம் இன்றும் தொடரவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இடமாற்றம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர் என்று மருத்துவ சேவை தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவர் அஜித் பீ. திலகரத்ன தெரிவித்தார். (ந-10)

# பல்கலை. மாணவர்கள் போராட்டம் தொடர்கிறது

மட்டக்களப்பு, ஓக. 23

நீதிமன்றம் மற்றும் பல்கலைக்கழக பேரவைக் கட்டளைகளை மீறி கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் நடத்தப்படும் நிர்வாகக் கட்டட முற்றுகைப் போராட்டம் நேற்று 15ஆவது நாளாகத் தொடர்ந்தது.

கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாக மற்றும் பேரவைக் கட்டடத்தை ஆக்கிரமித்து தொடர்ச்சியாகப் போராட்டங்களை நடத்தி வரும் மாணவர்களை அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று கோரி நீதிமன்றம் மற்றும் பல்கலைக்கழக பேரவை ஆகியவை விடுத்த உத்தரவையும் மீறி பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் வந்தாறுமூலை வளாகத்தில் தொடர்கின்றது.

முறையற்ற வகுப்புத் தடைகளை நீக்க வேண்டும், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவால் வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ள 2ஆம் வருட மாணவர்களுக்கான விடுதி வசதிகளைப் பெற்றுத் தர வேண்டும் என்றும் வலியுறுத்தி பிரதான தேவைகள் மற்றும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடாமல் பேரவைக்கு எதிராக கட்டடத்துக்குள் தங்கியிருந்து போராட்டம் நடத்தப்படுகின்றது என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, இரவு பகலாக தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மாணவர்களின் மன அழுத்தத்தைக் குறைப்பதற்காகவும் பொழுதுபோக்குக்காகவும் போராட்டத்தில் ஈடுபடும் மாணவர்களில் ஒரு சாரார் கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து மாணவர்களுக்குக் களிப்பூட்டி, பரிசளித்து வருகின்றனர். (ந-10, 46)

# மாணவரை அகற்ற கோரி ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, ஓக. 23

நீதிமன்றம் மற்றும் கிழக்குப் பல்கலைக் கழக பேரவை என்பவற்றின் உத்தரவுகளை உதாசீனம் செய்து கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகப் பேரவைக்கட்டடத்தை ஆக்கிரமித்துள்ள மாணவர்களை அங்கிருந்து அகற்றக் கோரி பல்கலைக்கழகச் சங்கங்கள் இணைந்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அனைத்துக் கல்வி நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டு பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ள நிலையில் மாணவர்களில் ஒரு சாரார் நிர்வாக மற்றும் பேரவைக் கட்டடத்தை ஆக்கிரமித்து கடந்த 8 ஆம் திகதியிலிருந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மாணவர்களின் நடவடிக்கைகள் தங்களுக்கு இடையூறாக உள்ளது என்று தெரிவித்து பல்கலைக் கழக கல்விசார் மற்றும் கல்வி சாரா ஊழியர்களும், பாதுகாப்பு ஊழியர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிர்வாகக் கட்டடத்தை ஆக்கிரமித்துள்ள மாணவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும். கடந்த 11ஆம் திகதி ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்த போதும் மாணவர்கள் தொடர்ந்து அங்கு தங்கியிருந்து வருகின்றனர். இதற்கெதிராக பொலிஸார் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை அல்லது பொலிஸார் மந்தகதி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். மாணவர்களின் ஆக்கிரமிப்பால் நிர்வாக அலுவல்களை மேற்கொள்வதில் இடையூறுகள் ஏற்படுகின்றன என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தேரிவித்தனர்.

கிழக்குப் பல்கலைக் கழகம் கடந்த 18ஆம் திகதி தொடக்கம் தனது சகல கல்வி நடவடிக்கைகளையும் நிறுத்தியுள்ளதோடு அந்தப் பல்கலைக்கழகத்திலிருந்து அனைத்து பீட மாணவர்களையும் வெளியேறவும் உத்தரவிட்டிருந்தது. (ந-10,46,47)



# எந்த உதவிகளும் கிடைக்கவில்லை

## பொலிஸ் சூட்டில் இறந்த கஜனின் தாய் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஓக. 23
பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த பல்கலைக்கழக மாணவன் கஜனின் குடும்பத்தாருக்கு இதுவரை எந்தவிதமான உதவிகளும் வழங்கப்படவில்லை என அவரது தாயார் தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது;

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் எனது மகன் உயிரிழந்தான். குடும்பத்துக்கு இழப்பீடுகள் வழங்கப்படும் என மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் வாக்குறுதி வழங்கியிருந்தார். அவர் அளித்த வாக்குறுதியில் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

வீடு அமைத்துக் கொடுக்கப்படும். கல்வி கற்று வீட்டில் உள்ள ஒருவருக்கு அரச வேலை வாய்ப்பு வழங்கப்படும் என சுவாமிநாதன் கூறியிருந்தார். ஆனால் இதுவரை எதுவும் கிடைக்கவில்லை.

வீட்டுத்திட்டம் மூலம் வீடு ஒன்றைப் பெறுவதற்கு நான்பல்வேறு முயற்சிகள் எடுத்தேன். அதன் மூலம் வீட்டுத்திட்டம் கிடைத்துள்ள போதிலும் வீட்டைக் கட்டி முடிக்க முடியாத சூழ் நிலையில் நான் உள்ளேன். எனக்கு எந்தவித உதவியும் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. எனது பிள்ளையின் இறப்புக்கு நீதி வேண்டும் - என்றார். (ற-10, 35)

# அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தும் நீதி அமைச்சர்

## குற்றஞ்சாட்டுகின்றார் நளின் பண்டார

கொழும்பு, ஓக.23
நீதி அமைச்சர் தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்துகின்றார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார.

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

தனது அமைச்சுக்குத் தேவையான வேலைகளைச் செய்யாமல் ஏனைய அமைச்சுக்களுக்கான வேலைகளைச் செய்வதில் நீதி அமைச்சர் அக்கறையுடன் இருக்கின்றார்.

புதிய ஆட்சியைக் கொண்டுவர வாக்களித்த நாட்டு மக்களின் தேவைக்காகவே நாட்டுக்குள் சட்டம் நடைமுறைபடுத்தப்பட வேண்டும். முதலில் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

அதைச் செய்வதற்கு நீதி அமைச்சர் பின்வாங்குகின்றார். அதனாலேயே அவர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ அதனைச் சரிப்படுத்துவதற்கு இதுவரை முன்வரவில்லை - என்றார். (ற)

# பொலிஸ் சூட்டில் கொல்லப்பட்ட பல்கலை. மாணவன் குடும்பத்துக்கு வீடு

## அமைச்சர் சுவாமிநாதன் தலைமையில் நேற்று அடிக்கல் நடும் நிகழ்வு





யாழ்ப்பாணம், ஓக. 23
பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் சுலக்ஸனின் குடும்பத்துக்கு அமைத்துக் கொடுக்கப்படவுள்ள வீட்டுக்கான அடிக்கல் நேற்று நடப்பட்டது. இந்த நிகழ்வு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தலைமையில் சண்டிலிப்பாய் மாசியப்பிட்டியில் நேற்று நடைபெற்றது.

நண்பகல் 12 மணியளவில் வீட்டுக்கான அடிக்கல்லை மீள்குடியேற்ற அமைச்சர் முன்னிலையில் உயிரிழந்த சுலக்ஸனின் தாயார் நட்டார்.

நிகழ்வில் யாழ்.மாவட்ட செயலர் நா. வேதநாயகன், யாழ் மாவட்ட மேலதிக (காணி) மாவட்ட செயலர் எஸ். முரளிதரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர், உத்தியோகத்தர்கள், இராணுவ அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம், குளப்பிட்டியில் கடந்த ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தில் 3 ஆம் வருடத்தில் கல்வி கற்ற கிளிநொச்சியைச் சேர்ந்த நடராசா கஜன் (வயது23), சுன்னாகத்தைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்ஸன் (வயது24) ஆகியோர் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர்.

இரு மாணவர்களின் குடும்ப நிலையை கருத்திற் கொண்டு அவர்களின் மரணத்துக்கு நீதி வேண்டும். அவர்களின் குடும்பங்களுக்கு தேவையான இழப்பீடுகள் வழங்க வேண்டும் என பல தரப்பினரும் கோரிக்கை விடுத்திருந் தனர்.

அரச தலைவர், எதிர்க்கட்சித்தலைவர், மீள் குடி யேற்ற அமைச்சர் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் பலரால் குடும்பத்தினருக்கு உரிய இழப்பீடுகள் வழங்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆயினும் எந்தவிதமான உதவிகளும் வழங்கப்படவில்லை என்றும், மாணவர்களின் இறப்புக்கு நீதியும் வழங்கப்படவில்லை என்றும் பல தரப்பினராலும் விமர்சிக்கப்பட்டதுடன், அந்தப் பிரதேச மக்களால் கண்டன ஆர்ப்பாட்டமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

தற்போது உயிரிழந்த மாணவர்களில் ஒருவரான சுலக்ஸனின் குடும்பத்தினருக்கு மீள் குடியேற்ற அமைச்சால் சண்டிலிப்பாய் மாசியப்பிட்டியில் 5 லட்சம் ரூபா பெறுமதியான காணி வழங்கப்பட்டுள்ளது. 9.5 லட்சம் ரூபா பெறுமதியான வீட்டுக்கான அடிக்கல் நடப்பட்டது. இந்த வீட்டை இராணுவத்தினரே அமைக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10,101)



தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்தத் திருவிழா நேற்று அதிகாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ற-10,26)

# கடமைகளை பொறுப்பேற்றார் கடற்படையின் புதிய தளபதி

கொழும்பு, ஓக. 23
இலங்கை கடற்படையின் 21ஆவது தளபதியாக நியமிக்கப் பட்ட ரியர் அட்மிரல் ட்ரெவிஸ் சின்னையா கடற்படைத் தலைமையகத்தில் தமது கடமைகளை சம்பிரதாயபூர்வமாக நேற்றுப் பொறுப்பேற்றார்.

கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, புதிய கடற்படைத் தளபதிக்கு பாரம்பரியமாக கடற்படைத் தளபதியின் வாள் மற்றும் கடமைகளை சமர்ப்பித்தார்.

ரியர் அட்மிரல் ட்ரெவிஸ் சின்னையாவின் மனைவி திருனி, கடற்படை கட்டளைகளின் தளபதிகள், மற்றும் கடற்படையின் மூத்த அதிகாரிகள் எனப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இலங்கையில் இடம்பெற்ற மூன்று தசாப்த காலப் போருக்குப் பின்னர் இலங்கையின் முப்படைகளில் ஒன்றான கடற்படைக்கு தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை இதுவே முதற் தடவையாகும். (ற-10)

# அதிபர் மீது தாக்குதல்: கண்டித்து ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, ஓக. 23
கிண்ணியா வலயத்துக்கு உட்பட்ட காக்காமுனை உலூம் மகா வித்தியாலய பாடசாலை அதிபர், ஆசிரியரால் தாக்கப்பட்டார் என்று தெரிவித்து மாணவர்களும், பெற்றோரும் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் பகல் 12.30 மணியளவில் பாடசாலை நேரத்தில் பாடசாலை அதிபரை ஆசிரியர் ஒருவர் தாறுமாறாக பாடசாலை தளபாடங்களால் தாக்கினார் என்று கூறப்படுகின்றது.

அதிபரை தாக்கிய ஆசிரியரை உடனடியாக இடமாற்றம் செய்யக் கோரியே பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள் , பெற்றோர்கள் பாடசாலையை நடைபெறவிடாது ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதற்கு ஒரு தீர்வு பெற வேண்டும் இவ்வாறு ஒரு சம்பவம் இனிமேலும் நடை பெறக் கூடாது. அறிவையும், ஒழுக்கத்தையும் புகட்டும் ஆசிரியர்கள் இவ்வாறு செய்வது இழிவான செயல் என ஆர்ப்பாட்டம் மேற்கொண்டவர்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு எந்த உயர் அதிகாரிகளும் வாராததை அடுத்து அந்த இடத்திலிருந்து 800 மீற்றர் தூரத்தில் உள்ள பிரதான வீதிக்கு சென்று வீதியை மறித்து போக்குவரத்தைத் தடை செய்து போராட்டம் நடத்தினர்.

கிண்ணியா வலய கல்விப் பணிப்பாளர் சம்பவ இடத்துக்கு வந்து பிரச்சினையை பழைய மாணவர்கள் , பெற்றோர்களிடம் கேட்டறிந்தார். உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டதை அடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (ற-10)



நல்லூர் கந்தசுவாமி ஆலய திருக்கல்யாணம் நேற்று இடம்பெற்றது. வள்ளி தெய்வானை சமேதரராய் முத்துக்குமார சுவாமி மணக் கோலத்தில் அடியவர்களுக்கு காட்சியளித்தார். (வ-37)

# கேப்பாபிலவில் 110 ஏக்கர் காணி ஒரு மாதகாலத்துக்குள் விடுவிப்பு

## கூட்டமைப்பிடம் நேற்று மைத்திரி உறுதி

கொழும்பு, ஒக. 23

"முல்லைத்தீவு, கேப்பாபிலவு மக்களின் 110 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்காக இராணுவத்தினர் கோரிய 148 மில்லியன் ரூபா நிதி மீள்குடியேற்ற அமைச்சால் விடுவிக்க நேற்று அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. எனவே அந்தக் காணிகள் ஒரு மாத காலத்துக்குள் விடுவிக்கப்படும். அத்துடன், உடனடியாக விடுவிக்க முடியாத காணிகளின் உரிமையாளர், அவர்களது வாழ்வாதாரத் தொழிலாளான கடற்றொழிலை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர்"

இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் நேற்று வாக்குறுதி வழங்கினார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

வடக்கு கிழக்கில் இராணுவத்தினர் வசமுள்ள மக்களின் காணிகள் விடுவிப்பில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் தமிழ்தேசியக்கூட்டமைப்புக்கும் இடையே நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் முப்படைகளின் தளபதிகளும் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பிலேயே அரச தலைவர் மேற்கண்டவாறு உறுதியளித்தார் என்று கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கேப்பாபிலவு மக்கள் தமது காணிகளை விடுவிக்கக் கோரி தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த மக்களுக்குச் சொந்தமான காணிகளிலிருந்து இராணுவத்தினர் வெளியேறுவதற்கு ஏன் தாமதம் ஏற்பட்டுள்ளது? என கூட்டமைப்பு கேள்வி எழுப்பியது. கேப்பாபிலவுக் காணிகள் விடுவிப்பை வலியுறுத்தி எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு எழுதிய கடிதங்கள், அவற்றுக்கான பதில்கள் குறித்தும் கூட்டமைப்புச் சுட்டிக்காட்டியது.

"கேப்பாபிலவு மக்களின் காணிகளில் 110 ஏக்கர் நிலக்பரப்பை விடுவிக்க இராணுவத்தினரால் 148 மில்லியன் ரூபா நிதி கோரப்பட்டது. அந்த நிதியை விடுவிக்க நேற்று மீள்குடியேற்ற அமைச்சுக்கு அமைச்சரவை அனுமதியளித்தது. அதனால் அந்தக் காணிகளிலிருந்து இராணுவத்தினர் ஒரு மாதகாலத்துக்குள் வேறு இடத்துக்கு நகர்ந்துவிடுவர்" என அரச தலைவர் கூறினார். மேலும் 70 ஏக்கர் காணிகளையும் விடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதோடு பொது மக்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதியையும் வழங்குகின்றோம் என்று இராணுவத் தளபதியால் தெரிவிக்கப்பட்டது. "அதேபோன்று கேப்பாபிலவின் எஞ்சிய பகுதிகளுக்குச் சொந்தமான மக்களின் வாழ்வாதாரத் தொழிலான மீன்பிடிக்கு அனுமதிக்கப்படுமா? விடுவிக்கப்படும் காணிகளுக்குரிய மக்களை கடற்றொழில் செய்ய அனுமதி வழங்கினாலும் அவர்கள் தொழில்புரிவதற்கான ஏது நிலமைகள் எதுவும் இல்லை. அவர்களிடத்தில் மீன்பிடி உபகரணங்கள் இல்லை. அனைத்தையும் இழந்த நிலைமையில்தான் இருக்கின்றார்கள். ஆகவே அவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்று கூட்டமைப்பினர் கேட்டுக்கொண்டனர்.

"110 ஏக்கர் காணிகளை விடுவிக்கும் காலத்தில் எஞ்சிய காணிகளுக்குரிய மக்களையும் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படும். கேப்பாபிலவு மக்களுக்குத் தேவையான வாழ்வாதார உதவிகள் வழங்கப்படும்" என்று அரச தலைவர் பதிலளித்தார் என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். (வ-101)

# தேர்தல் திருத்த சட்டவரைவு அரசமைப்புக்கு முரணற்றது

## நாடாளுமன்றில் சபாநாயகர் அறிவிப்பு

கொழும்பு, ஒக.23

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்ட வரைவு அரசமைப்புக்கு முரணானது அல்ல என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்று சபாநாயகர் கருஜயசூரிய நேற்று நாடாளுமன்றத்துக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு வேளையில் அவர் மேற்கண்டவாறு அறிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தம்)' எனும் சட்டமூலத்துக்கு எதிராக ஆற்றுப்படுத்தப்பட்ட மனு சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நாடாளுமன்றத்துக்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

மனுதாரர் இந்தச் சட்டமூலம் தொடர்பான மனுவைத் தொடர்ந்து முன்னெடுக்க விரும்பவில்லை என்று நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார் என்று உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்தச் சட்டமூலம் அரசமைப்பின் ஏற்பாடுகளுக்கு முரணானது அல்ல எனவும், அரசமைப்பின் 12(4) அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள சமத்துவத்துக்கான உரிமை ஏற்பாடுகளுக்கு ஆதரவளிக்கின்றது எனவும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. என்றார்.

மாகாண சபைகளில் கட்சிகளுக்கான ஆசன ஒதுக்கீட்டில் பெண்களுக்கு முப்பது சதவீதத்தை வழங்குவதற்கு வழிவகுக்கும் வகையிலேயே மாகாண சபைத் தேர்தல் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் வேட்பாளர் பட்டியலில் 30 சதவீதத்தை பெண்களுக்கு ஒதுக்கவேண்டும். அவ்வாறு அல்லாவிட்டால் வேட்புமனுவை நிராகரிக்கும் வகையிலான ஏற்பாடுகளும் அதில் உள்ளன. (ற)

# இடைக்கால அறிக்கைக்கு இணைப்பை வழங்க வழிநடத்தல் குழுவால் மீளவும் காலம் நீடிப்பு

அரச தலைவருடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் நாளை வியாழக் கிழமையுடன், இடைக்கால வரைவுக்கு இணைப்பு அறிக்கை சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டி ருந்தது. ஆனால் நேற்று நடைபெற்ற வழிநடத்தல் கூட்டத்தில் வழமை போன்று அதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் இணைப்பு அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை குறித்து விசனமடைந்திருந்த கூட்டமைப்பு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று முன்தினம் சந்திப்பு நடத்தியிருந்தது. இந்தச் சந்திப்பில், இனியும் தாமதங்கள் இல்லாமல் செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் நாடாளுமன்றுக்கு வழிநடத்தல் குழுவின் இடைக்கால வரைவைச் சமர்ப்பிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அத்துடன் இடைக்கால வரைவு தொடர்பில் தமது கட்சியின் நிலைப்பாடுகள் அடங்கிய இணைப்பு அறிக்கையை சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாளை வியாழக் கிழமை சமர்ப்பிக்கும் என்று கூறப்பட்டிருந்தது.

வழிநடத்தல் குழுவின் கூட்டம் நாடாளுமன்றத்தில் நேற்றுக் கூடியது. இடைக்கால அறிக்கை தொடர்பில் தமது நிலைப்பாட்டை வழங்குவதற்கு கால அவகாசம் தேவை என்று மகிந்த அணியினர் கூறினர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் அந்த நிலைப்பாட்டை ஆமோதித்துள்ளனர். இதனடிப்படையில் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் இணைப்பு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. அறிக்கை ஒவ்வொரு கட்சிகளுக்கும் வழங்கப்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி இதன் பின்னர் தமது நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்கு காலத்தை இழுத்தடித்தது. வழிநடத்தல் குழு கூடுவதும் கலைவதுமாக இருந்தது.

கடந்த மார்ச் மாதம் இந்தியாவின் தலைமை அமைச்சர் நரேந்திரமோடி இலங்கைக்கு வந்தபோது அரசமைப்பை உருவாக்கும் பணியின் இழுத்தடிப்புத் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இதன் பின்னர் அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகள் வேகப்படுத்தப்பட்டன.

ஆனாலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மீண்டும் இழுத்தடிப்புச் செய்து வந்தது. வழிநடத்தல் குழுவின் ஒவ்வொரு கூட்டங்களிலும் கால நீடிப்பை அது கோரி வந்தது. கூட்டமைப்பு இது தொடர்பில் அரசதலைவருடன் சந்திப்பில் ஈடுபடுவதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் காலத்தை இழுத்தடிப்பதுமாகவே தொடர்கின்றது. இடைக்கால வரைவு கடந்த ஜீன் மாதம் இறுதி செய்யப்பட்டது. கட்சிகள் தமது முடிவை அறிவிப்பதற்கு ஜீன் மாத இறுதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டு அது தற்போது ஒகஸ்ட் மாத இறுதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (வ-5)

# மயிலிட்டியில் மீள்குடியமர்ந்தோருக்கு உடனடியாக வீட்டுத் திட்டம்வேண்டும்

## தலைவரிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஒக. 23

யாழ்ப்பாணம், வலி. வடக்கு மயிலிட்டியில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு வீடமைத் திட்டத்தை உடனடியாக வழங்க வேண்டும் என்றும் பொன்னாலை பருத்தித்துறை வீதியிலுள்ள பாடசாலைகளை விடுவிக்க வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரச தலைவரிடம் நேற்றுக் கோரியது.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையே நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மயிலிட்டியில் மக்களின் மீள்குடியமர்வை நிறைவு செய்து அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் மற்றும் வீட்டுத் திட்டம் என்பன வழங்கப்படும் என அரச தலைவர் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசாவும், கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனும் கலந்துகொண்டதோடு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தலைமையில் முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதிகளும் பங்கேற்றனர். (வ-101)

## பொலிஸார் மீது வாள்வெட்டு:

# வாள்கள், மோ. சைக்கிள் நீதிமன்றில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம். ஒக. 23

யாழ்ப்பாணத்தில் வைத்துப் பொலிஸாரை வாளால் வெட்டிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து மீட்கப்பட்டதாகக் கூறப்படும் வாள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் யாழ்ப்பாண நீதிமன்றில் நேற்றுப் பாரப்படுத்தப்பட்டன.

கொக்குவில் பொற்பதி சாலையில் கடந்த மாதம் பணிக்குச் சென்றிருந்த கோப்பாய் பொலிஸார் இருவர் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டது. அவர்கள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், சிறப்பு அதிரடிப்படையினரின் தீவிர தேடுதலின் பின்னர், வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஆவாக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளப்படுத்தப்படும் 7 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து மீட்கப்பட்டதாகக் கூறப்படும் வாள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன நீதிமன்றில் மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் நேற்றுப் பாரப்படுத்தப்பட்டன. 7 சந்தேகநபர்களையும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்ட நீதிவான், அவர்களை அன்றுவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (வ-4-106)

## கட்டாக்காலி மாடுகளால் வயல் செய்ய முடியா நிலை

### வேலணை பிரதேச விவசாயிகள் கவலை

யாழ்ப்பாணம், ஓக. 23

"வேலணை பிரதேச செயலாளர் பகுதியில் தற்போது 2 ஆயிரத்து 900 ஏக்கர் வயல் நிலம் உள்ளபோதும் காலபோகத்தில் 400 ஏக்கர் வயல் மட்டுமே விதைக்கப்படுகின்றது. அங்கு உள்ள கட்டாக்காலி மாடுகளே முழுமையான நெற்செய்கைக்கு தடையாக உள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்தி விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கு வழி ஏற்படுத்த வேண்டும்" என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

யாழ். மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலர் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் வேலணைப் பிரதேச விவசாயிகளால் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

"வேலணைப் பிரதேச செயலாளர் பகுதியில் விதைக்கப்படக்கூடிய மொத்த நிலத்தின் 20 வீதம் கூட இன்று எம்மால் விதைக்க முடியவில்லை. கால்நடைகளின் தொல்லை அந்தளவு அதிகரித்துள்ளது. இங்கே மிகத் தரமான நிலப்பரப்புக்கள் உள்ளன. ஆனால் எம்மால் விதைக்க முடியவில்லை. மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இதற்குத் தீர்வை வழங்க வேண்டும். கால்நடைத் திணைக்களத்திடமும் பிரதேச செயலகத்திடமும் முறையிட்டு எந்தப் பிரயோசனதும் இல்லாது உள்ளமையால் இங்கு முறையிடு கின்றோம்." என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் தற்போது 3 ஆயிரம் மாடுகள் வரையில் கட்டாக்காலிகளாக உள்ளன என்று கால்நடை சங்கப் பிரதிநிதி தெரிவித்தார். அங்குள்ள கட்டாக்காலி மாடுகளை உடனடியாக பிடிப்பது எனவும், பிடிக்கப்படும் மாடுகளை முதலில் அந்தப் பகுதியில் பட்டி அமைத்து வளர்க்க இணங்குபவர்களுக்கு வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அவ்வாறு அந்தப் பகுதியில் எவரும் முன்வராத சந்தர்ப்பத்தில் மாவட்டத்தின் ஏனைய பகுதியில் முன்வரும் பண்ணையாளர்களுக்கு அல்லது கிளிநொச்சியில் இயங்கும் பொது அமைப்புக்களின் பண்ணைகளுக்கு அவற்றை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் உரிமையாளர் அற்ற சுமார் 500 மாடுகள் உள்ளன என தெரிவிக்கப்பட்டது. (ற-10,101)

### அரசியல் கைதிகள் விடயத்தில்

# அதிகாரம் இருந்திருந்தால் உடன் செயற்பட்டிருப்பேன்

### அமைச்சர் சுவாமிநாதன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஓக.23

அரசியல் கைதிகள் விடயத்தில் நீதி அமைச்சே இறுதித் தீர்மானம் எடுக்க வேண்டும். எனது அமைச்சுக்கு அது தொடர்பான அதிகாரம் இல்லை.

இவ்வாறு சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு, மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், குளப்பிட்டியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த மாணவன் ஒருவரின் குடும்பத்துக்கு வழங்கப்படவுள்ள வீட்டுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இது தொடர்பில் பல தடவைகள் நான் நீதி அமைச்சரிடம் கலந்துரையாடியுள்ளேன். அரசியல் கைதிகள் பல ஆண்டுகளாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதற்கு ஒரு முடிவு காண வேண்டும் என்பதே எனது விருப்பம். எனக்கு அதிகாரம் இருந்திருந்தால் உடனடியாக நான் இதைச் செய்திருப்பேன்.

சட்டமா அதிபர் திணைக்களத்தினருடன் பேசி எதற்காக வழக்குகள் தாமதமடைகின்றன என்பது தொடர்பில் அறிந்து தெரியப்படுத்துகின்றேன்.

**காணி விடுவிப்பு**

இராணுவத்தினரின் வசமுள்ள சில காணிகள் டிசெம்பர் மாதத்துக்குள் விடுவிக்கப்படும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள காணிகளே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளன.

இராணுவத்தினரும் எம்முடன் ஒத்துழைத்து எத்தனையோ காணிகளை விடுவித்துள்ளனர். அதை மறுப்பதற்கில்லை. கேப்பாபிலவில் காணி விடுவிப்புக்கான நிதி தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கட்டுள்ளது. விரைவில் திறைசேரி யில் இருந்து நிதி பெறப்பட்டு வழங்கப்படும். அதன்பின்னர் அந்தக் காணிகள் விடுவிக்கப் படும் - என்றார். (ற-37)

## முத்தமிழ் மன்றத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஓக. 23

அனலைதீவு அருணோதயா சனசமூக நிலையத்தினரால் இயல், இசை, நாடக மன்றத்துக்குப் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. அதற்கானஅடிக்கல்நேற்றுமுன்தினம் மாலை நடப்பட்டது.

அனலைதீவைச்சேர்ந்தபுலம்பெயர் நாடொன்றில் வதியும் அ.செபஸ்ரியான் என்பவர் நிலையத்துக்கு அன்பளிப்பாகவழங்கியகாணியில் மன்றக் கட்டடம் அமைக்க அடிக்கல் நடப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது.



நிலையத் தலைவர் இ. அனோராஜ் தலைமையில்நடைபெற்ற இந்த நிகழ்வில் செபஸ்ரியான் குடும்பத்தினர் கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டனர் எனத்தெரிவிக்கப்பட்டது. (4)

## சிகைஒப்பனைநிலையத்துக்குள் புகுந்துஇருவர்மீதுவாள்வெட்டு

### உரும்பிராயில் நேற்றிரவு பயங்கரம்

யாழ்ப்பாணம், ஓக. 23

உரும்பிராய் சந்தியிலுள்ள சிகை ஒப்பனைநிலையத்துக்குள்நேற்றிரவு7.30 மணியளவில் புகுந்த வாள்வெட்டுக் கும்பல்அங்குஇருவர்மீதுவாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியது.

சம்பவத்தில் சிகை ஒப்பனை நிலைய உரிமையாளரும் அங்கு பணிபுரியும் சுரேஸ்வரன் கனிஸ்ரன் (வயது-25) என்ற இளைஞரும் படுகாயமடைந்தனர். அவர்கள் இருவரும்யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

"உரும்பிராய் சந்தியில் உள்ள சிகை ஒப்பனை நிலையத்துக்கு இளைஞர்கள் சிலர் நேற்றுப் பகல் சென்றுள்ளனர். அவர்கள்அங்குதகாதவார்த்தைபிரயோகத்தை மேற்கொண்டு வாக்குவாதப்பட்டுள்ளனர். சிகை ஒப்பனை நிலைய உரிமையாளர், தொழில் செய்யும் இடத்தில் இவ்வாறான வார்த்தைப் பிரயோங்களை மேற்கொண்டு முரண்பட வேண்டாம் எனக் கூறி இளைஞர்களை கடையில் இருந்து அப்புறப்படுத்தினார்.

கடையில் இருந்து வெளியேறிய இளைஞர்களில் மூவர் வாள்களுடன் சிகை ஒப்பனை நிலையத்துக்குள் நேற்றிரவு புகுந்துஉரிமையாளர்மீதும்அங்குபணியாற்றிய இளைஞன் மீதும் வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, தற்போது நல்லூர் திருவிழாவில்பெரும்பாலானபொலிஸார்பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் நல்லூர் திருவிழா முடியட்டும்வாள்வெட்டுக்குழுக்களுக்கு மங்களம் இருக்கு என்றும் வடக்கு மாகாணமூத்தபிரதிபொலிஸ்மாஅதிபர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார். (வ-21,37,8,ரி)

ஊடகவியல் அறிமுகம்
(அச்சு / இலத்திரனியல்)
சான்றிதழ் பயிற்சி நெறி

ஊடகத் துறையில்
ஆர்வம் உடையோருக்கு
வாய்ப்பு

* 10 நாள் பயிற்சிகள்.
* ஒரு பிரிவில் ஆகக் கூடியது 20 பேர் மட்டுமே.
* இருபாலாருக்குமானது
* பயிற்சியின் முடிவில் சான்றிதழ்.
* கட்டணம் இல்லை.
* பயிற்சிகள் உதயன் பணிமனையில் நடைபெறும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:
31.08.2017

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்
'ஊடகப் பயிற்சி நெறி' எனக் குறிப்பிட்டு
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்புங்கள்

விண்ணப்பப் படிவம்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மூளாயில் 65 வீடுகளை அமைக்க அதிகார சபை திட்டம்


யாழ்ப்பாணம், ஓக. 23
மூளாயில் ஜே/ 171 கிராம அலுவலர் பிரிவில் 65 பயனாளிகளுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன என்று வலி.மேற்கு பிரதேச செயலாளர் செல்வி எஸ். பிறேமினி தெரிவித்தார்.
தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 65 பயனாளிகளுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. ஐந்து வீட்டுத்திட்டம், 10 வீட்டுத்திட் டம்.
20 வீட்டுத்திட்டம், 30 வீட்டு த்திட்டம்என மொத்தம் 65 வீடுகள் தேசிய வீடமைப்பு அதிகார சபையினரால் அமைக்கப்படவுள்ளன என்று மேலும் தெரிவித்தார். (4-50)

## விளம்பரப் பலகைக்கு விசமிகள் மை தெளிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 23
நவாலி வடக்கில் அமைக்கப்பட்ட கூட்டரசுத் தலைவர்களின் சாலை விளம்பரப்பலகைக்கு சிவப்புமை ஊற்றி சீரழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரது நிழற்படங்கள் குறித்த விளம்பரப்பலகையில் காணப்படுகின்றன.
இந்தச் சம்பவம் நவாலி வடக்கு குளத்தடி வைரவர் சாலையில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றுள்ளது. (4-50)

## சந்நிதியில் இன்று சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 23
தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய திருவிழாவில் இன்று மாலை 4 மணிமுதல் இரவு 7 மணி வரையும், மற்றும் சுவாமி வீதி உலா நிறைவுற்ற பின்னரும் நிகழ்வுகள் ஆலய முன்றிலில் இடம்பெறும்.
ஆலய முன்றிலில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு மேடையில் இந்த நிகழ்வுகள் இடம்பெறும்.
மூன்றாம் திருவிழாவான இன்று 23 ஆம் திகதி புதன்கிழமை மாலை செல்வச்சந்நிதி முருகன் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவி தரணிகா சிறி லிங்க சத்தின் சிற்றுரை இடம்பெறும். மாலை சண்டிலிப்பாய்ப்பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர் இளம் சைவப் புலவர் சுவேந்திரராஜா "காசி நாதரின் ஆறு" என்னும் தலைப்பிலான சொற்பொழிவு இடம்பெறும். (4-173)



சிலாபம் - பங்கதெனிய பிரதேசத்தில் இரட்டைத் தலையுடன் பாம்பு ஒன்று சிக்கியுள்ளது. அந்த பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் இந்தப்பாம்பைப்பிடித்துள்ளார். ஆறு அடி நீளம் கொண்ட இந்தப் பாம்பைத் தான் ஒரு போதும் பார்த்ததில்லை என பாம்பினைப் பிடித்தவர் தெரிவித்துள்ளார். குறித்த பாம்பு தெஹிவளை மிருகக் காட்சி சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. *(21)*

### பல்கலை மாணவர் கொலை:

## பொலிஸாருக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 23
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திக் கொலை செய்த குற்றச் சாட்டில் விளக்கமறியலில் உள்ள 5 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் எதிர்வரும் செம்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.
இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. 5 பேரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அதன்போது மறியல் நீடிக்கப்பட்டது. கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் சம்பவம் இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களான கஜன், சுலக்சன் ஆகியோர் அதில் உயிரிழந்தனர். (4-106)

## நீர்க்குழாய் பொருத்துநர் கற்கைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஓக. 23
இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் மூன்று மாத காலம் கொண்ட நீர்க்குழாய் பொருந்துநர் கற்கைநெறி முற்றிலும் இலவசமாக எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.
இந்தக் கற்கை நெறி தேசிய தொழில் தகைமைச் சான்றிதழுக்கான பயிற்சி.
இந்தக் கற்கைநெறியைக் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம் 4ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம் இல 12 கே.கே.எஸ் சாலை யாழ்ப்பாணம் (021 222 7949) அல்லது வலந்தலைச்சந்தியில் உள்ள காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்துள்ளார். (4)

## வல்லிபுர ஆழ்வார் ஆலய திருவிழா கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 23
வல்லிபுர ஆழ்வார் ஆலயத் திருவிழா ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய கண்ணன் மண்டபத்தில், பிரதேசசெயலர் தலைமையில் நடைபெறவுள்ளது.
இக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட திணைக்கள உத்தியோகத்தர்களைத் தவறாது கலந்துகொண்டு ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் வழங்கி உதவுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்துள்ளார். (ய)

## ஆங்கில கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 23
இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பகுதி நேர ஆங்கில கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
இந்தக் கற்கைநெறிகளிற்குத் தேசிய தொழில் தகைமை (என்.வி.க்கியூ) சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.
இந்தக் கற்கைநெறியினைக் கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம் 4ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம் இல.12 கே.கே.எஸ்.சாலை யாழ்ப்பாணம் (021 222 7949) அல்லது வலந்தலைச்சந்தியில் உள்ள காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் அல்லது கைதடியிலுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்துள்ளார். (4)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | 80 | 80 | 60 | 60 |
| கத்தரி | 120 | 140 | 140 | 140 | 160 |
| மரவள்ளி | 80 | 80 | 80 | 60 | 70 |
| பயிற்றை | 120 | 60 | 120 | 80 | 140 |
| பாகல் | 260 | 200 | 280 | 180 | 160 |
| க.கிழங்கு | 100 | 140 | 100 | 120 | 90 |
| பெ.வெங்காயம் | 140 | 140 | 130 | 140 | 120 |
| சி.வெங்காயம் | 160 | 200 | 130 | 200 | 180 |
| பூசணி | 60 | 60 | 60 | 50 | 60 |
| தக்காளி | 140 | 140 | 160 | 150 | 130 |
| வாழைக்காய் | 100 | 90 | 120 | 80 | 60 |
| கீரை | 40 | 30 | 40 | 15 | 40 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 40 | 30 | 30 |
| ப.மிளகாய் | 300 | 250 | 400 | 250 | 240 |
| புடோல் | 80 | 100 | 60 | 80 | 60 |
| கோவா | 100 | 120 | 120 | 100 | 100 |
| வெண்டி | 80 | 100 | 60 | 80 | 60 |
| போஞ்சி | 120 | 200 | 200 | 160 | 180 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 100 | 120 |
| தேங்காய் | 60 | 65 | 70 | 70 | 60 |
| உ.கிழங்கு | 100 | 100 | 110 | 110 | 100 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 120 | 80 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 120 | 160 | 160 | 150 | 120 |
| கரட் | 180 | 160 | 200 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 50 | 60 | 40 | 40 |

## நவாலி வடக்கு சாலையை சீரமைக்குமாறு கோரிக்கை

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட நவாலி வடக்கு பழைய விதானையார் பரராஜசேகரம் சாலை கடந்த 50 வருடங்களுக்கு மேலாகச் சீரமைக்கப்படவில்லை. அனைச் சீரமைத்துத்தருமாறு கோரப்படுகிறது. நவாலி வடக்கு அட்டகிரி சாலையும் டச்சு சாலையும் இணையும் சாலையாக பரராஜசேகரம் சாலை உள்ளது.
விவசாயிகள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என பலநூற்றுக்கணக்கான மக்கள் மானிப்பாய் மற்றும் இதர கிராமங்களுக்கு செல்லும் பிரதேச சபை சாலையாக இது விளங்குகிறது. மானிப்பாய் பிரதேச சபை குறித்த சாலையை உலக வங்கி முதலீட்டுத் திட்டத்தின் கீழ் முன்மொழிந்தபோதும் அந்தத் திட்டம் பின்னர் கைவிடப்பட்டது.
இதேவேளை மேற்படி பழைய விதானையார் சாலை 580 மீற்றர் நீளமானதும் 20 அடி அகலமும் கொண்டபாதை. முழுமையாக பாதிக்கப்பட்டுக் கைவிடப்பட்டுள்ளது. விரைவில் சீரமைக்குமாறு பிரதேச மக்களால் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (4-50)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 300 | 400 | 500 | 300 |
| கணவாய் | 700 | 600 | 800 | 1000 |
| பாரை | 600 | 500 | 600 | 700 |
| சுறா | 500 | 700 | 1000 | 1000 |
| சீலா | 400 | 400 | 500 | 400 |
| விளை | 600 | 400 | 500 | 600 |
| முரல் | 400 | 350 | 400 | – |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 350 | 300 | 500 | 400 |
| திரளி | 250 | 200 | 200 | 180 |
| நகரை | 250 | 150 | 400 | 300 |
| சூடை | 150 | 100 | 280 | 150 |
| [illegible] | 250 | 200 | 300 | 100 |
| திருக்கை | 300 | 200 | 400 | 300 |
| மதனம் | 200 | 150 | 300 | – |
| கொய் | 150 | 30 | 80 | 100 |
| பாலை | 200 | 200 | 500 | – |
| வாழை | – | 200 | 400 | – |



எழுவைதீவு. முத்தன்காடு முருகமூர்த்தி ஆலயத்துக்கென அமைக்கப்பட்ட சித்திரத்தேரில் சுவாமி வீதி வலம் வந்தார். குறித்த ஆலய தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. ஏராளமான அடியார்கள் கலந்துகொண்டனர். அதில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சிவநேசன், பா.கஜதீபன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (4)




ஆண்களுக்கான 'ஜீன்ஸ்' வகைகள் பல தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை பருத்தித்துணியில் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆயிரத்து 300 ரூபாவில் இருந்து இவை விற்பனை ...யயபபடுகின்றன.

## நீர்வற்றிப்போகும்குளங்களில் மீன்களை அள்ளிச்செல்லும் தென்பகுதி வாசிகள்

*அதிகாரிகள் கவனிப்பார்களா?*



கிளிநொச்சி, ஓக.23
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நீர் வற்றிய நிலையில் உள்ள குளங்களில் காணப்படும் மீன்களை தென்பகுதியிலிருந்து வருவோர் அத்துமீறி பிடித்துச் செல்கின்றனர் என அப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

மாவட்டங்களில் மழை வீழ்ச்சி குறைவாக காணப்பட்டதால் குளங்களில்நீர்மட்டம்வெகுவாகக் குறைவடைந்துள்ளன.

கால்நடைகளுக்காக விடப்பட்ட தண்ணீரில் காணப்படும்மீன்களைதென்பகுதிகளில்இருந்து வாகனங்களில் வருவோர் பிடித்துச் செல்கின்றனர். இதனால்குளங்களில்மீன்வளம்இல்லாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

சில குளங்களில் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இனப் பெருக்கத்துக்காக விடப்பட்ட மீன் குஞ்சுகள் வளர்ந்துள்ளன. அவற்றையும் வலை போட்டுப் பிடித்து கூலர் வாகனத்தில் ஏற்றிச் செல்கின்றனர். இதுதொடர்பாகஉரியஅதிகாரிகளுக்கு அறிவித்தபோதிலும் பயன் கிடைக்கவில்லை. தினமும் வாகனங்களில் வருவோர் மீன்குஞ்சுகளையும்விட்டுவைக்காமல்அவற்றையும்பிடித்துச் செல்கின்றனர்.

இதனால் உள்ளூர் மக்கள் பாதிப்படைகின்றனர். எனவே, இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (ய-9)

# வனவள அதிகாரிகளின் அடாவடியை நிறுத்தக்கோரி சபையில் அவசர பிரேரணை

யாழ்ப்பாணம், ஓக.23
நெடுங்கேணிப் பகுதியில் வன வளத் திணைக்களத்தினரின் நடவடிக்கையால் தொடர்ந்தும் அப்பகுதி மக்கள் பெரும் பாதிப்பினை எதிர் கொள்கின்றனர். அதனை உடனடியாக நிறுத்து வேண்டும் என வனவளத் திணைக்களப்பணிப்பாளர்நாயகம்மற்றும்அமைச்சின்செயலாளரைக் கோரும் அவசர பிரேரணை ஒன்றை வடக்கு மாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் அவைத் தலைவரிடம் சமர்ப்பித்துள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:

வனவளப்பகுதியினரின்இரக்கமற்ற செயலினால் நெடுங்கேணி சின்னடம்பன் ராசாபுரத்தில் உள்ள 69 குடும்பங்கள் இன்று குடிப்பதற்கு தண்ணீர் கூட இன்றித் தவிக்கும் திலமைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இதனால் நெடுங்கேணி சின்னடம்பன் ராசாபுரத்தில் உள்ள 69 குடும்பங்களுக்கான குடி தண்ணீர் தேவைக்காக வெட்டப்பட்டகிணற்றைக்கூடமனிதாபிமானற்ற முறையில், தமது ஆளுகைப் பிரதேசம் எனத் தெரிவித்து மூடியுள்ளனர்.

தற்போது வன்னிப்பகுதியில் நிலவும் கடும் வறட்சி காரணமாக கிணறுகளில் நீர் வற்றிப் போயுள்ளது. இதனை அப்பகுதி மக்கள் பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

மக்களின் கோரிக்கையினை ஆராய்ந்த பிரதேச செயலாளர் இரு கிணறுகளுக்காக 3லட்சம் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்து வழங்கினார்.

அவ்வாறு வழங்கிய நிதியில் கிணறு அமைக்கத் தடைபோட்டதோடு, அனுமதியின்றிகிணறு வெட்டியதாக்கூறி பைக்கோ இயந்திரச் சாரதியையும் வனவளத் திணைக்களத்தினர் கைது செய்ய முற்பட்டனர்.

இதனால் உடனடியாக குறித்த சம்பவம் பிரதேச செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.தானேஅவ்விடத்தைப் பரிந்துரைத்தேன் என்று அவர் கூறினார்.

வனவளத் திணைக்களம் கொழும்புஅரசின்வீழ்உள்ளதாகத்தெரிவித்தே மாகாணப்பிரதிநிதிகளின் கருத்துக்களுக்கு செவிசாய்க்கப்படுவதில்லை. ஆனால் வனவளத் திணைக்களத்தினர் கொழும்பு அரசின் நிர்வாக அதிகாரியான பிரதேச செயலாளரின் கருத்தையும் மதிப்பதில்லை. எனவே அந்த மக்களைவனவளத்திணைக்களம்திட்டமிட்டேநசுக்குகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

நெடுங்கேணிப் பகுதியில் வன வளத் திணைக்களத்தினரின் நடவடிக்கையால் தொடர்ந்தும் அப்பகுதி மக்கள் பெரும் பாதிப்பினைஎதிர் கொள்கின்றனர்.

எனவே, அதனை உடனடியாக நிறுத்துமாறு வனவளத் திணைக்கள பணிப்பாளர் நாயகம்மற்றும்அமைச்சின்செயலாளரை சபை கோரவேண்டும் எனக்குறிப்பிட்டுள்ளார். (ய-101)

## மொனராகலையில் கடத்தப்பட்ட பிக்கு யாழில் நிர்வாண கோலத்தில் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக.23
மொனராகலையில் கடத்தப்பட்டதாகக்கூறப்படும்17 வயதுடைய இளம்பிக்கு ஒருவர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம்ரயில்நிலையத்திற்கருகில் மீட்கப்பட்டுள்ளார்.

ஆடைகளின்றிக் காணப்பட்ட இவரை அவதானித்த மக்கள் அவருக்கு ஆடைகளை வழங்கி, பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த பிக்கு மொனராகலையில் வைத்து ஞாயிற்றுக்கிழமை கடத்தப்பட்டுள்ளார். அவ்வாறு கடத்தப்பட்டவர் தொடர்பில் எந்தவிதமானதகவலும்தெரிந்திருக்கவில்லை.

இந்தநிலையிலேயேஇவர் யாழ்ப்பாணம் தொடருந்து நிலையத்துக்கு அருகில் கைவிடப்பட்டுள்ளார் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பொலிஸார் பிக்குவை அழைத்துச் சென்றதுடன்மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ய-101)

## நாவற்குழியில் 3கிலோ கஞ்சாவுடன் கைதான நபருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஓக.22
மூன்றுகிலோ 813 கிராம் கஞ்சாவுடன் கைதான நாவற்குழி நபரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை உத்தரவிட்டுள்ளார்

நாவற்குழி மேற்கில் உள்ள வீடொன்றில்கஞ்சாவிற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. தகவலையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் வீட்டினுள்காணப்பட்ட 3கிலோ 813 கிராம் கஞ்சாவைக்கைப்பற்றியதுடன் சந்தேகநபரையும் கைதுசெய்தனர்.

சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் முற்ப டுத்தப்பட்ட சந்தேகநபரை இம்மாதம் 31ஆம் திகதி வரைவிளக்கமறியலில்வைக்குமாறு உத்தரவிட்டார். (ய-9)

## கலைமாணி கற்கைநெறி: திசைமுகப்படுத்தல் 26இல் ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழக கலைமாணி பகுதி 1 2014 (வெளிவாரி பழைய பாடத்திட்டம்) கற்கைநெறிக்கான பரீட்சைகள் ஒக்ரோபர் மாத ஆரம்பத்தில் நடத்தப்படவுள்ளன.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மைகருதி திசைமுகப்படுத்தல்நிகழ்வுஎதிர்வரும்26ஆம்திகதிசனிக்கிழமை முதல் அடுத்தமாதம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடத்தப்படும்.

இதுதொடர்பானநேரஅட்டவணைதிறந்தமற்றும்தொலைக்கல்வி நிலைய இணையத்திலும்நிலைய இணையத்திலும்(www.coldl.jfn.ac.lk) பார்வையிடலாம் என திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையப் பணிப்பாளர் பா.நிமலதாசன் தெரிவித்துள்ளார். (ய)

## வெங்காயச் செய்கையாளர்களுக்கு மானியம்

யாழ்ப்பாணம், ஓ. 22
வடக்குமாகாணத்தில்வெங்காயச் செய்கையாளர்களுக்குமானியம்வழங்கப்படவுள்ளது. வெங்காயங்களை சேமித்து வைப்பதற்குத் தேவையான கொட்டில்களை அமைப்பதற்கு மானிய உதவி வழங்கப்படவுள்ளதாகவடக்குமாகாண விவசாயதிணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெங்காயச்செய்கையாளர்களுக்குகொட்டில் அமைப்பதற்காகஎமதுதிணைக்களம் மானியஉதவிவழங்கிவருகின்றது. அந்தவகையில் பயனாளி ஒருவருக்கு தலா 50ஆயிரம் ரூபா வீதம் வழங்கி வருகின்றோம்.

கொட்டில் அமைக்கும் பயனாளி ஒரு இலட்சம் ரூபா பெறுமதியில் கொட்டிலை அமைத்திருக்கவேண்டும். அவ்வாறு அமைத்த பயனாளிக்கு 50வீதமான மானியமாகபணத்தைநாம்வழங்கி வருகின்றோம். பயனாளிகள்கொட்டிலைஅமைக்கும் பணிகளை முடிவுறுத்திய பின்னர் எமது திணைக்கள அதிகாரிகள் அதனைப் பார்வையிட்டதும்நாம் உடனடியாக பணத்தை வழங்குவோம்.

இந்தத் திட்டத்துக்காக எமது திணைக்களம்5மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது. வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் நாம்இந்தத்திட்டத்துக்கு100 பயனாளிகளைத் தெரிவு செய்துள்ளோம். யாழ்ப்பணத்தில்40,கிளிநொச்சியில் 20, மன்னாரில் 10, முல்லைத்தீவில் 10 மற்றம் வவுனியாவில் 20 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்றார். (ய-8)

## ரயில் விபத்துக்கள் குறித்து சபையில் சிறப்புப் பிரேரணை

யாழ்ப்பாணம், ஓக. 23
வடக்கிலுள்ள பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைகளினால் ஏற்படும்விபத்துகளைத்தடுக்கவடக்குமாகாணசபைஉடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தி நாளை இடம்பெறவுள்ள 103ஆவது சபை அமர்வில் மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா பிரேரணை ஒன்றை முன்வைக்க வுள்ளார்.

அந்தப் பிரேரணையில் குறிப்பிட்டிருப்பதாவது: வடக்கிலுள்ள தொடருந்துக் கடவைகள் பல பாதுகாப்பற்றவையாகக் காணப்படுவதனால் தொடர்ச்சியான விபத்துகள் இடம்பெற்று பல உயிரிழப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன. இவ் விபத்துகளைத்தடுப்பதற்காக அவ்வாறானபாதுகாப்பற்ற கடவைகள் இருக்கின்ற உள்ளூராட்சி சபைகள் தற்காலிக பாதுகாப்புத் தடைகளை ஏற்படுத்தி அவற்றைச் செயற்படுத்தவேண்டும்.

பிரதேசசபை செலவில் ஒருவரை நிரந்தரமாக நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படுபவர்அண்மித்ததொடருந்துநிலையங்களுடன்நேரடித்தொடர்புகளைமேற்கொள்வதன் மூலம் தொடருந்துகள் வருகின்ற நேரத்தில் கடவைகளை மூடிவிட முடியும். இதற்கு ஏதுவாக ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு முதலமைச்சர் மற்றும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணிகள், மின்சாரம், வீடமைப்பும் கட்டட நிர்மாணமும், தொழிற்துறை, சுற்றுலாத்துறை,உள்ளூராட்சிமற்றும்மாகாண நிர்வாகத்துறை அமைச்சு உள்ளூராட்சிசபைகளுக்குப் பணிப்புரை வழங்கவேண்டும். அத்துடன் இலங்கை தொட ருந்து சேவைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு ஆவனசெய்யவேண்டும் என இச் சபை கோருகின்றது என பிரேரணையில் குறிப்பிட்டுள்ளார். (ய-8)




தாயே தரணி போற்றும் தயாவாணியே
தெல்லி நகர் துர்க்கா தேவ தேவியே
ஏவிளம்பி வருட திருவிழாக் கொடி ஏறும் நாளின்று
நாடி வருவோம் நமக்கருள் செய்வாய் நயனியே
வாடி வருந்தும் அடியார்க்கு வாழ்வு தரும் வாணியே
மங்களம் காக்கும் மகிமைமிகு மதன ரூபியே
உன் குங்குமம் அணிந்து கும்பிட்டால் குறை போக்கும் குமுதினியே
நாடு விடியவும் நமக்குள் பிணக்குத் தீரவும் தாயே துர்க்கா எழுந்து வா.
அனுசரணை: பொன்னுத்துரை குடும்பம், தெல்லிப்பழை
இந்து இளைஞர் சங்கம்

# தரம் 1 வகுப்பறைகளில் இனி 32 மாணவரே!

யாழ்ப்பாணம், ஓக.23
வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் கற்றல்சூழலை சிறப்பாகப் பேணும் வகையில் தரம் ஒன்று மாணவர்களின் வகுப்பறைகளில் குறிப்பிட்ட அளவு மாணவர்களை மாத்திரம் உள்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை உள்வாங்கும் போது குறித்த வகுப்பறையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துமாறு நாம் பாடசாலை நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளோம்.

இவ்வாறான செயற்பாடுகளின் போது ஒரு வகுப்பறையில் 32 மாணவர்கள் மாத்திரமே இருக்கமுடியும்.

அதாவது 32 மாணவர்கள் வீதம் குறைந்தது 6 சமாந்தர வகுப்பறைகள் இருக்கலாம்.

இவ்வாறு சமாந்தர வகுப்பறைகளைக் கொண்ட 61 பாடசாலைகளுக்கு நாம் அனுமதி வழங்கியுள்ளோம்.

வடக்கு மாகாணத்தில் அதிகமாக மாணவர்களை உள்வாங்கக் கூடிய பாடசாலைகள் உள்ளன.

இவை நகர்ப்புறங்களை அண்டியதாகவும், பிரபல்யமான பாடசாலையாகவும் இருப்பதனால் அதிக மாணவர்களை உள்வாங்கும் தேவை உள்ளது.

ஆகவே அவ்வாறான பாடசாலைகளுக்கு 2 தொடக்கம் 5 வரையான சமாந்தர வகுப்புகள் அமைக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் நடைபெற அனுமதி வழங்கியுள்ளோம்.

இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கை கொண்ட வகுப்பறைகள் மூலம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஆசிரியர்களால் கவனிக்க கூடியதாக அமைகின்றது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

# பாவனையிலிருந்த மோ.சைக்கிள்கள் இனி அலுவலர்களுக்கே சொந்தமாகும்

## வடக்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக.23
வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் வெளிக்கள உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களை உரிமை மாற்றம் செய்து அவர்களுக்கே வழங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் வெளிக்கள உத்தியோகத்தர்களாக கடமையாற்றியவர்களுக்கு பல்வேறு செயற்றிட்ட நிதிகள், நிறுவனங்கள் மூலம் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களை அவர்கள் ஓய்வுபெறும்போது அவர்களுக்கே சொந்தமாக வழங்குவது தொடர்பாக நாம் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடியுள்ளோம்.

அவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்களை அவர்கள் ஓய்வுபெறும்போது குறிப்பிட்டளவு நிதியை மாத்திரம் செலுத்தி தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் சுகாதார அமைச்சின் கீழ் பதியப்பட்டுள்ளன. ஆகவே அவர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்கும் போது உரிமை மாற்றம் செய்தல் அவசியமாகும். இவ்வாறு கடமையின் நிமித்தம் பெற்றுக்கொண்டவர்களின் விவரங்களை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் ஊடாகப் பெற்று அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இவ்வாறான விவரங்கள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஏனைய செயற்பாடுகள் நடைபெறும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

# வடக்கு மாகாணத்தில் புதிதாக 8 பாலங்கள்

யாழ்ப்பாணம், ஓக.23
வடக்கு மாகாணத்தில் எட்டுப் பாலங்கள் புதிதாக அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன என்று சாலை அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

இலங்கையின் போக்குவரத்து வலையமைப்பை விரிவாக்கும் நோக்கில் 'ஜெய்க்கா நிறுவனத்தின் செயற்றிட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 3.78 பில்லியன் ரூபா செலவில் 37 பாலங்கள் புதிதாக அமைக்கப்படவுள்ளன.

இதற்கு அமைவாக பாலம் அமைக்க வேண்டிய பிரதேசங்களை இனங்கண்டு அவற்றுக்கான அறிக்கை வழங்கப்பட்டது. இதற்கு அமைவாக வடக்கு மாகாணத்தில் 8 பாலங்கள் அமைக்கும் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

மூவாயிரத்து 800 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படும் பாலங்களின் கட்டுமானப்பணிகள் 20 மாதங்களில் நிறைவடையும். யாழ்ப்பாணத்தில் 2 பாலங்களும், வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் ஒவ்வொரு பாலமும், மன்னார் மாவட்டத்தில் 4 பாலங்களும் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

# வடக்கு பாடசாலைக் கட்டடங்களை இனிமேல் நீர்ப்பாசனத் திணைக்களமும் கண்காணிக்கும்

யாழ்ப்பாணம், ஓக.23
வடக்கு மாகாணப் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் கட்டட அமைப்புப் பணிகளை மேற்பார்வை செய்யும் பணிகள் இனிமேல் நீர்ப்பாசனத் திணைக்களத்திடமும் ஒப்படைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பாடசாலைகளின் கட்டட அமைப்புப் பணிகள் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து கட்டடங்கள் ஆய்வுத் திணைக்கள அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டுவந்தன. எனினும் இனிவரும் காலங்களில் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் கட்டட அமைப்புப் பணிகள் கல்வித் திணைக்களம், கட்டடங்கள் திணைக்களம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றால் மேற்பார்வை செய்யப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக மாகாணக் கல்வித் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது:

கல்வித் திணைக்களத்தில் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப அலுவலர்களுக்குப் பற்றாக்குறை காணப் படுகின்றது. இதனால் கட்டடங்கள் திணைக்களம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலர்களினதும் பங்களிப்புடன் கட்டட அமைப்புப் பணிகள் கண்காணிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-9)

# உயர்தரத்தில் தொழில்கல்வி பிரிவை ஆரம்பிக்க ஏற்பாடு

## பாடசாலைகளுக்கு சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், ஓக.23
ஜி.சி.ஈ. உயர்தரத்தில் தொழிற்துறைப் பிரிவிற்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு பரீட்சார்த்த நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கல்வியமைச்சு அறிவித்துள்ளது என மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் தெரிவித்தார்.

இதுதொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

இப்பாடநெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலையின் அதிபருக்கு இது தொடர்பில் அறிவுறுத்துவதுடன், நேரடியான வழிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

01.ஜி.சி.ஈ. உயர்தர தொழிற்றுறைப்பிரிவுக்கு மாணவர்களைச் சேர்க்கும் போது ஜி.சி.ஈ. (சா\த) பரீட்சையின் சித்தி, சித்தியின்மை என்பவற்றைக் கவனத்திற் கொள்ளக் கூடாது.

2016 ஜி.சி.ஈ. சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றியிருந்தமையை மட்டும் கருத்திற்கொண்டு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

02.தங்கள் வலய நிலையைப் பாடசாலையில் இருந்தும், ஊட்டப் பாடசாலைகளில் இருந்தும் 2016இல் ஜி.சி.ஈ. சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளமுடியும்.

03.மாணவர் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத சந்தர்ப்பத்தில் அண்மையில் உள்ள ஏனைய பாடசாலைகளில் இருந்தும் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம்.

04.மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான நடைமுறைகளை (விண்ணப்பப்படிவம், பதிவுசெய்தல்) பொருத்தமான மட்டத்தில் செய்வதற்கு (பாடசாலை மட்டம் அல்லது வலய மட்டம்) தீர்மானித்து விவரங்களை ஊடகங்களுக்கு செய்தியாகவோ அல்லது விளம்பரமாகவோ பிரசுரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

05.பாடசாலையின் மூன்றாம் தவணைக்காலம் ஆரம்பித்து ஒரு வாரத்துக்குள் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் முடிவுறுத்தப்படவேண்டும்.


அதேவேளை குறித்த பாடசாலைக்கு என ஒதுக்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கையை பெற்றுக்கொள்ளுதலும் கட்டாயமானதாகும்.

இதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும்.

மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் வகுப்புகளின் எண்ணிக்கை விவரங்களை தரப்பட்ட மாதிரிப்படிவத்தில் பூரணப்படுத்தி உதவிக்கல்விப் பணிப்பாளர் (தொழிநுட்பக் கல்வி), மாகாணக் கல்வித் திணைக்களம், மருதனார் மடம் சுன்னாகம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ய)

## பாப்பரசருடன் தவராசாவை ஒப்பிட்ட

# வடக்கு முதலமைச்சர் விக்கிக்கு கத்தோலிக்க அமைப்பு கண்டனம்



கொழும்புத்துறை, ஓக. 23
வடக்கு மாகாண சபையின் சிறப்பு மீளாய்வு அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவின் குற்றச்சாட்டுக்களுக்கு வடக்கு மாகாணசபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வழங்கிய பதில் கருத்துக்களின்போது புனித பாப்பரசரையும் தவராசாவையும் ஒப்பிட்டுப் பேசியதற்கு யாழ். மறை மாவட்ட பொது நிலையினர் கழகம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கையை குறித்த கத்தோலிக்க அமைப்பு முதலமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாண சபையின் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பான இரண்டாவது மீளாய்வு அமர்வில் எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசாவின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும்போது, கத்தோலிக்கத் திருச்சபையின் உலகத் தலைவராகிய பாப்பரசரையும், எதிர்க்கட்சித்தலைவரையும் ஒப்பிட்டுப் பேசினீர்கள்.

பாப்பரசரின் பகர்வுகள் போல் பலதையும் பத்திரிகைகள் ஊடாகப் பலரறியப் பகிர்ந்து கொள்வது நல்லதல்ல என்று கூறியுள்ளீர்கள்.

இந்த ஒப்பீடு பொருத்தமற்றதும் தேவையற்றதுமென்பது எமது கருத்து. தங்களின் அரசியல் காய்நகர்த்தலுக்காக அனைத்துலக கத்தோலிக்க மக்களது ஏகதலைவரும் உலகமே செவிமடுக்கும் நற்போதனையாளருமான பாப்பரசரின் பெயரை தேவையின்றிப் பயன்படுத்தியதையிட்டு கத்தோலிக்க மக்கள் சார்பில் எமது விசனத்தைத் தெரிவிக்கின்றோம்.

முன்பு ஒருமுறை இயேசுநாதரையும், பிரேமானந்த சுவாமிகளையும் ஒப்பிட்டது தொடர்பாக எமது கரிசனையை வெளிப்படுத்தியிருந்தோம். அவ்வாறிருந்தும் மீண்டும் பாப்பரசரையும், எதிர்க்கட்சித் தலைவரையும் ஒப்பிட்டு உவமித்தமை எமக்கு மிகுந்த கவலையையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளது.

பாப்பரசரது கருத்துகள் ஆன்மிகப் பற்றையும், உலக அமைதிக்கான வழிப்படுத்தல்களையும் கொண்டவையே தவிர விளம்பர நோக்கமற்றது என்பதனை உலக அரங்கே அறியும்.

எனவே, தங்களது கருத்துக்கான தெளிவுபடுத்தலை வெளியிடுவதோடு வருங்காலங்களில் மக்களின் சமய நம்பிக்கைகளையும், தலைவர்களையும் சர்ச்சைக்குரிய விதத்தில் தங்கள் கருத்து ஒப்பீட்டுக்குப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்வீர்கள் எனவும் எதிர்பார்க்கின்றோம் என்றுள்ளது. (ய-135)

# இராணுவத்தினர்

## படுகொலை செய்த மக்களுக்காக அமைக்கப்பட்ட நினைவுத் தூபி திறப்பு

மட்டக்களப்பு, ஓக.23

இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்கள் 143பேர் நினைவாக மட்டக்களப்புக் கொக்கட்டிச்சோலைப் பகுதியில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபி மறுசீரமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.



1987ஆம் ஆண்டு தொடக்கம் 1991ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் மகிழடித்தீவு இறால் பண்ணை மற்றும் அந்தச் சூழலை அண்டிய பகுதிகளில் இருந்த பொதுமக்கள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். படுகொலை செய்யப்பட்டவர்களின் ஞாபகார்த்தமாக 2002ஆம் ஆண்டு மகிழடித்தீவு சந்தியில் நினைவுத் தூபி அமைக்கப்பட்டு அதில் உயிரிழந்தவர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டிருந்தது. நினைவுத் தூபி கடந்த 2007ஆம் ஆண்டு சிதைத்து அழிக்கப்பட்டது.

இந்த நினைவுத் தூபி மீளமைக்கப்பட்டது. நேற்று முன்தினம் திங்கட் கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோ. கருணாகரம், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன், மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (5-46)

# என் குடும்பத்தை சந்தி சிரிக்க வைத்தவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வேன்

## இப்படி மிரட்டுகிறார் மகிந்த ராஜபக்ச

கூட்டு அரசில் இருக்கும் அமைச்சர்கள் பலருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

களுத்துறை இராணுவ ஒன்றிணைந்த அமைப்பின் ஏற்பாட்டில் நடந்த நிகழ்வில் கலந்து கொண்ட மகிந்த ராஜபக்ச மேலும் தெரிவித்ததாவது:

எனக்கும், எனது குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராகவும், அவதூறு பரப்பும் வகையில் கூட்டு அரசின் அமைச்சர்கள் தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

அவர்களுக்கு எதிராக மானநஷ்ட வழக்குத் தொடரவுள்ளேன். இதற்கான பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளது - என்றார். (5)

## ரூபா 12லட்சம் பெறுமதியான தங்க நகை கடத்தல்

சவூதி அரேபியாவிலிருந்து சட்டவிரோதமாக தங்க நகைகளை இலங்கைக்குக் கடத்தி வந்தவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் ஆயப் பகுதியினரால் (சுங்கம்) கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தனது ஆடைகளுக்குள்ளும் கைப்பையினுள் வைத்தும் சுமார் 225 கிராம் தங்க நகைகளைக் கடத்தி வந்துள்ளார். கைப்பற்றப்பட்ட தங்க நகைகளின் பெறுமதி 12 லட்சத்து 75 ஆயிரத்து 400 ரூபாவாகும். (5)



### புதிய அரசமைப்பு

# தமிழ்க் கட்சிகளும் முட்டுக்கட்டை

## கவலைப்படுகிறார் கோவிந்தன் கருணாகரம்

மட்டக்களப்பு, ஓக. 23

வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் சில, புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கு முட்டுக் கட்டையாக இருக்கின்றார்கள். எமது உயிரிழந்த உறவுகளுக்குச் செய்கின்ற துரோகமாகும். இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலையில், இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மக்கள் நினைவாக நிறுவப்பட்ட தூபி மறுசீரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உரிமைக்காகப் போராடினோம். உரிமை கிடைக்காத நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாட்டில் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு நாடாளுமன்றம் முயற்சித்துக் கொண்டிருக்கும் நேரத்திலே வடக்கு கிழக்கில், தெற்கிலும் சில தீய சக்திகள், புதிய அரசமைப்பைத் தடுப்பதற்காகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

வடக்கு கிழக்கிலே உள்ள தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள்கூட சில விரோத, குரோத செயல்களைச் செய்து, புதிய அரசமைப்பு உருவாவதற்கு முட்டுக் கட்டையாக இருக்கின்றார்கள். இவ்வாறான செயற்பாடுகள் எமது உறவுகளுக்குச் செய்யும் மிகப்பெரிய துரோகமாகும் என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைவரையும் அரவணைத்துக் கொண்டு, ஒற்றுமையுடன், கூட்டாகச் சென்றால்தான் எமது மக்கள் எதிர்பார்க்கும் தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம். பொதுமக்களும், மாவீரர்களும் இந்த மண்ணிலே என்ன நோக்கத்திற்காக, என்ன சிந்தனையோடு, இறந்தார்கள் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களின் தியாகங்களை நிறைவேற்றுவதற்கு நாம் அனைவரும் தற்போது முக்கியமான தருவாயில் இருந்து கொண்டிருக்கின்றோம். இந்த நேரத்தில் ஒருபிரிவினர் பிரிந்து கொண்டு குறைகூறிக் கொண்டிருந்தால் அது எமக்கு ஆரோக்கியமாக இருக்காது - என்றார். (5.46)

# சு.க தலைவர் யார் ?

## அது மக்களுக்கே தெரியும் என்கிறார் கட்சிச் செயலர்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக இப்போதும் நானே இருக்கின்றேன் என்று தெரிவித்து மகிந்த ராஜபக்ச புதுப் புரளியைக் கிளப்பியிருந்தார். அதற்குப் பதிலடி கொடுத்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலர் துமிந்த திசநாயக்கா, சுதந்திரக் கட்சியின் தலைவர் யார் என்பது இந்த நாட்டுக்கே தெரியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

துமிந்த திசநாயக்கா மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் யார் என்பதை பொலனறுவையில் நடைபெற்ற கட்சியின் கடந்த 64 ஆம் ஆண்டு பொதுக் கூட்டத்தின் போது நாட்டு மக்கள் யாவரும் அறிந்து கொண்டனர்.

அன்றைய கூட்டத்தில் கட்சியின் தலைவரும் அரச தலைவருமான மைத்திரிபால சிறிசேனவின் வலது பக்கத்தில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அமர்ந்திருந்தார். அரச தலைவர் தலைமையில் நடைபெற்ற கட்சியின் பொதுக் கூட்டத்தில் தானும் அதில் அங்கத்தவனாக கலந்து கொண்டு விட்டு கட்சியின் தலைவன் தான் எனக் கூறுவது எவ்வளவு அபத்தமானது -என்றார். (5)

**தேவை**
*கொப்பறா, தேங்காய் கொள்வனவு செய்யப்படும்.
*மில்வேலை செய்யக்கூடியவர்கள் தேவை.
077 772 2215 (CS 7069) (14)

**பணிப்பெண் தேவை**
யாழ்ப்பாண வீட்டில் வீட்டு வேலை செய்யக்கூடிய 45 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.
077 187 7754 (CS 6907) (14)

**தேவை**
யாழ்.நகரில் அமைந்துள்ள வியாபார நிலையத்துக்கு சிட்டை எழுதுநர், விற்பனையாளர் தேவை.(ஆண், பெண்)
077 336 3766

**முன்பள்ளி ஆசிரியைகள் தேவை**
யாழ்.நகரில் பிரபல பாடசாலைக்கு மத்தியில் இயங்கும் முன்பள்ளிக்கு ஆசிரியைகள் தேவை.
077 083 3339

**மணமகன் தேவை**
திருவோணம் 1ஆம் பாதம், கன்னி லக்கினம், இராசி மகரம், 1994 ஆம் ஆண்டு பிறந்த மணமகளுக்குப் பொருத்தமான மணமகனை பெற்றோர் (விஸ்வகுலத்தில்) உள்நாடு, வெளிநாடுகளில் எதிர்பார்க்கின்றார்கள்.
தந்தை - T.ரவிசங்கர் ஆச்சாரி
தரகர்கள் தேவையில்லை
077 900 6584

**வீடு விற்பனைக்கு**
வடமராட்சி புலோலியில் (மந்திகை வைத்திய சாலையில் இருந்து 1Km இற்கு உள்) 3 பரப்புக் காணியில் அமைந்த புதிய வீடு விற்பனைக்கு உண்டு.
076 435 2964/ 077 715 3417

**நாகபூஷணி திருமண சேவை**
எம்மிடம் ஏராளமான மணமக்கள் உள்ளனர். நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்படும்.
ஞாயிறு உட்பட எல்லா நாள்களும் திறந்திருக்கும்.
021 222 9306, 077 138 7596
383/14B, கோயில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வடக்குப் பக்கம்)

பழமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்
ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?
ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!
ரெங்கசாமி காளியம்மா
மாத்தளை வீதி, கண்டி.
077 327 2302/ 075 509 5887

**4ஆம் ஆண்டு நினைவஞ்சலி**
சிரேஷ்ட வழக்கறிஞர்
சிவப்பிரகாசம் பஞ்சலிங்கம்



தோற்றம் 08.04.1923
மறைவு 23.08.2013
திதி: 08.09.2017
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறவில்லை எம்மனது
வற்றவில்லை எம் கண்ணீர்
அன்பும், பண்பும் ஒருங்கே
அமைந்த எமது குடும்பத் தலைவருக்கு
எமது கண்ணீர்ப்
பூக்களைச் சமர்ப்பிக்கின்றோம்
குடும்பத்தினர்.
720, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**விஷேட பல் வைத்திய சேவை**
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்றர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## ஜப்பானிய போர்க் கப்பல் அம்பாந்தோட்டைக்கு வருகை

கொழும்பு, ஓக. 23
ஜப்பானிய கடற்படையின் அமகிரி என்ற நாச காரிப் போர்க்கப்பல் அம்பாந்தோட்டை துறை முகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்துள் ளது. மூன்று நாள்கள் நல்லெண்ணப் பயண மாக வந்துள்ள இந்தக் கப்பலைக் கடற்படை யினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்றனர். அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை விட்டு புறப்பட்டச் செல்ல முன்னர், கடற்படையின் சமுத்ர என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பலுடன் இணைந்து, ஜப்பானிய போர்க் கப்பலான அமகிரி பயிற்சிகளில் ஈடுபடவுள்ளது. (5)

# இலங்கையை சிங்கப்பூராக்கி காட்டுவோம்

## சீனத் தூதுவரின் சபதம் இது

கொழும்பு, ஓக. 23
அடுத்த 15 ஆண்டுகளுக்குள் இலங்கையைச் சிங்கப்பூரா கத் தரமுயர்த்துவதற்கு ஏற்ற வகையில், சீனா தொடர்ந் தும் உதவிகளை வழங்கும் என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் யி சியான்லி யாங் தெரிவித்தார்.
சீனாவின் நன் கொடையில், ஆயிரம் பாடசாலை மாண வர்களுக்கு 1.8 மில்லியன் ரூபா பெறுமதியான பாட சாலைக் கருவிகளை வழங் கும் நிகழ்வு தங்காலையில் நேற்றுமுன்தினம் நடைபெற் றது.
இந்த நிகழ்வில் சீனத் தூது வர் மேலும் தெரிவித்தா வது:
சீனாவின் மிகச் சிறப்பான நண்பன் தான் இலங்கை. இரண்டு நாடுகளுக்கும் இடையிலானநட்பு 70 ஆண் டுகளாகத் தொடர்கிறது. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்குக் கார ணமானஇறப்பர்,அரிசிஉடன் பாட்டை, சீன இலங்கை மக் கள் நன்றாக அறிந்துள்ள னர்.
கடந்த சில ஆண்டுகளாகச் சீனா தனது பன்னாட்டு உத வியில் அதிகளவு பங்கை இலங்கைக்கு வழங்கி வருகி றது. இலங்கையின் உட்கட் டமைப்பு அபிவிருத்தியில் சீனாவுக்குப் பொறுப்பு உள் ளது. இலங்கையர்களுக்கு அபிவிருத்தி முக்கியம். நாட்டை அபிவிருத்தி செய்வ தற்கு அரசுடன் மக்கள் ஒத்து ழைக்க வேண்டும்.
தென்பகுதியில் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை ஆரம் பிக்க இலங்கைக்குச் சீனா உதவும். இளைஞர்களின் தொழில்நுட்ப ஆற்றலை வலுப்படுத்தவும், மீன்பிடி மற்றும் ஏனைய துறைக ளில், தொழில்நுட்ப வசதி களைப் பெருக்கவும் இது உதவும். சீன இலங்கை நட் புறவுச் சங்கத்தின் மூலம், ஆயிரத்து 300 மாணவர்க ளுக்குச்சீனாபுலமைப்பரிசில் வாய்ப்புகளை வழங்குகிறது. இது எதிர்காலத்தில் 2 ஆயிர மாக அதிகரிக்கப்படும்.
தென்பகுதியில் உள்ள மீன வர்களுக்கான வீடுகளை அமைத்துக் கொடுப்பதற் கான திட்டத்தை ஆரம்பிக்க வும் நாங்கள் இணங்கியுள் ளோம். சீனாவின் சங்காய் நகரத்தைப் போன்று, தென் பகுதியை அபிவிருத்தி செய் வதற்கு, சீனா தொடர்ந்து உதவிகளைச் செய்யும். அடுத்த 15 ஆண்டுகளில் இலங்கையைச்சிங்கப்பூரின் நிலைக்கு தரமுயர்த்துவதற் காக சீனா தொடர்ந்து உதவி களைவழங்கும்-என்றார். (5)




# தெற்கைவிடவும் வடக்கு அமைதியாக இருக்கிறது

## வடக்கு ஆளுநர் றெஜினோல்ட் குரே கொழும்பு ஊடகத்துக்கு இப்படித் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 23
தெற்கின் நிலைமைகளை விட யாழ்ப்பாணத்தின் நிலைமை அமைதியாகவே இருக்கின் றது. ஊடகங்கள் வாசகர் களை ஈர்ப்பதற்காக இவற் றைப் பரபரப்பாக்குகின்றன. இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார்.
கொழும்பு ஆங்கில ஊடகத் துக்கு வழங்கிய செவ்வியி லேயே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்த தாவது:
தெற்கில் இடம்பெறுவதற்கு இணையான குற்றச் செயல் களே வடக்கிலும் இடம்பெறு கின்றன. யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்ற சம்பவங்க ளுக்கு ஊடகங்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன.
இந்தியத் திரைப்படங் களின் காரணமாக இளைஞர்கள் தவ றாக வழிநடத்தப்படுகி றார்கள். இளைஞர் கள் இது போன்ற செயல்களில் ஈடுபடுவ தற்கு வெளிநாடுகளி லிருந்து பணம் வருகி றது. பல ஆண்டு களாக போர்ச்சூழலில் வாழ்ந்த யாழ்ப்பாண மக்கள், மீண்டும் அந்த நிலைமையை எதிர்பார்ப்பதாக நான் கருதவில்லை. நாட் டின் ஏனைய பாகங்க ளில் இடம்பெறும் சம் பவங்களைப்போலவே யாழ்ப்பாணத்திலும் இடம்பெறுகின்றன. ஊடகங்கள் வாசகர்க ளைக் கவர்வதற்காக அவற்றைப் பரபரப் பாக்குகின்றன. தெற் கின் நிலைமைகளை விட யாழ்ப்பாணத் தின் நிலைமை அமைதி யாக உள்ளது - என் றார். (5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

இரசாயனவியல் ஆசிரியராகிய
திரு.சு.சுரேஸ்குமார்
BSc(Hons), MBA.PGDE (Merit)
அவர்கள் 19.07.2017 அன்று பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தைப் பெற்றுக் கொண்டதையிட்டு பெருமகிழ் வடைவதுடன் மேன்மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர்வடைய வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:-
சக ஆசிரிய நண்பர்கள்,
வடமாகாணம்.

வாழ்த்துப் பகிர்கின்றோம்
சாவகச்சேரி
புராதன வாரியப்பா சிவன் சந்நிதானத்தில்
இன்று (23.08.2017) புதன்கிழமை
சிவாச்சாரிய அபிஷேகம்
(குரு பட்டமளிப்பு) பெறவுள்ள
சிவஸ்ரீ குணநாதசர்மா கஜேந்திரசர்மா குருக்கள்

அவர்களை வாழ்த்தி அவர் தம் பணி தொடர வாழ்த்துகின்றோம்.
பிரம்மஸ்ரீ இ.ஜனார்தனசர்மா துளசி தம்பதி
தொழில்நுட்பக் கல்லூரி (SLTES)
மட்டக்களப்பு.

விஜயரத சாந்தி வைபவ விழா
(பவள விழா)
அராலி வட்டுக்கோட்டை
துணைவி முருகமூர்த்தி கோயில்
ஸ்தானிக அர்ச்சகர்
பிரம்மஸ்ரீ அமிர்தலிங்கசர்மா
சொர்ணலட்சுமி
தம்பதியினரின் விஜயரத சாந்தி வைபவம் நிகழும் ஏவிளம்பி வருடம் ஆவணி மாதம் 7 ஆம் திகதி (23.08.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற இருப்பதால் உறவினர்கள். நண்பர்கள் குடும்ப சமேதராய் விழாவிற்கு வருகைதந்து தம்பதியினரிடம் ஆசி பெற்றும் தம்பதியினருக்கு ஆசி வழங்கியுமேகுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் - பிருந்தா | - குடும்பம் | (லண்டன்) |
| சிவஸ்ரீ பகீரதசர்மா - சபாநாயகி | - குடும்பம் | (பருத்தித்துறை) |
| சிவஸ்ரீ பத்மநாதக் குருக்கள் விஜிதாம்பாள் | - குடும்பம் | (கிளிநொச்சி) |
| சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் விஜயலட்சுமி | - குடும்பம் | (சீரணி) |
| சிவஸ்ரீ பத்மரூபக் குருக்கள் - லாவண்யா | - குடும்பம் | (சங்கானை) |

துணைவி முருகமூர்த்தி கோயில்,
அராலி, வட்டுக்கோட்டை.
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# சிரந்திக்கு சிக்கல்

## ஆடம்பர வீடு வாங்கிய விவகாரத்தில்



கொழும்பு, ஓக. 23 முன்னாள் முதல் பெண்மணி சிரந்தி ராஜபக்சவால் 300 மில்லியுன் ரூபா பணத்தில் ஆடம்பர வீடு கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பில் பொலிஸ் நிதி மோசடி விசார ணைப் பிரிவின் விசாரணைகள் முடிவடைந்துள்ளது. ஆவணங்கள் நடவடிக்கைக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டுள் ளது.

கொழும்பில் 300 மில்லியன் ரூபாவுக்கு சிரந்தி ராஜபக்ச வீட்டினைக் கொள்வனவு செய்துள்ளார். பணம் தூய்மையாக்கல் சட்டத்தின் கீழ், சிரந்தி ராஜபக்சவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு, நிதி மோசடி விசார ணைப் பிரிவினால் கோப்பு கையளிக்கப் பட்டுள்ளது.

இந்த வீடு மற்றும் காணியைக் கொள்வ னவு செய்த சம்பவத் துடன், லொக்குவித் தான என்ற நபரும் தொடர்புபட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. நிதி மோசடி விசா ரணைப் பிரிவு சிரந்தி ராஜபக்சவிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது தமது உறவினரிடம் கடன் பெற்றே வீட்டைக் கொள்வ னவு செய்ததாகக் கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ச 2000 ஆம் ஆண்டு தங்கியிருந்த இந்த வீடு, சிரிலிய சவிய, நீலப்படை மற்றும் தருனயன்ட ஹெடக் ஆகிய அமைப்புக ளின் விலாசமாகப் பயன்படுத்தப்பட்டுள் ளது. தற்போது களஞ்சிய அறை யாகப் பயன்படுத்தப் படுவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த வாரம் சிரந்தி ராஜபக்சவிடம், தாஜுதீன் கொலை விவகாரத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் வாக்குமூலம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (5)

---

எங்கள் அன்புத் தெய்வத்திற்கு
ஆண்டுகள் பதினொன்று



அமரர்
**சுப்பிரமணியம் பசுபதி**

தோற்றம் 29.11.1935
மறைவு 26.08.2006

திதி: துதியை
23.08.2017 (புதன்கிழமை)

**ஆண்டுகள் பதினொன்று ஆனதுவோ அப்பா!**
**நீங்கள் அருகிருந்தெம் மனம் நிறைந்த**
**ஆதரவுக்கேங்குகின்றோம்!**
**வழிகாட்டும் ஒளியாய் - எம் விழியாய்**
**உம் வார்த்தைகள் எம்மோடு என்றும் வாழும்**
**வணங்குகின்றோம்.**

'பசுபதியம்'
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்



## திருமதி தவமணி பாலசுந்தரம்

| அன்னை மடியில் | ஆண்டவன் திருவடியில் |
|---|---|
| 07.12.1945 | 22.08.2017 |

பாலாவித் தெரு பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி பாலசுந்தரம் 22.08.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - தங்கமுத்து தம்ப தியரின் அன்பு மருமகளும் பாலசுந்தரத்தின் அன்பு மனைவியும் இலங்கேஸ் வரன்(கனடா), யசோதா(சுவிஸ்), பார்த்திபன்(கடுகாஸ்தோட்டை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரிப்சலா(கனடா), சிவயோகநாதன்(சுவிஸ்), சியாமளா (கடு காஸ்தோட்டை) ஆகியோரின் அன்பு மாமியாரும் மதுஷன், சயிதா, பிரஜித் ஆகி யோரின் அன்பு அம்மம்மாவும் கிரிஷ்மி, லசாந் பிரவினா, நிரஷ்கா, அனுஷ்கா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் இராஜேஸ்வரி, செல்வரட்ணம், சுந்தரலிங் கம், பாக்கியலஷ்மி, சாவித்திரி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரி யும் கோபாலசுந்தரம், கலாதேவி, ராஜினிதேவி, சிவக்கொழுந்து, குலராணி ஆகி யோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.08.2017) வியாழக்கிழமை பி.ப 4.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக ஊறணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பாலாவித்தெரு, பொலிகண்டி,**
**வல்வெட்டித்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 226 2501/ 077 338 2610**

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின்
இணைய பொருளாளர்
**வி.கேசவன்** அவர்களின் சகோதரரும்,
யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட 2 ஆம் வருட
மாணவனுமாகிய

**செல்வன் வி. விந்துஜன்**

அவர்கள் 20.08.2017 அன்று திடீர் மரணம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைந்தோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருடன் துயர்பகிர்ந்து கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


**தே.தேவானந்த்**
**கௌரவ தலைவர்,**
**யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்**
**72, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.**

---

## மரண அறிவித்தல்கள்

### முரேஷ் இராஜேந்திரா (Muren)

( பொதுமுகாமையாளர், SP Matpol (Pvt) Ltd)



வட்டுக்கோட்டையைப் பிறப்பிட மாகவும் தெஹிவளையை வசிப்பிட மாகவும் கொண்ட முரேஷ் இராஜேந்திரா 17.08.2017 வியாழக்கிழமை கர்த்தருக் குள் நித்திரை அடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை கள் இன்று (23.08.2017) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று வட்டுக்கோட்டை தென்னிந் திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக் கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கல்லூரி ஒழுங்கை,**
**வட்டுக்கோட்டை.**

தகவல்: **ரமேஷ் இராஜேந்திரா**
**(சகோதரர்) 077 9590 566**

---

### சோமசுந்தரம் முத்தம்மா (கமலம்)



யூனியனடி இமையா ணன், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பி டமாகவும் கொண்ட சோமசுந்தரம் முத்தம்மா 21.08.2017 திங்கட் கிழமை காலமாகி விட் டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.08.2017) புதன்கிழமை மு.ப.11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 09 . 1940



மறைவு 03 . 09 . 2016

## சுந்தரம்பிள்ளை விக்னேஸ்வரன்

*துதியை - 23.08.2017*

**ஆண்டு ஒன்று நகர்ந்து மறைந்திடினும்**
**ஆறுமோ வெந்துயர் - அன்பு அப்பாவே**
**மாண்டுவிடவில்லை நீங்கள் எம்மனங்களில்**
**மறையாது என்றும் வாழ்கிறீர்கள் - எம்**
**உயர்வுக்கு உன்னத வழிகாட்டி - வாழ்வை**
**அர்ப்பணித்த பாசத்தின் தீபமே**
**உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களில்**
**என்றும் நிலைத்து வாழும்**

**வேம்பன் வீதி,**
**உரும்பிராய் தெற்கு,**
**உரும்பிராய்.**

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பேராமக்கள்.**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# எந்த விசாரணையும் நடக்கப்போவதில்லை

முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச குடும்பத்தினருக்கு எதிரான பரபரப்பான விசாரணை, மத்திய வங்கிப் பிணை முறி விவகாரத்தினால் அமைச்சர் ரவி கருணாநாயக்க பதவி விலகல் என்று தெற்கில் நடந்துவரும் தடாலடிகளுக்கு மத்தியில் தமிழ், முஸ்லிம் மக்கள் தொடர்பிலான பல விடயங்கள் அமுங்கிப்போய்விடுகின்றன. குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை வழங்கிய வாக்குறுதிகள் தொடர்பில் அது எந்தக் கவனமும் அற்றிருப்பது குறித்து தெற்கில் இப்போது எவருக்கும் எந்தக் கவலையும் இல்லை. அது பற்றிக் குரல் கொடுப்பதற்கும் அவர்களுக்கு நேரமில்லை.

வெளிநாட்டு நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்குத்தொடுநர்களையும் இணைத்துத் தாம் உருவாக்குவதாக வாக்களித்த, போர்க்குற்ற விசாரணைக்கான கலப்பு நீதிமன்றங்களை அமைப்பதில் கொழும்பு எந்த அக்கறையும் காட்டவில்லை. அது மட்டுமல்ல, தானும் இணை அனுசரணையாளராக இருந்து இலங்கை நிறைவேற்றிய அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்ட பல விடயங்கள் மீது கொழும்பு கிஞ்சித்தும் கவனம் செலுத்தவில்லை.

தற்போதைய களேபரங்களும், பேரங்களும், இழுபறிகளும், குழிபறிப்புகளும் இப்போதைக்கு ஓயும் போலத் தெரியாத நிலையில், இந்த விடங்களின் மீதான கவனமும் இப்போதைக்கு வரப்போவதில்லை என்று உறுதியாகத் தெரிகிறது. புதிய அயலுறவு அமைச்சராகப் பதவியேற்ற திலக் மாரப்பன, பதவியைப் பொறுப்பேற்ற கையோடு ஆற்றிய உரையில் போர்க்குற்ற விசாரணைக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளிநாட்டு நீதிபதிகள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். ஐ.நா. தீர்மானத்திற்கு முற்றிலும் மாறான அவரது கூற்று இங்கு பேசுபொருளாகவே மாறவில்லை.

2015ஆம் ஆண்டு பதவிக்கு வந்ததும், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் போர்க்குற்ற விசாரணைக்கு கலப்பு நீதிமன்றம் ஒன்றை உருவாக்குவதற்கான தீர்மானத்தைக் கொழும்பு அரசு ஏற்றுக்கொண்டது. ஆனால், அரசதலைவரான மைத்திரிபால சிறிசேன அதனை நிராகரித்தார். நாட்டை ப்பயங்கரவாதத்திடம் இருந்து மீட்டெடுத்த படையினரை ஒருபோதும் காட்டிக்கொடுக்கமாட்டேன் என்று அவர் பலதடவைகள் சிங்கள மக்களுக்கு உறுதி வழங்கினார்.

அவரது உறுதியான பிடியைத் தொடர்ந்து இந்த விடயத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் மெல்லப் பின்வாங்கினார். இலங்கையில் இதுபோன்ற கலப்பு நீதிமன்றங்களுக்கு வாய்ப்பு இல்லை என்று கூறி ஐ.நாவில் வழங்கிய வாக்குறுதியிலிருந்து நழுவினார். அவரைத் தொடர்ந்து இந்த விடயத்தில் கொஞ்சமாவது உறுதியாக இருந்து வந்தவரான முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சரும் தற்போதைய நிதி அமைச்சருமான மங்கள சமரவீரவும் பின்வாங்கினார்.

போர்க்குற்ற விசாரணை என்பதற்கு முன்னர் உண்மை அறியும் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும் என்று ஐ.நாவிற்கும் வெளிநாடுகளுக்கும் பரப்புரை செய்தார்கள். போர்க்குற்ற விசாரணை தொடர்பான அழுத்தங்களில் இருந்து தப்பும் ஓர் உத்தியாக இதனை அவர்கள் கைக்கொண்டார்கள். ஆனால், இன்று வரையில் அத்தகைய ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கான எந்த முயற்சியும் நடக்கவில்லை. இப்போது நீதியானதொரு போர்க்குற்ற விசாரணைக்கான வாய்ப்பும் இல்லை என்பதை அயலுறவுத் துறை அமைச்சர் தெளிவுபடுத்திவிட்டார்.

இன்றிருக்கும் அரசியல் சூழ்நிலையில், உண்மையை அறியும் ஆணைக்குழு பற்றிக் கவலைப்படுவதற்கும் அரசுக்குள் எவரும் இல்லை. ஆக அத்தகைய ஆணைக்குழுவும் இன்றி, போர்க்குற்ற விசாரணையும் இன்றி காலங்கடத்தியபடியே இந்த ஆட்சி கடந்துபோய்விடும் என்பது தெளிவாகிறது.

கொழும்பு அரசுகள் இப்படிக் காலம் கடத்தும் உத்தியுடனேயே செயற்படும் என்பதை வரலாற்றுப்பாடங்களில் இருந்து கற்றுச்சொன்னபோதெல்லாம், அதனை மறுத்துரைத்து உலக நாடுகள் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளும் என்று சொன்னவர்களே இப்போது பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள்.

# ஓ.பி.எஸ். உத்தமர் அல்லர்

O Panneerselvam @OfficeOfOPS · Jun 11
இன்றோடு அஇஅதிமுக புரட்சித்தலைவி அம்மா அணியில் இணைப்புக்காக உருவாக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு கலைக்கப்படுகிறது.
61 102 409

O Panneerselvam @OfficeOfOPS · Aug 3
இன்று நடைபெறுகின்ற ஆட்சி அனைத்து நிலைகளிலும் ஊழல் நிறைந்த ஆட்சியாகவே தான் நடைபெறுகிறது. இது அம்மாவிற்க்கு செய்கின்ற மாபெரும் துரோகம்.
93 44 264

O Panneerselvam @OfficeOfOPS · Aug 3
Replying to @OfficeOfOPS
மக்கள் எங்கள் பக்கம். அஇஅதிமுக தொண்டர்களும் எங்கள் பக்கம்.

122 சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் 2417 நிர்வாகிகள் மட்டுமே அவர்கள் பக்கம்.
12 16 79


O Panneerselvam @OfficeOfOPS · Aug 3
122 எம்.எல்.ஏ க்கள் கூவத்தூரில் கட்டாயப்படுத்தப்பட்டு எப்படி ஆதரவு கொடுத்தார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

பிரகாஸ்

தமிழகத்தின் ஆளும்கட்சியான அ.தி.மு.கழகத்தின் இரு அணிகளும் மீண்டும் இணைந்துள்ளன. இந்த அணிகள் இணைகின்றன என்பதைவிட பதவியின் அடிப்படையில் அவை உடன்படிக்கை செய்து கொள்ளுகின்றன என்று குறிப்பிட்டால் அது இன்னும் சிறப்பாக இருக்கும். அந்த அணிகளில் உள்ளவர்கள் கடந்த சில வாரங்களாக வெளிப்படுத்திய தகவல்களே அதற்குத் தக்க சான்று.

### அ.தி.மு.கவில் ஏற்பட்ட பிளவு

அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளராக ஜெயலலிதாவே செயற்பட்டு வந்தார். அவர் தமிழக முதலமைச்சராகவும் இருந்தார். அவர் இருக்கும்வரை அ.தி.மு. கழகத்தில் எந்தப் பிரச்சினையும் வரவில்லை. ஜெயலலிதாவின் மறைவின் பின்னர் ஓ.பன்னீர்செல்வம் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். எனினும் பொதுச் செயலாளர் பதவி வெற்றிடமாகவே இருந்தது. சசிகலா பொதுச்செயலாளராகப் பெயரிடப்பட்டார். சசிகலா பொதுச்செயலாளராக பொறுப்பேற்ற பின்னர், கட்சியும் ஆட்சியும் ஒருவரிடம்தான் இருக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்றன. இதனால் ஓ.பி.எஸ்ஸிடம் இருந்த முதல்வர் பதவியை சசிகலாவுக்கு கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது. பதவி விலகிய அன்றைய தினமே ஓ.பன்னீர்செல்வம் சசிகலா மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவிட்டு கட்சியில் இருந்து பிரிந்து சென்றார்.



### ஓ.பி.எஸ். வைத்த கோரிக்கைகள்


கட்சியில் இருந்து பிரிந்து சென்ற மறுநாளே, ஜெயலலிதா சிகிச்சை பெற்ற அப்பலோ மருத்துவமனைக்குள் தன்னை உள்ளே அனுமதிக்கவில்லை. இதனால் ஜெயாவின் சாவில் சந்தேகம் உள்ளது. இதுதொடர்பில் முழுமையான விசாரணை வேண்டும் என்று தெரிவித்தார்.

ஜெயலலிதா மறைந்த பின்னர் சுமார் ஒரு மாத காலம் வரை பன்னீர்செல்வமே முதல்வராக இருந்தார். அந்தக் காலப்பகுதியில் ஜெயாவின் சாவு குறித்து ஏன் அவர் எவ்வித விசாரணைகளுக்கும் உத்தரவிடவில்லை?

கட்சியும் ஆட்சியும் ஒரு குடும்பத்திடம் செல்ல வாய்ப்புள்ளது என்று தெரிந்தும், எதற்காக அவர் பொதுச்செயலாளர் பதவிக்கு சசிகலாவைப் பரிந்துரைத்தார். மூத்த தலைவர்களில் ஒருவர் என்ற அடிப்படையில் பிறிதொருவரைப் பரிந்துரைத்திருக்கலாமே?

**சிறையில் சின்னம்மா**

சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்டோர் குற்றவாளிகள் என்று தீர்ப்பு வருகிறது. பெங்களூர் சிறையில் அடைக்கப்படுகிறார்சசிகலா. பின்னர்தினகரன் மீதும் அவர் தொடர்பான வழக்குகளில் பிடி இறுகிறது. இதனால் சசிகலாவையும், தினகரனையும் நீக்கி வைத்துவிட்டு, ஆட்சியை அமைக்கமுடிவெடுக்கப்பட்டது. தேர்தல் ஆணையத்துக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் தினகரனும் சிறைக்குச் செல்கிறார். இதன் பின்னர் ஓ.பி.எஸ். (ஓ.பன்னீர்செல்வம்), இ.பி.எஸ். (எடப்பாடி பழனிச்சாமி) இடையிலான மோதல்கள் உக்கிரம் பெறுகின்றன. ஒவ்வொரு தரப்பும்எதிர்த்தரப்புமீதுவிமர்சனங்களை வாரி இறைத்தன.



**மீண்டும் தினகரன்**

தேர்தல் ஆணையத்துக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் தினகரனுக்குப்பிணை கிடைக்கிறது. அவர் சிறையில் இருந்து வெளியே வந்ததும் 16 சட்டமன்ற உறுப்பினர்கள் அவரின் பக்கம் தாவுகின்றனர். இதனால் சட்டசபையில் தனது பெரும்பான்மைப்பலத்தைஇழக்கவேண்டிய சிக்கல் எடப்பாடி அரசுக்கு ஏற்பட்டது.

**ஆரம்பமானது பேச்சு**

பெரும்பான்மையைத் தக்கவைக்க வேண்டுமாயின், சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதே ஒரேவழி. அதற்காக தினகரனுடன் இணைந்தால் மக்கள் அதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்என்றுஎண்ணிய எடப்பாடி, ஓ.பி.எஸ். தரப்பினரை தம்முடன் இணைத்துக் கொள்ள முடிவு செய்தார். இந்தப் பின்னணியில் இணைப்புப் பேச்சுக்கள் ஆரம்பமாயின. 'அம்மா' புராணத்தை வைத்து தனது அரசியல் இருப்பை உறுதிப்படுத்தினார் ஓ.பி.எஸ். அ.தி.மு. கழகத்தின் முக்கிப் புள்ளியாக மாறுவதற்கு தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை கச்சிதமாகப் பயன்படுத்த ஆரம்பித்தார் ஓ.பி.எஸ். அவரதுகோரிக்கைகள்நிராகரிக்கப்பட்டதை அடுத்து பேச்சு முறிவுற்றது.




**ஊழல் அரசுடன் ஒன்றுபடலாமா?**

இந்த மாதத்தின் ஆரம்பத்தில் கூட ஓ.பி.எஸ், எடப்பாடி அரசு மீது எக்கச்சக்கமான விமர்சனங்களை முன்வைத்தார். 'இன்றுநடைபெறுகின்ற ஆட்சி, அனைத்து நிலைகளிலும் ஊழல் நிறைந்த ஆட்சியாகவே உள்ளது. இது அம்மாவுக்கு செய்கின்றமாபெரும்துரோகம்'என்று இந்தமாதம்மூன்றாம் திகதி வெளியிட்ட ருவிற்றர் பதிவு ஒன்றில் ஓ.பி.எஸ். குறிப்பிட்டார். இங்குஅவர்அம்மாஎன்றுகுறிப்பிட்டது முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவையே.

கடந்த வெள்ளிக்கிழமை இணைப்புக் குறித்து பேச்சு மீண்டும் ஆரம்பித்து வெற்றிபெறும் நிலைக்குச்சென்றது. அதன் தொடர்ச்சியான விவாதங்கள் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து அன்றைய தினமே இரண்டு அணிகளும் இணைந்து விட்டன. எனினும், இந்த மாதஆரம்பத்தில்ஜெயலலிதாவுக்குத் துரோகம் இழைக்கின்ற ஊழல் ஆட்சியாக இருந்த அ.தி.மு.க., எடப்பாடி அரசு, கட்சியில் முக்கிய பதவி கிடைக்கிறது என்று தெரிந்ததும் ஓ.பி.எஸ்ஸுக்குஜனநாயகஆட்சியாகமாறிவிட்டது.

பொதுச் செயலாளர் (தற்போது வழிகாட்டல் குழுவின் ஒருங்கிணைப்பாளர்), துணைமுதல்வர், நிதிஅமைச்சர் ஆகிய பதவிகள் தனக்கும், மொழி அபிவிருத்தித்துறை அமைச்சு தனது சகாவான பாண்டியராஜனுக்கும் கிடைக்கிறது என்றதும், ஊழல்வாதியான எடப்பாடி பழனிச்சாமி ஓ.பி.எஸ்ஸின் பார்வையில் பரிசுத்தவாதியாக மாறிவிட்டார். இரு குழுக்க ளும் இணைந்த நேற்றுமுன்தினம், தலைமைக்கழகத்தில்உரையாற்றுகையில் ஓ.பி.எஸ். தம்மையும், எடப்பாடியின் தரப்பினரையும்ஒருதாய்பிள்ளைகள் என்று குறிப்பிட்டிருந்தார். இதுவரை நடந்த சம்பவங்களுக்கும் 'ஒருதாய் பிள்ளைகள்'என்றகூற்றுக்கும்என்ன தொடர்பு இருக்க முடியும்?

இணைப்பு நடவடிக்கையின் போது உரையாற்றுகையில், ''அனைவரும் ஒன்றிணைந்து முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வழியில் தமிழகத்தை ஆட்சிசெய்வோம்'' என்று தற்போதைய முதல்வர் எடப்பாடி குறிப்பிட்டார். ஓ.பன்னீர் செல்வமும் அவ்வாறான ஒரு கருத்தை வலியுறுத்தினார். ஜெயலலிதா ஒன்றும் தமிழகத்துக்கு பொற்காலமான ஆட்சியை வழங்கவில்லை. அவர் செய்ததும் ஊழல் ஆட்சியே.



**இனியும் ஊழலா?**

இணைப்பு நடவடிக்கையின்போது உரையாற்றுகையில், "அனைவரும் ஒன்றிணைந்து முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வழியில் தமிழகத்தை ஆட்சிசெய்வோம்" என்று தற்போதைய முதல்வர் எடப்பாடி குறிப்பிட்டார். ஓ.பன்னீர்செல்வமும்அவ்வாறான ஒரு கருத்தை வலியுறுத்தினார். ஜெயலலிதா ஒன்றும் தமிழகத்துக்கு பொற்காலமான ஆட்சியை வழங்கவில்லை. அவர் செய்ததும் ஊழல் ஆட்சியே!

இதனால்தான் அவருக்குநான்கு வருடங்கள்சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டது. அதில் ஒரு பகுதியாகவே சசிகலா சிறையில்உள்ளார். அப்படியானால், ஜெயலலிதாவின் வழியில் ஊழல் முறையில்தான் இவர்கள் ஆட்சிசெய்யப்போகின்றனரோ?

ஈழத் தமிழர்களின் அதிகார வர்க்கங்கள்தான்ஊழல்வாதிகள், பித்தலாட்டக்காரர்கள் என்றால், சோழத் தமிழர்களின்நிலையும்அவ்வாறுதான்போலிருக்கிறதே!




## வடக்கு மாகாண சபையின் பதவி நீடிப்பை மக்கள் ஏற்கார்

பதவிக்காலம் முடிவடையும் மாகாண சபைகளின் ஆயுட் காலத்தைநீடிப்பது தொடர்பானபேச்சுக்கள்கட்சித்தலைவர்கள்மட்டத்தில் இடம்பெற்றுள்ளன. இதற்கு எதிரான கருத்துக்களே அங்கு மேலோங்கிக் காணப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு செம்ரெம்பர் மாதத்துடன் முடிவடைகின்றது. தற்போதுமாகாணசபையில் அரங்கேறிக் கொண்டிருக்கும் நிகழ்வுகள் சகிக்க முடியாதனவாகக் காணப்படுகின்றன. முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிறரது கருத்துக்களைச் செவிமடுக்காது தமது விருப்பத்துக்கு ஏற்றவாறு நடந்துகொள்கின்றார். இதுவே பிரச்சினைகள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்து விடுகிறது.

வடபகுதி மக்கள் மாகாண சபையின்செயற்பாடுகளில்அதிருப்தியடைந்தநிலையில்காணப்படுகின்றனர். தமது அபிலாசைகளுக்கு ஏற்றாற்போன்று மாகாண சபை செயற்படவில்லை என்பது இவர்ளின் ஆதங்கமாகும். முதலமைச்சரின்தவறானநடவடிக்கைகளும் மாகாணசபைஉறுப்பினர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளும் மக்களை வெறுப்பின் உச்ச நிலைக்குக்கொண்டுசென்றுவிட்டன. மாகாண சபை எமக்குத் தேவைதானா? என்றுகூட அவர்கள்சிந்திக்கஆரம்பித்துவிட்டனர். இந்த நிலையில் பதவிக்காலம் முடிவடைந்தமாகாணசபைகளது ஆயுட்காலத்தைமேலும்இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பது தொடர்பான செய்திகள் வெளிவந்திருக்கின்றன. இதை வடபகுதி மக்கள் ஒரு போதுமே விரும்பமாட்டார்கள்.

ஏனென்றால், அவர்கள்அந்தஅளவுக்கு வடக்கு மாகாண சபை மீது கடுப்பில் உள்ளனர்.

வடக்கு மாகாண சபையைப் பொறுத்தவரையில்அதன்பதவிக்காலம் முடிவடைந்ததும், தேர்தலைநடத்துவதேஉசிதமானது. எந்தக்காரணம் கொண்டும்கால நீடிப்பை மக்கள் ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள்.

மு.காராளசிங்கம்,
உரும்பிராய்.



# ஓ.பி.எஸ்ஸுக்குக் கூடுதல் அமைச்சுக்கள்

சென்னை, ஓக. 23
தமிழகத்தின் துணை முதல்வராக பதவியேற்றுள்ள ஓ.பன்னீர்செல்வத்துக்கு கூடுதலாக நான்கு அமைச்சுக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது குறித்து தமிழக ஆளுநர் மாளிகை நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில், "தமிழக துணை முதல்வராக பதவியேற்றுள்ள ஓ.பன்னீர்செல்வத்துக்கு கூடுதலாக திட்டமிடல், சட்டமன்றம், தேர்தல், நுழைவிசைவு போன்ற அமைச்சுக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
நிதித்துறை ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால் அமைச்சர் ஜெயக்குமாருக்கு முன்பு அவர் அமைச்சராக இருந்த மீன்வளத் துறை ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சேக் ஹசீனாவை கொல்லத்திட்டமிட்ட 10 பேருக்குத் தூக்கு



டாக்கா, ஓக. 23
பங்களாதேஷ் தலைமை அமைச்சர் ஷேக் ஹசீனாவை கொல்ல முயன்ற குற்றச்சாட்டில் 10 பேருக்கு தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பிட்டது அந்த நாட்டு உச்ச நீதிமன்றம்.
சேக் ஹசீனா கடந்த 2000ஆம் ஆண்டில் தனது சொந்த ஊரான கோபால்கஞ்ச் பகுதியில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேச ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது, அந்த நாட்டில் தடை செய்யப்பட்டுள்ள ஹர்க்கத்துல் ஜிஹாத் அல் இஸ்லாமி அமைப்பினர் அவரை வெடிகுண்டுகளின் மூலம் கொல்ல முயன்றனர்.
பாதுகாப்பு படையினர் இந்த கொலை முயற்சியை முறியடித்து உரிய நேரத்தில் வெடிகுண்டுகளை கைப்பற்றி செயலிழக்க வைத்தனர். இந்த கொலை முயற்சி தொடர்பாக சுமார் 25 பேர்மீது டாக்காவில் உள்ள விரைவு நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது.
இதில் 10 பேருக்கு தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பிடப்பட்டது பங்களாதேஷ் உச்சநீதிமன்றம். (ம)

# 200 ஆயுததாரிகள் சிரியாவில் சாகடிப்பு


டமஸ்கஸ், ஓக. 23
சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு எதிராக ரஷ்யா நேற்றுமுன்தினம் நடத்திய வான்வழித் தாக்குதலில் சுமார் 200 ஆயுததாரிகள் கொன்று குவிக்கப்பட்டனர்.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் விடுபட்டுள்ளது. சிரியாவை ஐ.எஸ். அமைப்பிடம் இருந்து மீட்கும் போர் தற்போது கடும் முனைப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள டெயிர் அல்ஜோர் நகரில் ரஷ்யா நேற்றுமுன்தினம் கடும் தாக்குதல்களை நடத்தியது. இதில் 200 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)





# ஆட்சியைக் கவிழ்ப்பதில் தினகரன் கடும்முனைப்பு

சென்னை, ஓக. 23
தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வமும், தற்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியும் இணைந்துள்ள நிலையில், இவர்களால் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளவரான டி.டி.வி.தினகரன் தனது ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து ஆட்சியைக் கவிழ்க்கக் கடும் முனைப்புக் காட்டி வருகிறார்.
அ.தி.மு.கழகத்தில் இருந்து தினகரனையும், சசிகலாவையும் நீக்கிவைத்துவிட்டு ஆட்சியை அமைப்பது என்று ஓ.பன்னீர்செல்வம் மற்றும் எடப்பாடி பழனிச்சாமி இருவரும் முடிவெடுத்துள்ளனர். அவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள தினகரன் அ.தி.மு. கழகத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்பதிலும், எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அரசைக் கவிழ்க்கவேண்டும் என்பதிலும் தீவிரமாக உள்ளார். அவருக்கு 18 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக உள்ளனர்.
இவர்கள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஜெயலலிதாவின் சமாதிக்குச் சென்று அங்கு தியானத்தில் ஈடுபட்டனர். நேற்றுக்காலை ஆளுநர் வித்யாசாகர் ராவைச் சந்தித்து, முதலமைச்சர் எடப்பாடிக்கு தாம் கொடுத்த ஆதரவைத் திரும்பப் பெறுகிறோம் என்றும், அவரின் ஆட்சியைக் கலைத்து உத்தரவிட வேண்டும் என்று வலியுறுத்தினர். பின்னர் அவர்கள் அனைவரும் ஒரு தனியார் விடுதிக்குக் கொண்டுசெல்லப்பட்டு (கூவத்தூர் விடுதிக்குக் கொண்டு சென்றதைப்போல்) தங்க வைக்கப்பட்டனர்.
அங்கு ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு பல்வேறு ஆலோசனைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



முழுமையான சூரிய கிரகணம் நேற்றுமுன்தினம் ஏற்பட்டது. உலகெங்கிலும் உள்ள சுமார் 30 கோடி மக்கள் பார்க்கக்கூடிய வகையில் இந்தச் சூரிய கிரகணம் இருந்தது. அமெரிக்காவின் 14 மாகாணங்களில் சூரிய கிரகணம் தென்பட்டது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் நின்றவாறு கிரகணத்தைப் பார்த்தார். பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் இந்தப் படத்தை வெளியிட்டது. (ம)

# டோக்லாமில் மீண்டும் பதற்றநிலை

காத்மண்டு, ஓக. 23
இந்தியா-பூட்டான்-சீனா ஆகிய நாடுகளின் எல்லைகள் சந்திக்கும் இடம் சிக்கிம். இந்தப்பகுதியில் உள்ள டோக்லாம் என்ற இடம் தமக்குத்தான் சொந்தம் என்று மூன்று நாடுகளும் வலியுறுத்துகின்றன. இந்த விவகாரத்தில் இந்தியா, சீனா நாடுகளிடையேமோதல் உச்சம் தொட்டுள்ள நிலையில், இரு நாடுகளின் சிப்பாய்களும் தமக்கிடையே முறுகல் நிலையைப் பேணிவருகின்றனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்தப் பகுதியில் சாலை அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தது சீனா. இந்தியா எதிர்ப்புத் தெரிவித்தது. இந்தியாவின் எதிர்ப்பைக் கண்டுகொள்ளாத சீனா, இந்திய இராணுவத்தின் இரண்டு பதுங்கு குழிகளை அகற்றி விட்டு சாலை அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தது. இதையடுத்து ஏராளமான சிப்பாய் களை அங்கு குவித்தது இந்தியா. இதையடுத்தே இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் சிக்கிம் விவகாரத்தில் பதற்றம் தோற்றம் பெற்றது. சிக்கிம் விவகாரத்தில் இந்தியா தனது சிப்பாய்களை திரும்பப் பெறவேண்டும் என்று சீனா பல தடவை வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

புதன் பொய்கை
23 ஓகஸ்ட் 2017 புதன்கிழமை

**பொன் மொழி**

நல்லவராய் இருப்பது நல்லதுதான். ஆனால் நல்லது கெட்டது தெரியாத நல்லவராய் இருப்பது ஆபத்தானது.

பெர்னாட்ஷா

**இனிது இனிது ஏகாந்தம் இனிது என்று பாடினாள் ஔவைப்பாட்டி. இங்கோ கொடுமை கொடுமை ஏகாந்தம் கொடுமை. அதனிலும் கொடுமை முதுமையில் ஏகாந்தம் என அழுத்திக் கூறியது நாடகம்.**



## தனிமையின் கனிவற்ற துயர வெ(ஒ)ளி

# 'ஏகாந்தம்'



சி.மௌனகுரு
(முன்னாள் பேராசிரியர்)

நாடகம் செய்வது என்பது இக்கால கட்டத்தில் மிகவும் சிரமமான காரியம். ஆட்பலம் மிகுந்த பல்கலைக்கழகங்கள், கல்வியியற்கல்லூரிகள், பாடசாலைகள் போன்ற அறிவுசார் கட்டமைப்புகளில் இவை சாத்தியப்படக்கூடும். ஆற்றுகைக்கு ஆட்களைத் தேடிப்பிடித்தல், ஒழுங்கமைத்தல், ஒன்றாகக் கூட்டுதல் என்பன மிகக்கடினமான கைங்கரிங்கள். இத்தனை சவால்களிடையேயும் வெளியே நாடகம் செய்பவர்கள் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள்.

அந்தவகையிலே 'செயல்திறன் அரங்க இயக்கம்' என ஓர் நாடகக் குழுவை நிறுவி பலகாலமாக நாடகப் பண்பாட்டை யாழ்ப்பாணத்தில் நிலை நிறுத்த முயன்று வருகிறார் தே.தேவானந்த். என்னோடு என்றும் நல்லுறவு பேணுபவர். என்னை ஆசிரியராகக் கனம் பண்ணி வருபவர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நாடகமும் அரங்கியலும் பயின்றவர். அங்கு சிலகாலம் விரிவுரையாளராகவும் கடமை புரிந்தவர்.

### நாடகத் திருவிழா

கடந்த 11 ஆம் திகதி வட மாநிலத்தில் 12ஆம் மற்றும் 13 ஆம் வகுப்புகளில் நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கருத்தரங்கும் பயிற்சிப்பட்டறையும் நடத்த என்னையும் ஓர் வளவாளராக தேசிய கல்வி நிறுவனம் அழைத்திருந்தனர். அந்தசந்தர்ப்பத்திலே நல்லூர்த் திருவிழா ஆரம்பமாகியிருந்தது.

வழமை போலவே இந்த ஆண்டும் நல்லூர் திருவிழாவைக் கண்ணுற்று வீடு செல்லும் பக்தர்கள் நாடகமும் பார்த்துச் செல்லட்டும் என்ற எண்ணத் தொனிப்போடு செயல்திறன் அரங்க இயக்கத்தினர் நடத்தும் நாடகங்கள் பலவற்றை நல்லூர்க் கோவிலுக்கு அருகிலுள்ள தமது அரங்க வளாகத்தில் மேடையிட்டிருந்தனர். எனக்கும் நாடகங்களைப் பார்க்கும் சந்தர்ப்பத்தை நல்லைக் கந்தன் அருளினான் என்றுதான் சொல்லவேண்டும்.

11 ஆம் திகதி செயல் திறன் அரங்க இயக்க வளாகம் செல்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது. என்ன சொல்ல ரம்மியமான மாலைப்பொழுது வானத்தைக் கருமை கொண்டு அலங்கரிக்க இருள் கவியத் தொடங்கியிருந்தது. நானும் துஜனும் நேர காலத்தோடு சென்றுவிட்டோம். செயல்திறன் அரங்க உறுப்பினர்களும் தேவானந்தும் அகமும் முகமும் மலர வரவேற்றனர். நேரகாலத்தோடு சென்றது நன்றாகப்போயிற்று. அவர்களின் ஆரம்ப நடவடிக்கைகளையும் அவதானிக்க முடிந்தது.

### அரங்கியல் அழகு

அழகானதும் பல பாணியிலான நாடகங்கள் மேடையிடக்கூடியதுமான பன்முகத்தன்மை கொண்ட மேடையொன்றை அமைத்துள்ளனர். அதன் பின்னணியில் உள்ளூர் பண்பாட்டைக்காட்டும் விதத்தில் அலங்காரங்கள் அமைந்திருந்தன. அவை பனைமட்டை, தென்னை ஓலையின் பயனுறுதி கொண்டு செய்யப்பட்டிருந்தன. நவீனமும், மரபும் இணைந்த ஓர் உள்ளூர் மேடைக்குமுன்னால் அமர்ந்திருந்த உணர்வு ஏற்பட்டது. அதுவே மனதுக்கு ஒரு இனிதான மகிழ்வுறலைத் தந்தது. அங்கத்தவர்கள் மிகச் சுறுசுறுப்பாக நாடக ஒலியமைப்பு. ஒளியமைப்புப் பணிகளுடன் நாடக மாந்தருக்கான ஒப்பனைகளையும் ஒருவருக்கொருவார் பகிர்ந்து செய்து கொண்டிருந்தனர். அவர்களின் பல்துறை ஆற்றலை வியப்பின் ஆவலோடு நேரில் கண்டேன்.

### நாடக மாந்தர்களின் கதையாடல்

வழமையாக 7 மணிக்கு நாடகம் ஆரம்பமாகும் எனச் சொல்லப்பட்டாலும் அந்த நாள்கள் கந்தனின் விசேட திருவிழாக் காலமாக அமைந்திருந்தமையால் 7.30 மணிக்குப் பின்பாகவே மக்களின் ஒன்றுகூடல் அதிகப்பட்டது. அதன் பின்பாக நாடகம் ஆரம்பமானது. பெரியவர்களும், சிறுவர்களும் நிறைந்த திறந்த வெளி அரங்கு அழகுற ஒளி கொண்டது. இதமான இனிமையான சூழல் . தென்றல் அன்பு கொண்டு அனைவரையும் வருடிக்கொண்டிருந்தது. அன்று இரண்டு நாடகங்கள் மேடையேறுவதாக இருந்தது. ஒன்று 'ஏகாந்தம்' எனும் பெரியவர்களுக்கான நாடகம் மற்றையது 'பஞ்சவர்ண நரியார்' என்ற சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் உகந்த சிறுவர் நாடகம்.

### ஏகாந்த வெளி

நாடகம் மங்களகரமாக ஆரம்பமானது. மங்கள ஒளியேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர். அந்தச் செயற்பாட்டில் நானும் ஓர் கரமாக உயர்ந்து ஒளியைச் சூடினேன். அதனைத் தொடர்ந்து ஆரம்ப உரையுடன் ஏகாந்தம் நாடகம் ஆரம்பமானது.

ஏகாந்தம் நாடகத்தின் பாத்திரங்கள் ஐந்து. மிக வயதான வருத்தக்காரரான ஒரு கிழவர். அவர் வயதை அண்மித்த ஒரு கிழவி, அவரது வீட்டுக்கு அவர்களைப் பராமரிக்க வரும் ஒருவர். ஒரு நாய் மற்றும் இறுதி நேரத்தில் அங்கு வரும் ஒரு மருத்துவர் என அவை சிறப்புற்றிருந்தன. போரின் சுழலுக்குள் அகப்பட்டு ஒவ்வொரு விதத்திலும் பாதிக்கப்பட்ட, எமது வாழ்க்கை முறையில் கண்டு கொள்ளப்படாத வலியின் ஒரு பக்கத்தைக் கூறுகின்றது ஏகாந்தம் நாடகம்.

போர்ச் சூழ்நிலையில் பல்வேறு காரணங்களால் தமது பெற்றோரை விட்டு தம்மை பாதுகாத்துக் கொள்ள புலம்பெயர்ந்து சென்றவர்கள் தாம் குடியேறிய நாடுகளின் வாழ்க்கை முறைக்குள் அகப்பட்டு விடுபடமுடியாத ஓர் இறுக்கத்துக்குள் தள்ளப்படுகின்றனர். இந்த நிலையிலே தாயகத்தில் தனிமையில் விடப்பட்ட அவர்களின் பெற்றோர்களின் மன உணர்வுகளைப் பேசுகின்றது ஏகாந்தம்.

### புதிய முயல்தல்

அரங்கியலில் ஓர் முயற்சியாக வேடமுகத்தையும், நிழல்பாவையையும் இணைத்து கதைசொல்லப்படுவது இந்த நாடகத்தின் மேலுமொரு சிறப்பெனலாம். ஏகாந்தம் என்ற சொல் யாழ்ப்பாணச்



சைவமரபில் மிகவும் மகிழ்ச்சிதரும் சமயம் சார்ந்த ஒரு சொல்லாக விளங்குகிறது. சுற்றம் சூழலைவிட்டு யோக நிலையில் இருக்கும் ஒரு மனோநிலையை இது குறிக்கும்.
இனிது இனிது ஏகாந்தம் இனிது என்பது எமது மரபு. ஆனால் இங்கு ஏகாந்தம் அவ்விரு வயோதிபருக்கும் தனிமை இன்பத்தைத் தரவில்லை. மாறாக தனிமைத் துயரையே தருகிறது. அவர்களது ஒரேயொரு இன்பம் தரும் உறவு அந்த வீட்டில் அன்பு கொண்டு உலவுகின்ற நாய்தான். பாத்திரங்களின் குணாதிசயங்களை பெருப்பித்துக்காட்டின முகமூடிகள்.

### உணர்வுகளின் அசைவு

மனதில் அப்பாத்திரங்களின் துயரங்கள், உள் மன உணர்வுகள் முக மூடியின் ஒவ்வொரு மடிப்பிலும் தெரிந்தன. இந்த முக மூடிகளைச் செய்திருந்தவர் செந்தில். நடிகர்களின் முகம் மறைக்கப்பட்டதால் முகபாவம் இல்லை. ஆனால் ஒத்திசைவு மிகுந்த உடல் அசைவுகள் முக்கியமாக, கழுத்தசைவுகள், கை அசைவுகள், ஒத்திசைவுள்ள குரல் அசைவுகள் என்பன முதிர்ந்த நடிப்பைக்காட்டின. கிழவரின் அசைவுகளும் கிழவியின் அசைவுகளும் ஒரு லயத்துக்குள் அமைந்திருந்தன. இதனைச் செய்யக் கடுமையான பயிற்சிகள் வேண்டும். நடிகர்களுக்கு அவை அளிக்கப்பட்டிருந்தன.
கிழவராக நடித்தவர் தேவானந்த். கிழவியாக நடித்தவர் ரஜனி புவிராஜசிங்கம். தவிர நாயாக பரதனும், பராமரிப்பாளராக பார்த்திபனும் இறுதி நேரம் வருகையுறும் மருத்துவராக குமாரசிவமும் நடித்திருந்தனர். பிசிறில்லாத நடிப்பு அனைவரிடமும் இருந்தது. ஆரம்பத்திலும் இறுதியிலும் பின்னணிப்பாடல் தொனிப்புக் கொண்டு உள்ளம் உருக்கும் குரலில் துயர கீதம் பொழிந்தார் ஜெகனி.
ஏகாந்தம் ஏகாந்தம் என நாடக ஆரம்பத்தில் மனதில் தைக்கும் அக்குரல் இப்போதும் கேட்கிறது. பாடலாசிரியர் சி.பா.வேந்தன். நாடகத்தைத் தூக்கி நிறுத்தியது இசை. அதன் பொறுப்பாளர் ஜெகதீஸ். நாடகத்தை எழுதியதுடன் நெறியாள்கையும் செய்து நடித்தும் இருந்தார் தேவானந்த்.
நாடக உணர்வைக்கொண்டுவர நெறியாளரான தேவானந்த் நிழற் பொம்மலாட்ட உத்தியையும் பாவித்திருந்தார். ஆரம்பத்தில் இரண்டு பறவைகள் ஒன்றாகப் பறக்கின்றன.
பாடல் இவ்வாறு ஆரம்பமாகிறது, "பச்சை மரத்தில் இரு சிட்டுக்குருவி இணையாக வலம் வந்தன... கடைசியில் ஒரு பறவை தனியாகப் பறக்கிறது.." என்றவிதமாகப் பாடல் முடிகிறது. நான் தலை சாய்ந்து இருந்து சுமை தீர்த்த ஒரு தோள் எனை விட்டுப் பறந்தேகிற்றோ...
பெரியவர் இறந்ததும் கிழவி தனிப்பறவையாகிவிடுகிறாள். அவள் செயல்களும் மாறிவிடுகின்றன. செல்ல நாய்க்குக்கூட உணவு வைக்க அவளுக்கு மனம் வராத பெரும் தனிமை ஏகாந்த வெளிக்குள் அவள் சென்றுவிடுகின்றாள். இருந்தென்ன இறந்தென்ன என்கிற மனோநிலை. கிழவனும் கிழவியும் உற்றார், உறவினர்கள், பிள்ளைகளின்றிய ஏகாந்தத்துள் வாழ்கின்றனர். கணவன் இறந்ததும் கிழவி மிகப் பெரும் ஏகாந்தத்துள் அமிழ்ந்துவிடுகிறாள். இறுதி தனிமைதான். தனிமைத் துயர்தான். துயர் சுமந்த பெருமூச்சு வாழ்வுதான். மீள முடியாத ஏகாந்தம்தான்.

### தனிமை நீங்கி அரவணைப்போடு நகர்வோம்

ஆம், இனிமையில்லாதது ஏகாந்தம்.
இனிது இனிது ஏகாந்தம் இனிது என்று பாடினாள் ஔவைப்பாட்டி. இங்கோ கொடுமை கொடுமை ஏகாந்தம் கொடுமை. அதனிலும் கொடுமை முதுமையில் ஏகாந்தம் என அழுத்திக் கூறியது நாடகம். அழுத்தமாகத் துயரத்தை மனதில் பதித்தது நாடகம். நாடகம் முடிய மனசு கனத்துப் போயிருந்தது. அசைய முடியவில்லை. பாத்திரங்களின் அசைவுகள், ஓசைகள் மற்றும் மூச்சுக்கள் எழுப்பிய அதிர்வலைகள் எம்மைக் கட்டிப் போட்டிருந்தன. எம்மிடமும் எஞ்சியது ஆழ்ந்த பெரு மூச்சுதான்.
மிக நீண்ட நாள்களின் பின் உள்ளத்தைக் கனக்க வைத்த நாடகம். நாடக இலக்கணங்களைப் பெருமளவு பின்பற்றிய நல்லதோர் நாடகம் பார்த்த உணர்வே ஏற்பட்டது.
அந்த உணர்வோடு இருந்த என்னை மேடைக்கு அழைத்து உரையாற்றச் சொன்னார் தேவானந்த்.
சிந்தனை வெளிக்குள் மீண்டேன். நல்லதைப் பாராட்டத் தயக்கமேன் என்ற விழிப்போடு எழுந்து நகர்ந்தேன். நாடகத்தையும், நடிகர்களையும், அவர்கள் உழைப்பையும் பாராட்டி மகிழ்ந்தேன். அமைதி கொண்டு அமர அடுத்த நாடகம் பஞ்சவர்ண நரியார் என்றார்கள். நண்பர் குழந்தை சண்முகலிங்கம் எழுதிய நாடகம். அவர் சிறுவர் நாடகங்களில் குறும்பும், குதூகலமும் நிறைந்துபோய் இருக்கும். எண்ணிக் குதூகலம் கொண்டேன். இன்னொரு சுவையை அனுபவிக்க என்னைத் தயார்படுத்திக்கொண்டேன். அது அடுத்த வாரம் உங்களுக்கும் வரும்.

> மனதில் அப்பாத்திரங்களின் துயரங்கள், உள் மன உணர்வுகள் முக மூடியின் ஒவ்வொரு மடிப்பிலும் தெரிந்தன. இந்த முகமூடிகளைச் செய்திருந்தவர் செந்தில். நடிகர்களின் முகம் மறைக்கப்பட்டதால் முகபாவம் இல்லை. ஆனால் ஒத்திசைவு மிகுந்த உடல் அசைவுகள் முக்கிய மாக, கழுத்தசைவுகள், கை அசைவுகள், ஒத்திசைவுள்ள குரல் அசைவுகள் என்பன முதிர்ந்த நடிப்பைக் காட்டின. கிழவரின் அசைவுகளும் கிழவியின் அசைவுகளும் ஒரு லயத்துக்குள் அமைந்திருந்தன. இதனைச் செய்யக் கடு மையான பயிற்சிகள் வேண்டும். நடிகர்களுக்கு அவை அளிக்கப்பட்டிருந்தன.





Dialog
Mega அதிர்ஷ்டம்
சனிக்கிழமை
இரவு 9.55 க்கு
வசந்தம் TV
ஊடாக
125 வது வாரத்தின் வெற்றி இலக்கங்கள்
71 25 64 15 21 B
இந்த வாரத்தின் சுப்பர் பரிசு ரூ. 10,769,231/-
உங்கள் இலக்கங்களை அறிந்திட,
பரிசுகளைப் பெற்றிட
121 க்கு அழையுங்கள்.
Dialog
எதிர்காலம் இன்றே.

Softlogic Finance தங்க கடன்
அவசர பணத்தேவைக்கு
உங்கள் தங்கப் பவுணுக்கு
அதிகூடிய முற்பணம்

- முன்கூட்டிய அறிவித்தலின்றி தங்கநகைகளை துரிதமாக மீட்கும் வசதி
- தங்க நகைகளுக்கு பூரண பாதுகாப்பு
- செயற்றிறன் மிக்க சினேகபூர்வமான ஊழியர்கள்
- பகுதிக் கொடுப்பனவுகள் செய்யும் வசதி
- தெரிவுசெய்வதற்கு முற்பண கொடுப்பனவு முறைமைகள் பல




24 கரட் ரூ. 45,500/-
22 கரட் ரூ. 38,000/-

சுன்னாகம் - 0722 527664, 0212 242775
யாழ்ப்பாணம் - 0722 334596, 0212 219444

*நிபந்தனைகளுக்குட்பட்டது

எஸ்.ரி.குமரன்



# துர்க்கை மூர்த்தம் கொண்டு பேரருள் பாலிக்கும் பராசக்தி

திருக்கோயிலினால் சிறப்புப் பெற்றது எமது நாடு. அதன் கண்ணே சிவ ஸ்தலங்களும், முருக ஸ்தலங்களும் விஸ்ணு ஸ்தலங்களும், சக்தி ஸ்தலங்களும் சிறப்புற அமைந்து அழகு பெறுகின்றன. இவற்றுள் வடபால் அமைந்த மிகப் புராதானமான ஆலயமாக தெல்லிப் பழை துர்க்காதேவி தேவஸ்தானம் விளங்குகிறது. சைவப் பெருமக்களிடையே பிரசித்தமான ஆலயமாக மேன்மையுறுகிறது. நகுலகிரித் தீர்த்தம், மாவைக்கந்தன் ஆலயம் என்பவை அருளின் அயல் உவகை கொண்டு அணிகலனாக விளங்க யாழ். காங்கேசன் துறை வீதியின் எட்டாவது மைல்கல் தொலைவில் கிழக்கு நோக்கிய சந்தியுடன் இவ்வாலயம் அமைவு கொண்டுள்ளது. துர்க்கையை மூல மூர்த்தியாகக் கொண்டமைந்த ஆலயத்தின் திருவருள் அற்புதக் கீர்த்தி நிறைந்தது.

**மகோற்சவம்**

அருளின் சிறப்பு வாய்ந்த தெல்லிநகர் துர்க்காதேவியின் வருடாந்த மகேற்சவப் பெருவிழாவானது இன்று புதன்கிழமை காலை கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 12 தினங்கள் மகோற்சவ நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. மகோற்சவ காலத்தில் உலக நாயகியாக விளங்குகின்ற அன்னை துர்க்காதேவியினை வழிபாடு இயற்றுவதன் ஊடாக திருவருட் கடாட்சத்தினைப் பெற்று உய்யலாம்.

*"மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி*
*நாவிற்க்கும் மனதுக்கும் நாடரிய பேரறிவாய்த்*
*தேவர்க்கும் மூவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்*
*யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்கிடுவாய்....!"*

எனும் பாடலுக்கு அமைய தெல்லிநகரிலே வீற்றிருந்து அருளாட்சி புரிகின்ற அம்பிகையை வழிபாடு இயற்றுவதற்குரிய விசேட காலப்பகுதியாக இந்த மகோற்சவ காலம் தனிச்சிறப்புப் பெறுகின்றது.

**சக்தி வழிபாடு**

சக்தி வழிபாட்டுக்குரிய ஆலயமாக துர்க்கை அம்மன் ஆலயம் திகழ்கிறது. எமது சமய மரபில் தாய்த்தெய்வமாக போற்றி அம்பிகையவளை வழிபாடு இயற்றுகின்ற சிறப்பு நிலவி வருகிறது. 'ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத் தாயும் மகளும் தாரமுமாக விளங்குபவள்' அம்பிகையவளே. சகல ஆற்றல்களின் உற்றாக அமைந்து அருள்பாலிக்கின்றாள். அமைதியான வாழ்வையும், அளவில்லாத ஆனந்தத்தையும் அருளும் அன்னையாக மிளிர்கின்றாள். இவளை உபாசித்துப் பெரும் பாக்கியம் பெற்றோர் பலர். அம்பிகையின் உருவ பேதங்கள் பல. அவற்றைக் கணித்துக் கொண்டு வேறு வேறு நிலையில் அவளை எழுந்தருளச்செய்து வழிபடுகின்றனர். அம்பிகையினுடைய உருவ பேதங்களில் ஒன்றாகவே அன்னை துர்க்கையின் வழிபாடும் சிறப்புப் பெறுகிறது.

**தீமை அழித்து அருளை ஆட்கொள்ளல்**

தேவர்கள் மகிடாசுரன் என்னும் அசுரனால் துன்புறுத்தப்பட்ட போது பிரம்மாவிடமும் விஷ்ணுவிடமும் தங்கள் குறைகளைச் சொல்லி முறையிட்டனர். அங்கு வெளிப்பட்ட சினம் என்னும் சக்தி ஒன்று சேர்ந்து உருவகம் கொண்ட வடிவமே துர்க்கை வடிவம் எனப் பேசப்படுகிறது. துர்க்காதேவி சிங்க வாகனத்தில் ஆரோகணித்து மகிடாசூரனை எதிர்த்துப் போர் புரிந்தாள். அம்பிகையின் வாகனமாகிய சிங்கமே அசுர சைனியங்கள் அனைத்தையும் அழித்து விடவும் அசுரன் மகுட உருவில் வந்தபோது அவன் செருக்கை அம்பிகை அடக்கினாள். தனது திருவடியால் அழுத்தி ஆட்கொண்டருளினாள். தேவியினுடைய திருக்கரங்களில் சங்கு, சக்கரம், தாமரை, ஜெபமாலை என்பவற்றை தாங்கி நிற்க்கும் திருக்கோலம் மனதிற்கு மகிழ்வளிப்பதாய் உள்ளது.

**அருளின் கடாட்சம்**

ஈழமணித் திருநாட்டைப்பொறுத்த வரை துர்க்காதேவிக்குரிய மிகப்பழமையான தனிப்பெருங்கோயிலாக அமைந்திருப்பது தெல்லிநகர் துர்க்காதேவி தேவஸ்தானமே. ஆலய மூர்த்தியான அம்பிகை கிழக்கு நோக்கிய சந்நிதியாக அமைவு கொண்டுள்ளாள். தல விருட்சங்களாக இலுப்பையும், மாவும், மகிழும், அரசும் அமைந்து விளங்குவது ஆலயத்தின் சிறப்பு. நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளி அன்னை பவனி வரும் காட்சி அடியவர்களை அத்திருவருள் ஒளிக்குள்ளாய் ஈர்த்து மனம் இலயிக்கச் செய்யும் தன்மை பேறானது. இதனை,

*"சக்தியாய் விந்து சத்தியாய் மனோன்மணி தானாகி*
*ஏத்துற மகேரையாகி யுமை திருவாணியாகி*
*வைத்துறுக் சிவாதிக் கிங்கன் விருந் சக்தி யொருத்தியாகும்*
*எத்திறன்நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்ப்பாள்...!"*

என்னும் அருநந்திசிவாச்சாரியாரது சிவ ஞான சித்தியார் பாடலடி அற்புத நயமாகக் கூறுகிறது. அன்னை பராசக்தியே உலகின் சக்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குகிறாள். இந்த சக்தியின் வடிவத்தையே வீரத்தை தரும் துர்க்கையாகவும், கல்வியைத் தரும் கலைமகளாகவும், செல்வத்தைத்தரும் திருமகளாகவும் நாம் போற்றி வழிபடுகிறோம்.

**பயன்**

தன்னை வணங்கும் அடியவர்களுக்கு துன்பத்தை நீக்கி அவர்களுக்குத் திருவருளை வழங்கிக் காப்பதனால் அவள் துர்க்கை எனும் நாமத்தைப் பெறுகிறாள் என சைவசமயிகள் கூறுவார்கள். இத் தேவி பராசக்தியின் படைத்தலைவியாவாள். ஆபத்துக்காலத்தில் அன்பர்களுக்கு அருள் புரிந்து உதவுபவள். அச்சம் போக்கும் திறமையுடையவள். அரசருக்கும் வீரருக்கும் உரிய வழிபாட்டுத் தெய்வமாக விளங்குகிறாள். அக்கினி கலை, சூரிய கலை, சந்திரகலை உடையவள். அம்பிகைக்கு தேன் அபிஷேகம் செய்து புஷ்ப அர்ச்சனை செய்தால் உடனே ஆபத்து நீங்கி வெற்றியும் கைகூடும் என்பார்கள் ஆன்றோர். இத்தகைய மகிமை பொருந்திய அன்னை எழுந்தருளி அருள் பாலிக்கின்ற திருத்தலமே தெல்லிநகர் துர்க்காதேவி தேவஸ்தானமாகும்.

**வழிபாடு**

அன்னை பராசக்தியானவள் துர்க்கை மூர்த்தம் கொண்டு பேரருள் பாலிக்கும் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்திலே நித்திய நைமித்திய மரபுகளும், வழிபாட்டு மரபு மலர்ச்சியும் அம்பிகை அடியார்களை ஈர்த்து வருவது மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாகும். அடியவர்கள் செவ்வாய், வெள்ளி தினங்களில் பெருந்திரளாகக் கூடி அன்னையின் திருவருளைப் பெற்று உய்கின்றனர்.

*"அங்கையிற் கரகந் தாங்கும் பிரமாணி யருள்னோடும்*
*துங்கமென் சென்னிகாக்க வயிணவி துகளிலாகம்*
*எங்கனும் காக்க செய்ய வேற்தொழி லுருத்திராணி*
*தங்குமென்டிசையு மன்பு தழைத்திட விளிதுகாக்க...!"*

என்னும் சக்தியின் கவசப் பாடலை துணைக் கொண்டு உலகினைக் காத்து இரட்சித்துக் கொண்டிருக்கின்ற அன்னையினுடைய மகோற்சவப் பெருவிழாவிலே ஏராளமான பக்தர்கள் வருகை தந்து வேண்டுதல்களைச் செலுத்தி அன்னை துர்க்காதேவியினுடைய திருவருள் சாசனத்தையும், அருளொளியினையும் பெற்று உய்வோமாக.

*கட்டுரையாளர் : செயலாளர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்.*

---

மலர்விழி கனகசபை

# தெல்லிநகர் அமர்ந்து அருளாட்சி கொள்ளும் அலங்கார நாயகி

இலங்கைத்தீவின் வடபால் யாழ்ப்பாணத்திலே தெல்லிநகரில் சிறி துர்க்காதேவி, சக்தியின் அருள் வடிவமாக எழுந்தருளி அருள் சுரக்கின்றாள்.

**அலங்கார நாயகி**

இத்தகு சிறப்புடைய அம்பிகையின் ஏவிளம்பி வருட மகோற்சவத்தின் கொடியேற்றத் திருவிழா இன்றைய தினம் காலை பத்து மணிக்கு வெகு சிறப்பாக இடம்பெறுகிறது. தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் திருவிழா இடம்பெறும். ஆவணிமாத திருவோண நட்சத்திரநாளில் அம்பிகையின் ஆலயத்தை எழிலுறக் காட்சியுறுத்தும் 'துர்க்கா புஸ்கரணி' தீர்த்தத்தடாகத்திலே தீர்த்த உற்சவம் இடம்பெற்று திருவிழா இனிதே நிறைவுறும். சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் நேரடி வழிகாட்டுதலுடன் மிகச் சிறப்பாகத் திகழ்ந்த இவ் ஆலயம் அவருடைய மறைவைத் தொடர்ந்து ஆன்மீகப் பேச்சாளர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையிலே மிகச் சிறப்பாக பரிபாலனஞ் செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு திருவிழாக்களும் மிகக்கோலாகலமாக இடம்பெறுவதுடன் அம்பிகை அலங்கார நாயகியாக எழுந்தருளி மங்கள வாத்திய இசையின் களிப்போடு வீதி உலாவரும் காட்சி அற்புதமானது. இக்காலங்களில் அம்பிகையின் அருட்கோலக்காட்சியினைக் காண இலங்கையின் பலபாகங்களிலும் இருந்தும் பக்தர்கள் ஆலயம் நோக்கி வருகை தருவர்.

**தேர் உற்சவம்**

தேர்த் திருவிழா அன்று பெண் அடியவர்கள் ஒருபுறமும், ஆண்அடியவர்கள் மறுபுறமும் வடம்பிடித்து இழுக்க அருள் கடாட்சமான அம்பிகையின் தங்கத் தேரானது ஆடி, ஆடி அசைந்து வருகின்ற காட்சி பேறானது. இந்தக்காட்சியைக் காணக் நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும். தேர்த்திருவிழா அன்று அதிகாலையில் இருந்தே பக்தர்கள் தெல்லிநகரில் கூடி விடுவர். எங்கு பார்த்தாலும் பக்தர்கள் கூட்டம் அலை மோதும். பக்தர்களின் 'அரோகரா' ஒலி வானை முட்டும். அந்தணர்களின் வேதபாராயண ஒலி பக்த அடியவர்களின் கேண்மையுள் இன்ப அன்பைத் அள்ளித் தெளிக்கும். தெல்லிநகரில் அருள்மணக்கும். நகரே இந்திரலோகம் போலக்காட்சியளிக்கும். இத்தகைய மகத்துவம் தெல்லிநகருக்கே உண்டு. அடியவராய் வருகில் அம்பிகையவள் அருள் வடிவை கண்டுகொள்வீர்.

**வேண்டுதல்**

துர்க்கா தேவியின் பேரருள் கடாட்சம் கிடைத்திடப் பலர் நேர்த்திக்கடன்களை நிறை வேற்றுவர். திருமணம் கைகூடாத கன்னிப் பெண்கள் விவாகப் பேறு வேண்டி துர்க்கா தேவியை எண்ணி விரதமிருப்பர். அன்னையை நாடிவரும் கன்னிப்பெண்கள் ஒவ்வொரு செவ்வாய் கிழமைகளிலும் தேசிக்காய் மூடியிட்டு நெய்விளக்கேற்றி வழிபடுவர். தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் வழிகாட்டலிலே நடந்த பல தொண்டுகள் தற்போதும் இடம்பெற்றுவருகின்றன. துர்க்காதேவி மகளிர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டு சிறப்புற பரிபாலனம் செய்யப்பட்டு வருகிறது. ஆலயச் சூழலில் அமைவுபெற்றுள்ள அன்னதான மண்டபங்களிலே அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. மேலும் மாணவ உலகுக்கு பலம் தரும் ஆன்மீகம் சார்ந்த ஆழ்ந்த கருத்துடைய ஆக்கங்கள் தாங்கிய நூலுருக்கள் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன.



ஆக. இன்றைய திருநாளில் தெல்லிப்பழை சிறி துர்க்காதேவியின் கொடியேற்றம் காண வரும் பக்தர்களுக்கு அம்பிகையானவள் அருளுரை வழங்க வேண்டும். அவர்களின் வல்வினை அகற்றி நல் வாழ்வு அளித்திட வேண்டும். நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிலவ வேண்டும். இந்த மண்ணிலே எல்லோரும் இன்புற்றிருந்திட. மண்ணிலே நல்ல வண்ணம் வாழ்ந்து பிறந்த பயனை அனுபவிக்க அம்பிகையானவள் அருள் பாலிப்பாராக.



# சிறப்புற நடைபெற்ற தென்மராட்சி விழா

தென்னவன்

உதவிகள் செய்வதாயின் நல் மனமிருக்க வேண்டும். அவ்வாறான மனமிருந்தாலே அதன் வெளிப்பாடு வெற்றிகரமாக அமையும். தென்மராட்சி அபிவிருத்திச் சபையின் புலம் பெயர் நாடுசார் கிளைகள் ஒன்றிணைந்து தாயக சபையுடன் கைகோர்த்துநடத்தியதென்மராட்சிவிழா 2017 நிகழ்வுகள் இதற்குச் சான்றாக அமைந்தன எனலாம்.

கடந்த2000ஆம்ஆண்டுதென்மராட்சி பிரதேசத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வு இவ்வாறானசபையைஉருவாக்கவைத்தது. இடம்பெயர்ந்துசென்று2வருடங்களுக்குப் பின்னர் சொந்த இடங்களுக்குத் திரும்பிய மக்களில் பெரும்பாலானோர் தமது குடியிருப்புகளைக் கற்குவியல்களாக கண்டனர். குடியிருப்புகள் மட்டுமன்றி அரச திணைக்கள, நிறுவனங்களின் கட்டடங்களும் கற்குவியலாகக் காணப்பட்டன. அவ்வேளையில்மீளக்குடியமர்ந்தகல்வியியலாளர்கள், பொதுநலன் விரும்பிகள், சமூகத் தொண்டர்கள் போன்றோர் போர் இடர்களினால் அழிவடைந்த தென்மராட்சிப் பிரதேசத்தைக் மீளக் கட்டியெழுப்பச் சங்கம் ஒன்றை உருவாக்கிக் கொண்டனர். உரியஅதிகாரிகளுடன்கலந்துரையாடி தென்மராட்சிப் பிரதேசத்தை மீண்டும் வளமுள்ள பிரதேசமாக மாற்ற வேண்டுமென்ற நல்லதொரு சிந்தனையுடன் ஒன்று கூடி தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் என்ற பெயரில் மேற்படி சங்கத்தை உருவாக்கினர்.



கழகத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பார்வையிட்ட புலம்பெயர் நாடுகளில் உள்ள பிரதேச மக்கள் தாம் வதியும் நாடுகளில்கழகத்தின்கிளைகளைஅமைத்துக்கொண்டனர். தென்மராட்சியின்தேவைகளை இனங்கண்டு அவற்றுக்குத் தம்மாலான உதவிகளை வழங்க முன்வந்தனர். புலம்பெயர் நாடுகளில் உள்ள கழகத்தின் கிளைப் பிரதிநிதிகள் வருகை தந்து கலை, கலாசாரம், விளையாட்டு போன்ற துறைகளில் ஊக்கமுள்ள மாணவர்கள், விளையாட்டுக் கழகங்கள் இடையே போட்டிகளை நடத்தி வெற்றி பெற்றோரை கௌரவித்தனர். பிரதேசத்தில் பல்வேறு நலத் திட்டங்களையும் மேற்கொண்டனர்.

### புலம்பெயர் நாடுகளில் இருந்து வந்த உறவுகள்

அவ்வாறு இவ்வருடமும் புலம்பெயர் நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த கழகக் கிளைகளின் பிரதிநிதிகள் கலை, கலாசார நிகழ்வுகளையும், விளையாட்டு நிகழ்வுகளையும் மாணவர்களிடையே பொது அறிவு, விநாடிவினா, திருக்குறள், மனனப் போட்டி போன்றவற்றையும் நடத்தினர். அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வைச் சாவகச்சேரி பொன் விழா மண்டபத்தில் நடத்தினர். அந்தநிகழ்வில்கலந்துகொண்ட பொதுமக்களுக்கு தமது கிளைகளால் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் பற்றியும் தெளிவுபடுத்தினர்.

கழகத்தின் தலைவர் பேராசிரியர் க. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமாரும் சிறப்புவிருந்தினராக பிரிட்டிஷ் கவுன்சில் யாழ். கிளையின் முகாமையாளர் திருமதி றொபேக்கா ரெளன்சனும்கலந்துகொண்டனர். நிகழ்வில்கழகத்தின் பிரிட்டன், பிரான்ஸ், ஆஸ்திரேலியா கனடா, நோர்வேபோன்றநாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் சிறந்த கல்விச் சேவையாளருக்கான விருதைத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ச. கிருஷ்ணகுமாருக்கும் சிறந்த சமூகத் தொண்டர் விருதை அரசநாதனுக்கும் வழங்கிக் கௌரவித்தனர்.

கழகத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களில் முதற்கட்டமாக 23 பேருக்கு பிரிட்டன் கவுன்சிலின் உதவியுடன் நடத்தப்பட்ட ஆங்கில பாட பயிற்சிகளில்பங்குபற்றிய ஆசிரியர்களுக்குபிரிட்டன் கவுன்சிலின் யாழ். மாவட்ட கிளை முகாமையாளர் திருமதி றொபெக்கா ரெளன்சனால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.


### அடுத்த கட்ட நடவடிக்கை

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையாக தென்மராட்சி அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு நடத்தப்பட்டது. இருந்த போதும் நிதி கிடைத்த பின்னர் அபிவிருத்தியை தேடுவதை விடுத்து இனங்காணப்பட்ட அபிவிருத்தியைக் கையில் வைத்துக்கொண்டு நிதியைத்தேடும்செயலாகவே கருத்தரங்கு அமைந்திருந்தது. யாழ். மாவட்டத்தில் ஒவ்வொருதுறையிலும்சிறந்த புலமைகொண்டிருந்தவர்களை அழைத்து அவர்கள் மூலம்தென்மராட்சியின்அபிவிருத்திக்குத் தேவையான கருத்துக்கள் மக்கள் முன்னிலையில் அறியப்பட்டன.

அந்த வகையில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை 'தென்மராட்சியின் வளங்களும் எதிர்காலமும்' என்னும் தலைப்பிலும், தென்மராட்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ. சுபச்செல்வன் 'தென்மராட்சியின் முன்னுரிமைத் தேவைகள்' என்னும் தலைப்பிலும் , யாழ். பல்கலைக் கழக பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கு. மிகுந்தன் 'விவசாயமும் சிறு கைத்தொழில்களும்' என்னும் தலைப்பிலும், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சூசை ஆனந்தன் 'மீன்பிடித் தொழிலின் மேம்பாடு' என்னும் தலைப்பிலும், வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் 'தென்மராட்சியின்கல்வி வளர்ச்சிக்கான கல்விசார் முன்மொழிவுகள்' என்னும்தலைப்பிலும், யாழ். போதனா மருத்துவமனை மருத்துவர் சி. சிவயோகன் 'உடல்உளநல மேம்பாடு' என்னும் தலைப்பிலும் கருத்துரைகளை வழங்கியிருந்தனர்.


### தென்மராட்சியின் அபிவிருத்தி

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டகருத்தரங்கில்கலந்துகொண்ட கழகத்தின் பன்னாட்டுக் கிளைகளின் பிரதிநிதிகள் பிரதேசத்தில் மேற்கொள்ளவேண்டியஅபிவிருத்திகள் தொடர்பானவிவரங்களைப்பெற்றுள்ளனர்எனத் தெரிவித்தனர். அத்துடன் புலமையாளர்களால் முன்வைக்கப்பட்ட அபிவிருத்திகள் தொடர்பாக நிதிகளைத் தேடி அவற்றைப் பூர்த்தி செய்ய விரைந்து செயற்படுத்தவுள்ளோம் எனவும் தெரிவித்தனர். இவ்வாறு யாழ். மாவட்டத்தில் அழிவடைந்த பிரதேசங்களின் மேம்பாட்டுக்கு அந்தந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்கள் உதவ வேண்டும். அவ்வாறு செயற்படுவதன் ஊடே அரச நிதி உதவியை நாடிக் காத்திருக்கும் யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திகள் அரசஉதவியின்றி தன்னிறைவு பெறவாய்ப்புகள் உள்ளன. அதற்கு இவ்வாறானகருத்தரங்குகள் பயனளிக்கும்.





தமிழ் கவிஞர்கள் அமைப்பான 'வலம்புரி கவிதா வட்டம்' தனது 40ஆவது கவியரங்கை கடந்த 7ஆம் திகதி அல் ஹிக்மா கல்லூரியில் நடத்தியது. மறைந்த கவிஞர் எலுவிலை அமீர் அரங்கில் நடைபெற்ற நிகழ்வில் அவர் பற்றிய சிறப்புரை இடம்பெற்றது. சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட பாணந்துறை அல் பஹ்ரியா கல்லூரி அதிபரும், மறைந்த கவிஞரின் நெருங்கிய நண்பருமான கவிஞர் கஸ்ஸாலி அஷம்ஸ், அவர் பற்றிய நினைவலைகளை உருக்கமாக எடுத்தியம்பினார். நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களும் எலுவிலை அமிர் பற்றி உரையாற்றினர்.



Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT


எஸ்.மல்லிகா

“வாழ்க்கையில் நன்றாக வாழும் ஒருவரைப் பார்த்து, அவன் மட்டும் ஓகோ என்று வாழ்கிறான். எனக்கு மட்டும் ஏன் இத்தனை துன்ப துயரங்கள், அடுத்தடுத்து கஷ்டங்கள் வருகின்றன? என்று துன்பத்தை அனுபவிக்கும் ஒருவன் தனக்குள் கேட்டுக்கொள்கிறான். இதற்குக் காரணம், விதி என்று எமது முன்னோர்கள் கூறிவிட்டனர். அது ஊழ்வினையாகிப் பிறவிதோறும் தொடரும் என்று மதநூல்களும் காப்பியங்களும் கூறுகின்றன

# பழந்தமிழ் இலக்கியத்தில் ஊழ்-10



மனிதர்களைச் சீர்மியப்படுத்தி, அவர்களுக்கு நல்வழி காட்ட எழுச்சி பெற்றவையே இலக்கியங்கள். இதில் அல்லவை தவிர்த்து, நல்லவை சேர்த்து வாழ்க்கையில் மனிதர்கள் கடைத்தேறும் வழியுரைப்பவை காப்பியங்கள். இந்த அல்லவையில், நாம் தீவினை செய்தல் கூடாது என்றும் அவ்வாறு செய்யும் பட்சத்தில் அது ஊழ்வினையாகி என்னென்ன விளைவுகளை எமக்கு நல்கும் என்றும் விளக்குகின்றன. சமண மதக் காப்பியமான நீலகேசி குறிப்பிடும் ஊழ்வினை குறித்து நோக்குவோம்.

**நீலகேசியில் ஊழ்வினை**

தமிழில் தோன்றிய முதல் தர்க்க நூல் நீலகேசி. இது குண்டலகேசிக்கு மறுப்பாக எழுந்த சிறுகாப்பியம். பழையனூர் நீலியே குண்டலகேசியாகப் பிறந்து சமண சமயத்தினும் பௌத்த சமயமே மேலோங்கியது என உணர்த்துவது குண்டலகேசிக் காப்பியம். அதே பழையனூர் நீலியே நீலகேசியாகப் பிறந்து குண்டலகேசியை வாதில் வென்று சமணமே உயர்ந்த சமயம் என நிறுவுகிறது நீலகேசிக் காப்பியம். குண்டலகேசி, நீலகேசி, அஞ்சனகேசி, காலகேசி போன்ற நூல்கள் தர்க்க நூல்களாகவே அமைந்துள்ளன. தர்க்கவியல் சிந்தனையை



மணிமேகலைக் காப்பியம் பின்னைய காதைகளில் பேசினாலும், அதனை முழுமையாகப் பேசுவது நீலகேசி மட்டுமே. பின்னர் இத்தர்க்கச் சிந்தனை சிவஞானசித்தியார், சிவஞானபோதம் முதலான சைவ சித்தாந்த நூல்களில் சிறப்பாகப் பேசப்படுகிறது. என்றாலும், இத்தகைய சித்தாந்த நூல்களுக்கு நீலகேசியே மூலாதாரம் என்று கூறலாம்.

**நீலகேசி சொல்லும் கருத்து**

தெய்வங்களுக்கு உயிர்ப்பலி இடுதல் தீமை என்பதை இக்காப்பியம் எடுத்துரைக்கிறது. இறைவன் அருளிய அறநெறியில் ஐயுறல் கூடாது; பேராசை தவிர்க்க வேண்டும்; மெய்த்துறவோரை மதித்தல் வேண்டும்; நட்பு, புகழ் இவற்றால் மயங்குதல் கூடாது; பிறர் குற்றங்களை அகற்ற வேண்டும்; முறை தவறி நடப்போரைத் திருத்த வேண்டும்; யாவரிடமும் மெய்யான அன்பு செலுத்த வேண்டும்; மாந்தர்தம் அறியாமை போக்க வேண்டும்என்று பலஉலகநீதிகளை இந்த நூல்எடுத்துரைக்கிறது. அத்துடன், வினைக் கோட்பாடு பற்றியும் பேசுகின்றது.

வாழ்க்கையில் நன்றாக வாழும் ஒருவரைப் பார்த்து, “அவன் மட்டும் ஓகோ என்று வாழ்கிறான். எனக்கு மட்டும் ஏன் இத்தனை துன்ப துயரங்கள், அடுத்தடுத்து கஷ்டங்கள் வருகின்றன? என்று துன்பத்தை அனுபவிக்கும் ஒருவன் தனக்குள் கேட்டுக்கொள்கிறான். இதற்குக் காரணம், விதி என்றுநம் முன்னோர்கள் கூறிவிட்டனர். அது ஊழ்வினையாகிப் பிறவிதோறும் தொடரும் என்று மதநூல்களும் காப்பியங்களும் கூறுகின்றன. இதில், நல்வினை செய்யின் நற்பயனையும் தீவினை செய்யின் துர்ப்பயனையும் நாம் அனுபவிக்க நேரிடும் என்றும் அவை அறிவுறுத்துகின்றன. இதனைப் பின்வரும் பாடல் மூலம் நீலகேசி தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

*“பிறன் சுமவான் தான்றடவான்*
*பெருவினையும் உங்கில்லா*
*அறம் செய்தான் அமருலகில்*
*செல்லும்வாய் அரிதுஎன்று*
*புறம்புறம்பே சொல்லாம்*
*பொருள் நிகழ்ச்சி அறியாயால்*
*கறவ்குகளும் அல்லனவும்*
*காற்றெறியத் திரியாவோ”*
*(நீலகேசி307)*

உயிரைச் சூழ்ந்த வினைகளுக்கு ஏற்ப நான்கு கதிகளிலும் விளைவுகள் மாறி மாறிச் சென்றடைகின்றன என்று சமணம் கூறுகின்றது. இதனையே எமது இந்து மதமும் வலியுறுத்துவதைக் காணலாம். இந்தச் சூழ்வினை- ஊழ்வினை பற்றிப் பின்வரும் நீலகேசிப் பாடலில் காணலாம்.

***“செய்வினைதன்ன நிற்பவே பயன்எய்தும் என்பதூஉம்***
***அவ்வினை அறக்கோட்டான் அதுவிளையும் என்பதூஉம்***
***இவ்விரண்டும் வேடுதல் எமக்கில்லை எடுத்துரைப்பின்***
***ஐவினையின் நிலைதோற்றமாசம் தான் நாட்டுங்கால்”***
*(நீலகேசி 311)*

வினைகள் உடனுக்குடன் பயன் தருகின்றன எனவும், அவை அழிந்த பின்பும் பயன் தருகின்றன எனவும் சமணர் கொள்கையை நீலகேசி எடுத்துரைக்கிறது. இவற்றைப் படித்தறிவோர், அடுத்த பிறவியில் தாம் இன்புற்றிருக்க வேண்டும் என நினைத்து, தீவினை செய்வதைத் தவிர்ப்பர். இந்தத் தீவினை தவிர்த்து, மண்ணில் நல்லவண்ணம் வாழும் வழிவகைகளையே அனைத்து இலக்கியங்களும் சுட்டுகின்றன.

இதில் நீலகேசிக் காப்பியம் முழுக்க முழுக்கப் பல சமயத் தத்துவங்களின் உண்மைத் தன்மையை விவாதிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. எதற்காக இப்படி ஒரு நூலை ஆசிரியர் எழுதியுள்ளார் என்று இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் கேள்வியெழுப்பினும், அதற்குள் ஒரு அர்த்தம் உண்டு. இதன் தத்துவம் பலருக்கும் விளங்காத ஒன்று என்பதாலே இக்காப்பியம் போற்றப்படவில்லை. ஆனால், இந்தியத் தத்துவம் படித்தோர் இதனைப் போற்றுவர். ஆசிரியர் தம் காலத்தில் நிலவியிருந்த அனைத்துச் சமயச் சிந்தனைகளையும் எடுத்துரைப்பதில் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளார். வினைக் கோட்பாட்டுக்கும் முதன்மை அளித்துள்ளார் என்பதனைக் காப்பியத்தைப் படிப்பதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.

(தொடரும்...)

என்றும் நெஞ்சைவிட்டு நீங்காத நினைவலைகள்

27 ஆவது வருட நினைவஞ்சலி

உதயம் 18 . 06 . 1933
அஸ்தமனம் 20 . 08 . 1990



தோலகட்டி, வயாவிளான்
அமரர் வைத்திலிங்கம் நடராசா
(முன்னாள் பொறுப்பதிகாரி, வலி. கிழக்கு பிரதேசசபை, அச்சுவேலி)
திதி: 21.08.2017

அன்புடனும், பாசத்துடனும் எம்முடன் வாழ்ந்து நாம் சிறப்புடன் வாழ வழிகாட்டி எம்மை எல்லாம் விட்டு மறைந்த எங்களின் அன்பு அப்பா, அம்மாவே! ஆண்டுகள் பல ஓடி

3 ஆவது வருட நினைவஞ்சலி

உதயம் 02 . 07 . 1935
அஸ்தமனம் 27 . 08 . 2014



தோலகட்டி, வயாவிளான்
திருமதி
சிவபாக்கியம் நடராசா
திதி: 23.08.2017

மறைந்தாலும் என்றும் உங்களின் நினைவலைகள் எங்களின் நெஞ்சங்களை விட்டு அகலாது!
ஆண்டு தோறும், நல்லூர் கந்தனின் தீர்த்தக் கரையில் நின்று கொண்டு கண்ணீர்ப் பூக்களை உங்களின் காலடிகளுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

என்றும் உங்களின்
அன்பு மகன்மார், மகள்மார், மருமக்கள்மார், பேரப்பிள்ளைகள்,
"துஷா இல்லம்"
சாமுவேல்மான், முதலாம் ஒழுங்கை, உடுவில் மேற்கு, சுன்னாகம்.

இல.14, 4 ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

# பாரம்பரியத்தை பறைசாற்றும் தமிழர்களின் குலச் சின்னம்



தமிழ்நம்பி

மாறிவரும் விஞ்ஞான உலகில் பழமையை மக்கள் நாளுக்கு நாள் மறந்து விடுகின்றனர். அவ்வகையில் மறைந்துபோகும் பாரம்பரியத்தின் முதுசமான மரங்களுள் பனைமரமும் ஒன்றாகத் திகழ்கிறது.

ஒருவருக்கொருவர் கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கும் நிலம், வீடு, மனை போன்றவைகளை அடையாளப்படுத்திக் கொள்ளுவதற்குமான மிக முக்கிய காரணியாக எழுத்தாணி என்று அழைக்கப்படும் பேனா விளங்குகிறது. அதன் பின்னாக போல்ட் பெயின்ற் பேனாக்கள் ஜெல் என்னும் திரவத்தை தாங்கி வருகிறது.

இத்தகைய அறிவியல் முன்னேற்றங்களுக்கு முன்னதாக ஆணி கொண்டு பனை ஓலையில் எழுதினார்கள் என்பது தெரிந்த விடயமே.

அந்தவகையிலே பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதுவது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. பனை ஓலையை எழுதுவதற்கேற்றவாறு பதப்படுத்தவேண்டும். பதப்படுத்துதல் என்ற அறிவியல் தொழில்நுட்பத்தை சரியாக தெரிந்து வைத்திருந்தவர்கள் எமது மூதாதையர்கள்.

இவர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய ஓலைச்சுவடிகள் அப்படியே இன்னமும் அருங்காட்சியகங்களில் உள்ளதற்கான காரணங்கள் பதப்படுத்துதலே.

இதன்படி முன்னோர்கள் எழுதுவதற்காக நல்ல அகலமான ஓலைகளை எடுத்து சீராக நறுக்கி அதனை தண்ணீரில் நன்கு வேகவைத்தனர் பின்பு அதனை உலர்த்தி ஓலைகளின் பாதுகாப்பிற்காக இரண்டு மரச்சட்டங்களை சுவடிகளின் மேலும் கீழும், வைத்து கட்டி ஆவணப்படுத்தினார்கள் என்று அறியமுடிகிறது.

மேலும் பனை ஓலையில் கூர்மையான ஆணிகொண்டு எழுதினார்கள். அவை இரும்பால் செய்யப்பட்டிருந்ததாகவும் பண வசதி படைத்தவர்கள் தங்கத்தால் ஆன எழுத்தாணிகள் கொண்டு எழுதினார்கள் என்றும் வரலாற்று ஆய்வாளர்களால் குறிப்பிடப்படு கின்றது.

எமது பாரம்பரிய இலக்கியம், மருத்துவம், சிற்ப சாஸ்திரங்கள் எல்லாமே பனை ஓலையில் எழுதப்பட்டவைதான். முதலில் எழுதுபவர்கள் ஒரு பிரதியை எழுதி முடித்த பின்னர் அதன் பல பிரதிகள் வேண்டுமெனில் அல்லது வணிக ரீதியாக எழுதவேண்டும் எனில் எழுதுவதற்கு தனியாக ஒரு தெருவை அமைத்துக்கொண்டு அங்கிருந்து எழுதிக் கொடுத்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள் ளது.

இதற்கு ஆதாரமாக பனை மரங்களை நினைவுபடுத்தும் விதமான பனப்பாக்கம், கட்டப்பனை, பனங்குடி, பனைமரத்துப்பட்டி, பனஞ்சாடி, பனைவடலி, திருப்பனந் தாள் போன்ற ஊர்கள் உள்ளமை குறிப்பிடத் தக்கது.

பண்டைய காலத்தில் சேர மன்னர்களுக்கு அடையாள மாலையாக போந்தை அணிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடல் அரிப்பு போன்ற இயற்கைச் அழிவிலிருந்து நிலப்பிர தேசங்களை காப்பதற்குக் கடற்கரையில் வளர்க்கப்பட்டிருந்த பனைமரக் கூட்டங்கள் பெரிதும் உதவியாக இருந்துள்ளன. இந்தச் சந்தர்ப்பத்திலே எழுத்து என்ற வரலாற்றின் முன்னோடி யாகத் திகழ்ந்த பனை மரங்கள் இன்று காலச் சூழ்நிலைகளின் திட்டமிட்ட திணிப்பால் அழிக்கப்பட்டு வருகின்றன.

ஆக, அழிந்த பனை மரங்களை விடுத்து இனிவரும் காலங்களிலாவது அழியவிருக்கின்ற பனை மரங்களைக் காப்பது எமது கடமையென்பதை உணர்ந்து செயலாற்றுவோம்.

## வரலாற்றில் இன்றைய தினம் 22.08.2017

1703 - இரண்டாம் முஸ்தபா சுல்தான் ஒட்டமான் பேரரசிலிருந்து பதவி பறிக்கப்பட்டார்.

1799 - பிரான்சின் முதலாம் நெப்போலியன் அதிகாரத்தைக் கைப்பற்ற எகிப்திலிருந்து பிரான்ஸுக்குப் புறப்பட்டார்.

1927 - இத்தாலிய ஆட்சி எதிர்ப்பாளர்கள் சாக்கோ மற்றும் வென்சேற்றி ஆகியோர் சர்ச்சைக்குரிய நீண்ட விசாரணையின் பின்னர் சாவுத் தண்டனைக்கு உள்ளாகினர்.

1944 - அமெரிக்காவின் போர் வானூர்தி டி-24 இங்கிலாந்தின் லிபறேற்றர் பிறெக்ல்ரன் பாடசாலை மீது மோதியதில் 61பேர் உயிரிழந்தனர்.

1966 - லூனர்ஓபிற்றர்1விண்கலத்தால்சந்திர சுற்றுப்பாதையிலிருந்துபூமியின்ஒளிப்படம் முதன் முதலாக எடுக்கப்பட்டது.

1990 - வளைகுடாப் போரைத் தடுக்குமுகமாக சதாம் ஹுசைன் ஒரு தொகை மேல்நாட்டுவிருந்தினர்களுடன்ஈராக்கிய தேசிய தொலைக்காட்சியில் தோன்றினார்.

2006 - யாழ்.நகருக்கள்பெண்சுட்டுக்கொலை.

2016 - காணாமற்போனோர் அலுவலகம் நிறுவும்சட்டத்திற்குசபாநாயகர்அங்கீகாரம்.

2016 - முப்படைகளின்பாதுகாப்புக்காகமுன்னிற்பேன் என அரச தலைவர் மைத்திரிதெரிவிப்பு.

2000 - கல்ப்072வானூர்திபனாமாவுக்கு அருகேபேர்சியன்குடாவில்விபத்துக் குள்ளாகியதில் 143 பேர் உயிரிழந்தனர்






# பணம்

## தாராளமாகப் புழங்குவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய வாஸ்து முறைகள்

பணமேவாழ்க்கையாகிவிடுவதில்லை. ஆனால், பணம் இல்லாவிட்டால் வாழ்க்கையே இல்லை. கொஞ்சம் கசப்பாக இருந்தாலும், அதுதான் உண்மை. இந்தப் பணத்தைப் பெறத்தான் நாம் அல்லும் பகலும் அயராது பாடுபடுகின்றோம். ஆனாலும், எல்லோர் கைகளிலும் பணம் அத்தனை எளிதாகக் கிடைத்துவிடுவதில்லை. பணம் தாராளமாக எமது கைகளில் புழங்க வேண்டுமானால், என்ன வகையான வாஸ்து மற்றும் பூஜை முறைகளைக் கையாள வேண்டுமெனப் பார்ப்போம்

### பணப்பெட்டி மற்றும் அலுமாரி வைக்கும் முறைகள்!

- வடமேற்கில் அலுமாரி, பணப்பெட்டி முதலியவை இருந்தால், பணம் வருவதும், போவதுமாக இருப்பதுடன், சேமிக்க முடியாததுடன் கடன்காரனாகவும் மாற்றி துன்பப்பட வைக்கும்.
- தென்கிழக்கில் பணப்பெட்டி இருக்குமேயானால், விரயச் செலவுகளையும், கொடுத்த பணம் திரும்பக் கிடைக்காத தன்மையையும் ஏற்படுத்தும். ஏமாற்றப்படுவார்கள்.
- கிழக்கில் அலுமாரி இருக்குமாயின் பணம் பல வழிகளில் வந்தாலும், நோய்க்குச் செலவு செய்வதில் பெரும்பகுதியும், குழந்தைகளின் தவறான செயல்களினால் பெரும்தொகையுமாக வீண் செலவுகளை ஏற்படுத்தும். வீட்டில் கவலை குடி கொள்ளும்.
- தெற்குப்பார்த்தவீட்டின் வடக்குச்சுவர் ஓரமாக, தெற்குப்பார்த்து அலுமாரி வைத்திருப்பவர்கள் வீட்டில், பெண்களுக்கு மருத்துவச் செலவை அதிகப்படுத்தும்.
- மேற்குப் பார்த்த வீட்டுக்குக் கிழக்குச் சுவர் சார்ந்து, மேற்குப் பார்த்து அலுமாரி இருக்குமேயானால், ஆண்கள் தேவையற்ற வீண்செலவுகளைச் செய்வார்கள். ஆண்களுக்கு நோய்க்கான செலவுகள் அதிகரிக்கும்.
- கிழக்குப் பார்த்துஅலுமாரி வைத்தால், மகிழ்ச்சியான செலவுகளைத் தந்து, நிம்மதியையும் இலாபத்தையும் தரும். கண்டிப்பாக செல்வம் சேர்ந்து கொண்டே இருக்கும். மங்கள காரியங்கள் மனையில் நிகழ்ந்த வண்ணம் இருக்கும்.
- வீட்டின், தென்மேற்குச் சார்ந்த மூலை (நைருதி மூலை குபேர மூலை என்று சொல்லப்படும்)யில் அலுமாரியை வைத்தால, பணம் கண்டிப்பாக எப்போதும் இருந்து கொண்டே இருப்பதுடன், பல தேவைகளைச் சிந்தித்து அதற்கேற்ப செலவுகளைச் செய்ய வைக்கும்.

## நாளை
### 24.08.2017
வியாழக்கிழமை

### ஆவணி - 08

திதி: திருதியை மு.இ. 10.35 வரை
நட்சத்திரம்: உத்தரம் பி.ப.04.44
சுபநேரம்: 07.35–09.05 வரை
ராகுகாலம்: 101.035–03.05 வரை

# 'அண்ணே' புகழ் வாசு

## சிரிக்க வைத்து ஓய்ந்த குரல்





■ அதிசயா

மனிதன் ஒருவன்தான் சிரிக்கத் தெரிந்தவன், சிரித்துக் கவலையை மறக்கத் தெரிந்தவன் என்பது எல்லோருக்கும் தெரியும். இதில், தானும் மகிழ்ந்து பிறரையும் சிரிக்கச் செய்யும் மனிதர்கள் அபூர்வப் பிறவிகள். இந்தப் பட்டியலில் தென்னிந்திய சினிமாவில் தனக்கென்று ஒரு தடம்பதித்துள்ள சிறந்த துணை நடிகர் 'அல்வா வாசுவும்' அடக்கம். மண்ணுலகில் தனது சிரிப்புச் சேவையை நல்கிய அவர், விண்ணுலகில் அதனைச் செய்யப் புறப்பட்டுவிட்டார்.

### திரையுலக நுழைவு

மதுரையில், சினிமா பின்னணி ஏதும் இல்லாத ஒரு வசதியான கிராமத்துக் குடும்பத்திலி ருந்து வந்து குழந்தை நட்சத்திரமாக 1970களின் மத்தியில் அறிமுகமானார் வாசுதேவன் என்ற வாசு.
மறைந்த இயக்குநர் மணிவண்ணனிடம் உதவியாளராகப் பணியாற்றி 'வாழ்க்கைச் சக்கரம்' திரைப்படம் மூலம் இவர் நடிகராக அறிமுகமானார். வில்லனாக வரும் ஜெய்கணேசுக்கு எண்ணெய் தேய்த்து விடும்போதும், சிறையில் கைதியாக இருக்கும்போதும் அவர் வசனங்களைப் பேசும் விதம் அத்தனை இயல்பாகவும் சுவாரஸ்யமாகவும் இருக்கும். அப்போதுவரை இவருக்குப் பெயர் வெறும் வாசுதான். அதன்பின்னர் சத்தியராஜின் 'அமைத்திப்படை' திரைப்படம் அவரைப் பிரபலமாக்கி யது. இந்தத் திரைப்படத்தில், அமாவாசைக்கு (சத்யராஜுக்கு) அல்வா வாங்கிக்கொடுத்து 'அல்வா வாசு' என்று அழைக்கப்பட்டார். மணிவண்ணனின், 'கோபுரங்கள் சாய்வதில்லை' என்ற திரைப்படம்தான் வாசு உதவியாளராகப் பணியாற்றிய முதல் படம்.
தொடர்ந்து வடிவேலுவுடன் ஏராளமான திரைப் படங்களில் நடித்து, மக்களைச் சிரிக்க வைத்தவர். 'அண்ணே' என்று திடுதிடுப்பாகவும், பதற்றமாகவும் வடிவேலுவை அழைக்கும் போது சிரிப்பு குபீர் என்று வந்துவிடும்.
'எல்லாம் அவன் செயல்' திரைப்படத்தில் சிறையில் சிக்கிய வடிவேலுவுக்கு பிணை மனு எடுக்கப்போய், 'அண்ணே எல்லா மார்கெட்டுக்கும் போனோம். நெய் மீன் இருக்குன்றான்... நெத்திலி மீன் இருக்குன்றான்... வாளை மீன் இருக்குன்றான்... வஞ்சிரம் மீன் இருக்குன்றான்... ஆனா, ஜாமீன் மட்டும் இல்லவே இல்லைன்னு சொல்லிட்டாங்கண்ணே... கடல்லயே இல்லையாம்' என்று கூறும்போது, உச்சரிப்பின் தனித்துவம் அனைவரையும் சிரிக்க வைத்தது. 'கருப்பசாமி குத்தகைதாரர்' திரைப்படத்தில் படம் முழுக்க வடிவேலுவுடன் வந்து வயிற்றைப் பதம் பார்ப்பார் வாசு. 'நகரம்' திரைப்படத்தில் வடிவேலுவின் 100ஆவது திருட்டுக்கு 'போஸ்டர்' அடித்து ஒட்டி பொலிஸில் மாட்டி வைக்கும் காட்சி நகைச்சுவையின் உச்சம். இப்படி ஒன்றல்ல இரண்டல்ல 900இற்கும் மேற்பட்ட படங்களில் தன் இயல்பான நகைச்சுவையால் மக்களைச் சிரிக்க வைத்தவர் வாசு.

### நோயின் பிடியில்...

சுமார் ஆறு மாதங்களுக்கும் மேலாக அவர் நோயின் பிடியில் அவதிப்பட்டார். நீண்டகாலமாக இயக்குநர் ஆகவேண்டும் என்ற இலட்சியத்தை வாசு சுமந்திருந்தாலும், அது நிறைவேறாத நிலையில் நோயுடன் போராடினார்.
மதுரை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவரைக் காப் பாற்ற முடியாது என மருத்துவர்கள் கைவிட்ட நிலையில், கடந்த 17ஆம் திகதி இரவு அவர் காலமானார். ஒருசில நடிகர்களைத் தவிர, ஏனைய திரை நட்சத்திரங்கள் அவரது இறுதிக்கிரியையில் கலந்துகொள்ளவில்லை.
நட்சத்திர அந்தஸ்து வாய்ந்த நடிகர்கள் இறந்தால், பெருந்திரளில் படையெடுத்து அஞ்சலி செலுத்தும் நடிகர் கூட்டம், துணைநடிகர்களை மட்டும் ஒதுக்கிவிடுவது வேதனை பயக்கும் விடயம். ■



அன்பே...நீ என்
கண்ணில் Uploadஆகி,
என் மனதில் post
ஆகிவிட்டாய்.
நான் உன்னை,
மிகவும் likeசெய்கிறேன்
வாழ்க்கையை,
உன்னுடன் Share செய்ய
ஆசைப்படுகிறேன்...
நீ என்னை, உன் கணவனாக
tag செய்வாயா?
இப்படிக்கு,உன் comment காக
காத்திருக்கும், பேஸ்புக்
காதலன்.....




# ‘மெர்சல்’ படத்தில் விஜய்க்கு அப்பாவாக வடிவேலு?



‘மெர்சல்’படத்தில்நடிகர்வடிவேலுவிஜய்க்குஅப்பாவாகநடித்தள்ளார்என்று தகவல்கள்வெளியாகியுள்ளன. வெளியானபடத்தின்காட்சிஒன்றில்விஜய், வடிவேலுவையும், கோவை சரளாவையும் தோள் மேல் கை போட்டுக் கூட்டிவருகிறார். அந்தப் படத்தைப் பார்த்தால் வடிவேலு விஜய்யின் தந்தையாக நடிப்பது கிட்டத்தட்ட உறுதியாகிறது.

இயக்குநர் அட்லீ, “வடிவேலு இந்தப் படத்தில் நகைச்சுவை கலந்தும் சீரியசாகவும் சிறப்பாக நடித்திருக்கிறார். மறைந்த நடிகர் மணி வண்ணனைப் போலான பாத்திரத்தில் சிறப்பாகச் செய்திருக்கிறார்” எனக் கூறினார். வடிவேலுவின் பெயரைக் கேட்டதும் ரசிகர்கள் விசிலடித்து தங்கள் எதிர்பார்ப்பைத் தெரிவித்தனர்.

## கொஞ்சம் சிரிப்போம்...



**டாக்டர் :** ஏங்க, உங்க மனைவிய நாய் கடித்ததே....!!! என்ன முதல் உதவி செஞ்சீங்க....???
**வந்த நபர் :** அந்த நாய்க்கு ஒரு பிரியாணி வாங்கிப் போட்டேன்....!!!



**ஆசிரியர்:** யார் அடுத்த கேள்விக்குப் பதில் சொல்றாங்களோ அவங்க வீட்டுக்குப் போகலாம்.
(உடனே ஒரு பையன் அவன் புத்தகப் பையைத் தூக்கி வெளியே போட்டான்)
ஆசிரியர் : (கோபமா) எவன்டா புத்தகப் பையைத்தூக்கி வெளிய போட்டது..
**மாணவன்** : நான் தான் டீச்சர் பதில் சொல்லிட்டேன். கிளம்புறேன்..

*நாங்க எப்போதும் இப்படித்தான்...*



எதுக்குடா என்னை போட்டோ கிராபரா கூப்பிட்டீங்க...

## இன்றைய நாள்

**மேடம்:** உங்களின் நற்செயல்களை சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் ஓரளவே இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்பட சமாளிப்பர்.

**இடபம்**: புதிய உற்சாகத்துடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். திகைப்புத் தந்த பணியை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முதலீட்டை அதிகப்படுத்தி லாபம் காண்பீர்கள்.

**மிதுனம்:**மனக்குழப்பம் நீங்க, குடும்பத்தினரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**கடகம்:** உங்களின் பேச்சில் மங்கலத்தன்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர்.

**சிங்கம்:** சிலரது பேச்சு பாதிப்பை ஏற்படுத்தலாம். காலம் தந்த அனுபவப் பாடத்தை மறக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பொறுப்பு ஏற்க நேரிடும்.

**கன்னி:** சமூக பொறுப்புடன் செயற்படுவீர்கள். நல்லவர்களின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி திட்டமிட்டபடி நிறைவேறும்.

**துலாம்:**உங்களிடம் புதியவரும் நட்புப் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், கூடுதல் வருமானமும் கிடைக்கும். பணியாளர்கள் பணியிலக்கை விரைந்து முடிப்பர்.

**விருச்சிகம்:** செயலில் தாமதம் ஏற்படுவதால் வருத்தம் உண்டாகலாம். கூடுதல் உழைப்பு தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற உதவும். நண்பர் வகையில் திடீர் செலவு ஏற்படலாம்.

**தனுசு:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் நம்பிக்கைக்கு உரியவராகத் திகழ்வர்.

**மகரம்:** சமூகத்தில் மதிப்பு உயரும். தொழில், வியாபார வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும். இலாபம் பன்மடங்கு உயரும். பிள்ளைகள் விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள்.

**கும்பம்:** பேச்சில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். பணியாள்ர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**மீனம்:** குடும்ப சிரமத்தை பிறரிடம் பேசக் கூடாது. தொழில், வியாபாரத்தில் வருகிற குறுக்கீடுகளை உடனுக்குடன் சரிசெய்வது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 2 | | | | | | |
| | | | | | 5 | | | |
| | | 5 | | 4 | | 3 | 9 | |
| | | 3 | 5 | | 8 | 4 | | 6 |
| | | | | | | | | |
| 8 | | 1 | 3 | | 2 | 7 | | |
| | 7 | 6 | | 2 | | 8 | | |
| | | | 4 | | | | | |
| | | | | | | 9 | 2 | 3 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 8 | 6 | 9 | 3 | 5 | 7 | 4 |
| 7 | 6 | 5 | 4 | 1 | 2 | 9 | 3 | 8 |
| 4 | 9 | 3 | 7 | 5 | 8 | 6 | 1 | 2 |
| 2 | 8 | 6 | 3 | 7 | 4 | 1 | 9 | 5 |
| 9 | 7 | 1 | 5 | 2 | 6 | 8 | 4 | 3 |
| 3 | 5 | 4 | 9 | 8 | 1 | 2 | 6 | 7 |
| 5 | 1 | 9 | 8 | 4 | 7 | 3 | 2 | 6 |
| 6 | 4 | 2 | 1 | 3 | 5 | 7 | 8 | 9 |
| 8 | 3 | 7 | 2 | 6 | 9 | 4 | 5 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்].
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே

இந்த ஜிம்முக்குப் போற பசங்கள பாத்த உடனே கண்டுபிடிச்சிடலாம்...



இரண்டு கையிலையும் சாம்பார் வாளிய தூக்கிட்டு நடக்கிற மாதிரியே நடப்பாங்க....

நாளைக்குச் செய்யலாம் என்று தள்ளிப் போடாம எல்லோருமே செய்யிற ஒரே விடயம்



மொபைல சார்ஜ் போடுறதாத்தான் இருக்கும்...

You Retweeted
மாஸ்டர் பீஸ் @Kannan Tweetz · Jul 7
விரும்பியதை அடைய சத்தம் போட்டு அழுவதில் தொடங்கி விரும்பியதை மறக்கச் சத்தம் இல்லாமல் மௌனமாக அழுவதில் முடிந்து விடுகிறது வாழ்க்கை.
16 344 418

# ஆமணக்கு எண்ணெயின் மருத்துவக் குணங்கள்

ஆமணக்கு வறண்ட நிலத்திலும் கூட நன்கு வளரும் தாவரம். பெரும்பாலும் விதைகளுக்காகத்தான் இவை பயிரிடப்படுகின்றன. ஆமணக்கில் 16 வகைகள் இருந்தாலும் சிற்றாமணக்கு, பேராமணக்கு, செவ்வாமணக்கு, காட்டாமணக்கு ஆகிய 4 ஆமணக்கு வகைகள்தான் எளிதாக எல்லா இடங்களிலும் கிடைக்கின்றன. இவைதான் மருத்துவப் பண்புகள் நிறைந்ததாகவும் உள்ளன. இவற்றில் ஆமணக்கு, சிற்றாமணக்கு, செவ்வாமணக்கு ஆகிய மூன்றும் ஒரே வகைத் தாவரங்கள். காட்டாமணக்கு வேறு வகையானது.


சிற்றாமணக்கின் விதைகள் சிறியதாக இருக்கும். ஏனையவை அவற்றைவிடவும் சற்றுப் பெரிதாக இருக்கும். செவ்வாமணக்கு சிவப்பு நிறத் தண்டுகளைக் கொண்டது. தவிர இவை ஆமணக்கை ஒத்தே இருக்கும். உள் மருந்துகளுக்குச் சிற்றாமணக்கு எண்ணெய், வெளிப்பூச்சு மருந்துகளுக்குஆமணக்கு எண்ணெய் என எடுத்துக்கொள்ள வேண்டும்.

60 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் நல்லெண்ணெய் (எள் எண்ணெய்), ஆமணக்கு எண்ணெய் (விளக்கெண்ணெய்) வகைகளே அதிகளவான மக்களின் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளன. அதிக வருமானம் உடைய மக்கள் கூட்டத்தினர் தேங்காய் எண்ணெய் பயன்படுத்தி வந்துள்ளனர். உடலுழைப்பாளிகள் பயன்படுத்தி வந்தது ஆமணக்கு எண்ணெய் மட்டுமே.

வயல்வெளி, ஆறு, வாய்க்கால் மற்றும் ஏரிக் கரைகளிலும் தன்னிச்சையாக வளர்ந்திருந்த சிற்றாம ணக்குச் செடிகளிலிருந்து விதைகளை மக்களே சேகரித்தனர். அவர்களின் வீட்டு அடுப்பங்கரையிலேயே எண்ணெய் தயாரித்தனர். அதையே சமையலுக்கும், வலி தீர்க்கும் தைலமாகவும் பயன்படுத்தி வந்துள்ளனர்.

தவிர வயிறு, குடல், கர்ப்பப்பை நோய்களுக்கும் ஆரம்பக்கட்ட மருந்தாக இதனை பயன்படுத்தியிருக்கின்றனர். இந்த எண்ணெய் புகையின்றி எரியக்கூடியது. அதனால், இரவு நேரங்களில் விளக்கை ஒளிர்வூட்ட இதனைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அதனால்தான், ஆமணக்கெண்ணெய், 'விளக்கெண்ணெய்' ஆனது என்ற கதை சொல்லப்படுகிறது.

சிற்றாமணக்கு விதைகளே சிறந்த மருத்துவக் குணத்தைக் கொண்டுள்ளன. ஆமணக்கிலிருந்து இரண்டு முறைகளில் எண்ணெய் எடுக்கலாம். ஆமணக்கு விதைகளை இயந்திர வலுவுடைய செக்குகளில் இட்டு, ஆட்டி எண்ணெய் பிழிவது ஒரு வகை. ஆமணக்கு விதைகளை இடித்துத் தண்ணீரில் கொதிக்க வைத்து எண்ணெய் பெறுவது இன்னொரு முறை. இந்த இரண்டாவது முறை, 'ஊறின எண்ணெய்' என்று அழைக்கப்படுகிறது. இந்த முறையில்தான் எமது





மூதாதை யர்கள், எண்ணெய் தயாரித்துப் பயன்படுத்தியுள்ளனர்.

பருப்பு வேகவைக்கும்போது அதில் இரண்டு துளி எண்ணெயை சேர்த்தால் பருப்பில் உள்ள வாயு நீங்கிவிடும். பிறந்த குழந்தை முதல் கர்ப்பிணி மற்றும் முதியோர் வரை அனைவருக்குமான சிறந்த குளியல் எண்ணெயாக இவ்வை விளங்குகின்றன. மலச்சிக்கலை நீக்கும் பாதுகாப்பான மருந்து இது. காய்ச்சிய எண்ணெய்யில் 3 முதல் 5 துளிகள் வரை இரவு நித்திரைக்குச் செல்லும் முன் அருந்தி வர, மலச்சிக்கல் நீங்கும். சிறு குழந்தைகளுக்கு 2 துளிகள் போதுமானது.

பெண்களின் சுகப்பிரசவத்திற்கு இந்த எண்ணெய் பெரிதும் பயன்பாடுடையது. இது போன்று எண்ணற்ற சிறப்பான மருத்துவ குணங்களை இவை கொண்டுள்ளன.

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவுக்கு ஊர்காவற்றுறைநீதிவான்மன்று உத்தரவிட்டது.

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் முக் கிய சந்தேகநப ரான சுவிஸ்குமார் யாழ்ப்பா ணம் பொலிஸ் நிலையத்தில் இருந்து தப்பிச் செல்ல உதவியமை தொடர்பிலான வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஏ.எம்.எம். றியாழ் முன்னிலையில் நேற்று விசார ணைக்கு வந்தது.

இந்த வழக்கின் சந்தேகநபரான வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க நீதிமன் றில் முற்படுத்தப்பட்டார். அதேவேளை மற்றைய சந்தேகநப ரான யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் சு.சிறிகஜன் தலைமறைவாகியுள்ள நிலையில் அவ ருக்கு எதிராக நீதிமன்றால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விசாரணையின் போது , மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க சார்பில் மன்றில் முன்னிலையான நான்கு சட்டத் தரணிகளும் சந்தேகநபருக்கு பிணை கோரியிருந்தனர்.

"இந்த வழக்கு விசாரணைகள் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட வில்லை. இது கடந்த இரண்டு வருட காலமாக நடைபெற்று வருகின்றது. ஆனால் தற்போது தான் இந்த வழக்குத் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலங்களைப் பெற்று வருகின்றனர்" என சந்தேகநபர் சார் பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மன்றுக்கு சுட்டுக்காட்டினார்கள்.

"இந்த வழக்கில் தொடர்புடைய மற்றைய சந்தேகநபரான சிறிகஜன் என்பவர் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லும் எண்ணத்துடன் வந்தி ருந்த வேளை கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் வைத்து அவரது பயண அனுமதி நீக்கம் செய்து திருப்பி அனுப்பப்பட்டார் என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர். சிறிகஜன் வானூர்தி நிலையம் வந்து திருப்பி அனுப்பப்பட்டமை தொடர்பில் வானூர்தி நிலைய பாதுகாப்பு கமராக்களின் காணொலிப் பதிவுகளைப் பெற வேண்டும்" என்றும் சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மன்றில் கோரினார்கள்.

இந்த வழக்குத் தொடர்பில் கடந்த வாரம் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ் வரன், முன்னாள் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிந்தக்க பண்டார, உள்ளிட்ட நால்வரிடம் பெறப்பட்ட வாக்கு மூலங்களை குற்ற புலனாய்வுப் பிரிவினர் மன்றில் பாரப்படுத் தினார்கள்.

அத்துடன் இந்த வழக்குத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராசா, பொதுமகன் [illegible] ஒருவா மற்றும் 4 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோரிடம் வாக்கு மூலங்களைப் பதிவு செய்ய உள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றில் தெரிவித்தனர்.

இந்த வழக்குத் தொடர்பில் வாக்குமூலங் களைப் பதிவு செய்யவுள்ளவர்களிடம் அதனை விரைந்து பதிவு செய்யுமாறும் அடுத்த வழக்குத் தவணையின் போது அவற்றை மன்றில் பாரப்படுத்த வேண்டும் என நீதிவான் உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து சந்தேகநபரான வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்கவை எதிர்வரும் 4ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தர விட்டது.

(வ-37)

## தனி அறையால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ் செழியன் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய வழக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. முதன்மைச் சந்தேகநபர் உள்ளிட்ட 3 சந்தேக நபர்களும் மன்றில் முற்படுத்தப் பட்டனர். அவர்களின் விளக்கமறியலை நீடித்து நீதிவான் வழக்கேட்டில் திகதியிட்டார்.

அப்போது ஜெயந்தன் கையை உயர்த்தி, "சிறைச்சாலையில் என்னைத் தனி அறை யில் வைத்திருக்கின்றார்கள். அதனால் நான் மனஅழுத்தத்துக்கு உள்ளாகிறேன்" என்று தெரிவித்தார். தன்னைத் தனி அறையில் அடைக்க வேண்டாம் என்று கோருவதாக அவரது கோரிக்கை அமைந்தது. எனினும் நீதிவான் அவரது கோரிக்கையைப் பரிசீலிக்க வில்லை. அவர் உள்ளிட்ட மூவருக்கும் எதிர்வரும் 4 ஆம் திகதிவரை விளக்கமறி யல் நீடிக் கப்பட்டது.

நல்லூரடியில் கடந்த மாதம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், நீதிபதி இளஞ் செழியனின் பாதுகாவலரான பொலிஸ் உத்தியோகத்தர் கேமரத்ன உயிரிழந்தார். மற்றொரு பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயமடைந்தார்.

(உ-4-106)

### வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42 ஆம் வீதியிலுள்ள இரண்டு அறைகள் (A/C. Non A/C) இணைந்த குளியலறைகளுடன்கூடிய தொடர்மாடி வீடு [illegible] நாள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு - 077 837 8597

### வேலைவாய்ப்பு

கைதடி வடக்கிலுள்ள தையல் நிலையத்தில் பெண்களுக்குரிய ஆடைகளை வெட்டி தைத்து கொடுக்கக்கூடிய பெண்கள் தேவை.

தொடர்பு - 077 837 8597

### மரண அறிவித்தல்

**திருமதி பரமேஸ்வரி சிவராசா**



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது No.51, B.A. தம்பி லேன், வண்ணார்பண்ணையில் வசித்து வந்தவருமாகிய திருமதி பரமேஸ்வரி சிவராசா நேற்று (22.08.2017) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**No. 51, B.A. தம்பிலேன்,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்: மகன்
சி.தயாபரநாதன் (H.N.T)
0212217218, 077 510 2531

### மரண அறிவித்தல்

**திருமதி சறோஜினிதேவி மகேஸ்வரன்**

( அன்ரா ரீச்சர்) (ஓய்வு பெற்ற ஆசிரியை)



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் அச்செழுவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி மகேஸ்வரன் (21.08.2017) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் - யோகாம்பிகை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மகேஸ்வரனின் அன்புமனைவியும் காலஞ்சென்ற மகேஸ்வரி தம்பையா ஆகியோரின் அன்புச்சகோதரியும் கேதீஸ்வரன் (கனடா), கோணேஸ்வரி (ப.நோ.கூ.ச. நீர்வேலி), யோகேஸ்வரி (ஜேர்மனி), பேரானந்தமூர்த்தி (மதுர் டீசல் என்ஜினியர்ஸ் சுன்னாகம்), கிருபேந்திரமூர்த்தி (வதிரி) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற பரமேஸ்வரி, நடராசா காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் இராஜேஸ்வரி, பேராதரன், சுந்தரலிங்கம், சதரூபி, நவரஞ்சினி ஆகியோரின் அன்புமாமியும் அபினா, சகினா - ரஷல், கஜனுஜன், கிரிஜனன், சுகேதன், யுவிதா, தர்நீதன், பௌஷிகா, பேஷிகா, கஜானன், நிகேதன், மதுரிகா, சிந்தனா, கலைவாணி, டர்சிகா, பகீரதன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஈர்தனின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.08.2017) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஈஸ்வர இல்லம்' அச்செழு, நீர்வேலி.
077 950 7257, 077 670 1652

தகவல்:
குடும்பத்தினர்.

### அந்தியேட்டி வீடுக்கிருத்திய அழைப்பு



கடந்த 24.07.2017 திங்கட்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**அமரர் அ. ஜெயபாரதிதேவி**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று
(23.08.2017) புதன்கிழமை
அதிகாலை 5 மணியளவில் கீரிமலை புண்ணிய
தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள்
அன்றைய தினம் (23.08.2017)
பி.ப. 1.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும்
நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சேவில் ஒழுங்கை, தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

# விளம்பரங்கள்



உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம்: 593 வர்ணம்: மஞ்சள்

சீட்டிழுப்பு திகதி: 22.08.2017

27 46 49 55 S

03 32 53 65

ரூ. 32,686,311/-

Web: www.dlb.lk

சீட்டிழுப்பு வாரம்: 179

வர்ணம் : இளஞ்சிவப்பு

சீட்டிழுப்பு திகதி: 22.08.2017

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்

ரூ. 99,211,148/-

E 03 19 30 36

02 37 42 63

Web: www.dlb.lk

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 2017.08.22 | 2175 | நீலம் |

துலாம்

வெற்றி இலக்கங்கள்

09 13 14 30

வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 771, 276/=

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்

22 25 54 60

2017.08.25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824, Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## வேலைவாய்ப்பு

**இளைஞர் யுவதிகளுக்கான அரிய சந்தர்ப்பம்**

**எமது குறிக்கோளானது இளையோரான உங்களிற்கு இவ்வுலகில் விரைவாக வளர்ச்சி காணும் துறையொன்றில் முறையான பயிற்சியுடன்கூடிய தொழில் வாய்ப்பு ஒன்றை வழங்குவதாகும்.**

- ❋ இவ்வருடம் A/L பரீட்சை எழுதியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ❋ பயிற்சியின்போது 12 000 – 18 000 வரையும்.
- ❋ பயிற்சியின் பின் 30 000 – 75 000 வரையும் வருமானம் பெற்றுக்கொள்ளலாம்.
- ❋ தங்குமிட வசதியுண்டு.

**தொடர்புக்கு :**

**077 298 6763, 077 062 1631, 077 499 3943**

## KERALA CONSTRUCTION

- சகலவிதமான கட்டட வேலைகள்
- கூரை வேலைகள், கதவு யன்னல் வேலைகள்
- வீடுகள் கட்டுதல் மற்றும் திருத்த வேலைகள்

என்பன குறித்த நேரத்தில் மிக உறுதியாக செய்து தரப்படும்.

குறிப்பு – அரசாங்க உத்தியோகத்தர் மற்றும் நிரந்தர தனியார் உத்தியோகத்தர்களுக்கு விசேட சலுகைகள் உண்டு.

தேவை – அனுபவம் வாய்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப பயிலுனர் அவசரமாக தேவை.

**தொடர்பு – ச.பாபுஜயா. 077 9076 843**

## கண்ணீர் அஞ்சலி

சங்க உறுப்பினர்

**சுப்பிரமணியம் தர்மகுலசிங்கம்**

அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி வள்ளி சுப்பிரமணியம்**

(கைதடி தென் கிழக்கு)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சாவகச்சேரி பிரதேசசபை ஊழியர் நலன்புரி சங்கம்.**

**கொடிகாமம்**

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பகுதித்தலைவர் **மோகன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**செல்லையா குலநாயகம்**



அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி**

## வீடு வாடகைக்குண்டு

யாழ். ஆஸ்பத்திரியில் இருந்து 1Km தூரத்துக்குள் உடனடியாக வாடகைக்குண்டு.

**076 900 2588**

## காணவில்லை

செங்குந்தா சந்தை சுற்றாடலில் இருந்து வெள்ளையில் சிவப்பு வட்டங்கள் கொண்ட நிறமுடைய கொம்பு வளர்ந்து உள் நோக்கி வளைந்த நிலையில் உள்ள பசு மாடு ஒன்றைக் காணவில்லை. கண்டவர்கள் தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்பு - 077 322 3136**

## கடை வாடகைக்கு உண்டு

இரண்டு பெரியகடை வாடகைக்கு உண்டு. முன் வாகன தரிப்பிட வசதி உண்டு. எந்த வியாபாரமும் செய்வதற்கும் உகந்த இடம்.

**தொடர்பு - 076 785 1067**

## வேலைவாய்ப்பு

Argon Wilding (வெள்ளிரும்பு ஒட்டுவேலை) வேலை தெரிந்த அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை.

**பாப்பா வெல்டிங் வேக்ஸ்**
**210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 2588, 077 974 9343, 076 684 9128**

## மெஹந்தி டிசைனர்

திருமண வைபவங்கள் மற்றும் ஏனைய சுபகாரியங்களுக்காக மெஹந்தி அணிவிக்கப்படும்.

**தொடர்பு - 078 708 9713**

## Technician தேவை/பயிலுனர் தேவை

கொழும்பில் இயங்கி வரும் டிஷ் ஆண்டெனா/ கேபிள் டிவி உதிரிப்பாக விற்பனை/ பிட்டிங் மற்றும் Repair செய்யும் நிறுவனத்துக்கு கீழ் காணும் வெற்றிடம் உள்ளது.
அனுபவமுள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

- டிஸ் ஆண்டெனா பிட்டிங் நன்கு செய்ய தெரிந்த Technicians (சம்பளம் 30, 000/= .... கமிஷன்)
- Receiver ரிப்பேர் செய்ய தெரிந்த Technicians சம்பளம் 40, 000/= வரை.
- டிஸ் ஆண்டெனா பிட்டிங் பழக விருப்பமுடைய பயிலுனர் சம்பளம் 20,000/=
- Store Keeper And Bill Clerk Salary 25,000/=
- உணவு, தங்குமிடம் இலவசம். **077 771 0785**

**SATS - TECH ENGINEERS (Pvt)Ltd.**
No.51/102 woulfendhal Street,
Colombo - 13

## முதலாம் ஆண்டு நினைவுதினம்

**திருமதி சபிதா மெய்யழகன்**



தோற்றம்
03.11.1966

மறைவு
02.09.2016

திதி : ஆவணி பூர்வபக்க துதியை

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு அணைந்து
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் – உங்கள்
நினைவு எம்மனதை விட்டகலாது
ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

" கிருஷ்ணபதி "
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

அன்புக் கணவர் - மா.மெய்யழகன்
அன்பு மகள் - மெ.இங்கிதை
அன்புத் தந்தை - க.பாலகிருஷ்ணன்

## மரண அறிவித்தல்

**சிங்கராசா ஆனந்தராசா**



தோலகட்டி, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் நீதிமன்ற வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராசா ஆனந்தராசா கடந்த (21.08.2017) திங்கட் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கராசா - இராசம்மா தம்பதியரின் செல்வப்புதல்வனும் காலஞ்சென்ற அரியகுட்டி மற்றும் சிரோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் நாகபூசணி (கெங்கா) யின் அன்புக் கணவரும் ஆனந்தரஜனி, ஆனந்தநிர்மலன், ஆனந்தமோகனதாஸ் (ராஜன் சுவிஸ்), ஆனந்தநிரோசன் (ஆசிரியர் பொலனறுவை), ஆனந்தநிரோசினி ஆகியோரின் அன்புத் தந்தையும் குயின் மேரி, காலஞ்சென்ற அமிர்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் விக்னேஸ்வரன், குணசிங்கம், செல்லம்மா, ஈஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் குணசீலன், விஜயா, பிறேமினி (சுவிஸ்), தனுசா, குமுதினி, டெல்சன், கில்சன், குயின்ரினி ஆகியோரின் மாமனும் சுரேஸ், சுதா, சுசி, சுயன், விஜே (சவுதி), கஜி, விஜேந்தினி, விது (கட்டார்), வினு, வினுசா ஆகியோரின் பெரியப்பாவும் நிக்ஷலா, ஜெலோ, ஜெனோபன், லக்ஷி, பிரவீன், அபினதா (சுவிஸ்), குயின்ரன், றஜீபா, டக்ஷிகா, தர்சனா, சுபாஸ், அனோஜன், அஸ்மினா, அக்ஷயா, அன்சலோ, றியான், கில்மிஷா, கிஸ்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை திருப்பலி குளமங்கால் மல்லாகம் புனித சவேரியார் ஆலயத்தில் இன்று (23.08.2017) புதன் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் குளமங்கால் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**075 607 0137, 077 068 8209, 077 939 0289**

**தகவல்: குடும்பத்தினர்.**

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்

### தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய உற்சவம்– 2017
### தொண்டைமானாறு மேற்குக்கரை வாகனத் தரிப்பிடம் குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வாகனத் தரிப்பிடம் 2017.09.01 ஆம் திகதி தொடக்கம் 2017.09.07 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 2017.08.23 - 2017.08.29, 12.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் திகதி : 2017.08.29 பிற்பகல் 2.00 மணிவரை
கேள்விதிறக்கும் திகதி : 2017.08.29ஆம் திகதி பி.ப 2.30மணி

01. கேள்விப்பத்திரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் மீளளிக்க முடியாத படிவக் கட்டணமும், மீளளிக்கக் கூடிய கேள் விவைப்புப் பணமும் பணமாகச் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.
02. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் வாகனத் தரிப்பிடத்தின் பெயரும், இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் மூலப்பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற வேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்குமுன் இடப்படல் வேண்டும்.
03. பிரதேச சபையில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்படமாட்டாது.
04. கேள்வி திறக்கப்படும்போது கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
05. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் அவர்களால் எடுக்கப்படும் முடிவே இறுதியானதாகும்.
06. குறித்த காலத்தில் வாகனத் தரிப்பிடம் நடத்துவதற்கு பொருத்தமான இடம் ஒதுக்கித் தரப்படும்.
07. மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

| தொ. இல | தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய உற்சவகால வாகனத் தரிப்பிடம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்பு மீளளிக்கக் கூடியது | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | தொண்டைமானாறு மேற்குக்கரை வாகனத் தரிப்பிடம் | 100,000.00 | 10,000.00 | 500.00 |

2017.08.23

**யுகராஜா ஜெலீபன்**
**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

## குணசீலன்...

கிடைக்கப்பெறும் பதிலைப் பொறுத்தே, அமைச்சரவைப் பதவியேற்பு நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சை ரெலோவின் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஞா.குணசீலனுக்கும், விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சை புளொட்டின் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த க.சிவநேசனுக்கும் (பவான்) வழங்க உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநருக்கு நேற்றைய தினம் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடிதம் எழுதியுள்ளார்.

அத்துடன் அமைச்சர் பா.டெனீஸ்வரன் வகித்த அமைச்சுப் பொறுப்புக்களில் வர்த்தக வாணிபத்தை திருமதி அனந்தி சசிதரனுக்கு வழங்குமாறும், ஏனையவற்றை தான் பொறுப்பேற்பார் எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பதவியேற்புக்கு உடனடியாக ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநருக்கு பல தடவைகள் முதலமைச்சர் அலுவலகத்தினால் நேற்றுக் கோரிக்கை விடுக்கப்பட்டது. இறுதியாக இன்று பி.ப. 2 மணிக்கு பதவியேற்புக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தினால் முதலமைச்சருக்கு அறிவிக்கப்பட்டது. (உ-5)

## குணசீலனின்...

அந்த நியமனத்தை எம்மீது பலவந்தமாக திணிக்க முயற்சிப்பதாகவே முடியும். இதனை ஒருபோதும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அனுமதிக்கவும் மாட்டோம். நிகழ்ந்துகொண்டிருக்கும் இந்த அரசியல் தவறை நிவர்த்தி செய்ய நீங்கள் முன்வரவேண்டும். ரெலோவுக்கு சுயமரியாதை உண்டு. எந்தச் சூழ்நிலையிலும், எந்தக் காரணத்துக்காகவேனும், அதனை நாங்கள் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்பதைத் திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், ரெலோவின் பொதுச் செயலர் ந.சிறிகாந்தா காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ரெலோ சார்பில் பதவியில் உள்ள பா.டெனீஸ்வரனை நீக்கிவிட்டு, க.விந்தனை நியமிக்குமாறு ரெலோ கட்சி முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு கடிதம் அனுப்பியிருந்தது. விந்தனை நியமிக்க முடியாமைக்கு வருத்தம் தெரிவித்து முதலமைச்சர் கடிதம் அனுப்பியிருந்தார். அதற்குப் பதிலளித்து அனுப்பிய கடிதத்திலேயே சிறிகாந்தா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்ததாவது:

நான்கு கட்சிகளைக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆளும்கட்சியாக அமர்ந்திருக்கும் வடமாகாண சபையின் அமைச்சரவையில், எமக்குரிய ஆசனத்தை எமது கட்சியிலிருந்து யாரைக் கொண்டு நிரப்பவேண்டும் என்பது முற்றுமுழுதாக எமக்குரிய விடயமாகும்.

ஒருவேளை, எம்மால் முன்வைக்கப்படுபவர் தொடர்பில், ஏதாவது மனவிலக்கு, முதலமைச்சர் என்ற முறையில் தங்களுக்கு ஏற்பட்டு, அதனை நீங்கள் தெரிவித்திருந்தால், அதற்கான காரணத்தை ஆராய்ந்து எமது நியமனத்தை நாம் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தியிருப்போம். எம்மால் முன்மொழியப்பட்டு இருப்பவர் தொடர்பில் அப்படி எதுவும் தங்களுக்குக் கிடையாது என்பது தெட்டத்தெளிவானது. தங்களின் கடிதமும் அதையே தெரிவித்து நிற்கின்றது.

எங்கள் பெயரில் உங்கள் தெரிவாக எவரையும் அமைச்சரவையில் ஏற்றுக்கொள்ள நாம் தயாரில்லை. நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், வடமாகாண அமைச்சரவை அமைக்கப்பட்ட பொழுது, எமது கட்சியின் சார்பிலும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பிலும், அதில் நியமிக்கப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட கட்சிகளால் முன்மொழியப்பட்டவர்கள் அல்லர். மாறாக, உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அதனுடைய விளைவுகள் நாம் எல்லோரும் அறிந்தவையே.

எமது கட்சியின் சார்பில் எமது மாகாணசபை உறுப்பினர் ஒருவரை நீங்களே தேர்ந்தெடுத்து அமைச்சராக்குவது என்பது, குறித்த நியமனத்தை எம்மீது பலவந்தமாகத் திணிக்க முயற்சிப்பதாகவே முடியும். இதனை ஒருபோதும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அனுமதிக்கவும் மாட்டோம்.

இப்பொழுதும் காலம் கடந்துவிடவில்லை. நிகழ்ந்துகொண்டிருக்கும் இந்த அரசியல் தவறை நிவர்த்தி செய்ய நீங்கள் முன்வர வேண்டும். வடமாகாணசபையின் எஞ்சியுள்ள பதவிக் காலத்தில் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு செயலாற்றுவதற்கு இது அவசியமானது.

எமது கட்சிக்கு சுயமரியாதை உண்டு. எந்தச் சூழ்நிலையிலும், எந்தக் காரணத்துக்காகவேனும், அதனை நாங்கள் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் என்றுள்ளது. (உ-5-101)

## இடியப்ப...

நீக்குவது அவருக்கு இலகுவாக இருக்கவில்லை. எனினும் அமைச்சர் நியமனத்தின் போது தமிழ் அரசுக் கட்சியைப் பழிவாங்கினார் என்பதால் அந்தக் கட்சி அமைச்சரவையில் இடம்பெறுவதில்லை என்று முடிவெடுத்தது. அதனால் சுகாதார அமைச்சராக இருந்தவரான ப.சத்தியலிங்கம் பதவி விலகினார். இதனால் மூன்றாவது அமைச்சர் பதவி வெற்றிடமானது.

நான்காவது அமைச்சரான மீன்பிடி மற்றும் போக்குவரத்துந்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் தானாகப் பதவி விலக அடியோடு மறுத்துவிட்டார். முடிந்தால் பதவி விலக்குங்கள் என்றார். இதை அடுத்து அவரை பதவி நீக்கம் செய்வதாக முதலமைச்சர் வடக்கு மாகாண ஆளுநருக்கு அறிவித்தார். அவரது அமைச்சுப் பொறுப்புகளில் ஒன்றை அமைச்சர் அனந்தி சசிதரனுக்கு கொடுப்பதுடன் ஏனையவற்றை தான் பொறுப்பேற்கிறார் என்றும் அறிவித்தார்.

அப்படி தனது அமைச்சர் ஒருவரை பதவி நீக்கிவிட்டு வேறு ஒருவரை நியமிக்கும் அதிகாரம் முதலமைச்சருக்கு இருக்கிறதா என்பது தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரையை ஆளுநர் கோரியிருப்பதால் அமைச்சர் டெனீஸ்வரனின் பதவி நீக்கம் இன்னும் செல்லுபடியாகாமலேயே அந்தரத்தில் தொங்குகிறது.

இதற்கிடையில் ரெலோ அமைப்பு சார்பில் டெனீஸ்வரனுக்குப் பதிலாக மாகாண சபை உறுப்பினர் க.விந்தனை அமைச்சுப் பதவியில் அமர்த்துமாறு பரிந்துரைக்கப்பட்டபோதும் அதனை நிராகரித்த முதலமைச்சர் மருத்துவர் குணசீலனை சுகாதார அமைச்சராக நியமிக்க ஆளுநருக்குப் பரிந்துரைத்திருக்கிறார். முதலமைச்சரது அந்த நியமனத்தை ஏற்க ரெலோ உடனடியாகவே மறுத்துவிட்டது. அதன் செயலாளர் சிறிகாந்தா முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் தங்கள் தெரிவு விந்தனே, எந்தக் காரணமாக இருந்தாலும் வேறு யாரையும் தமது கட்சி சார்பில் ஏற்க முடியாது என்று தெரிவித்திருக்கிறார்.

இதனால் இப்போது கட்சியின் முடிவை மீறி குணசீலன் பதவியை ஏற்பாரா என்கிற இழுபறி தோன்றியிருக்கிறது.

விந்தனை நிராகரித்து எழுதிய கடிதத்தில் நான்காவது அமைச்சராக முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பவான் எனப்படும் க.சிவநேசனை நியமிக்க இருக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கிறார். பத்திரிகையாளர் சிவராம் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர் என்று கூறப்படுவதால் இதே சிவநேசனுக்கு அமைச்சுப் பதவி வழங்க முடியாது என்று முன்னர் அவருக்கே கடிதம் எழுதியவர் முதலமைச்சர்.

ஆனால் இப்போது அந்தக் கொலைக்குற்றச்சாட்டில் இருந்து பவான் எப்படி விடுவிக்கப்பட்டார் என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்தாமல், புளொட் அமைப்பின் தெரிவு அவரே என்பதாலும் அவருக்குப் பதவியை வழங்க முன்வந்துள்ளார் முதலமைச்சர்.

இதற்கிடையில் டெனீஸ்வரனின் பதவி நீக்கம் குறித்து சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரை நேற்று மாலை வரை ஆளுநர் அலுவலகத்துக்கு கிடைக்கவில்லை. அனேகமாக இன்று அது கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒருவேளை டெனீஸ்வரனை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் முதலமைச்சருக்கு இல்லை என்று பரிந்துரைக்கப்பட்டால் பவானின் நியமனம் கேள்விக்குறியாகிவிடும்.

இப்படி மேலும் மேலும் இடியப்பச்சிக்கலுக்குள் சென்றுகொண்டிருக்கிறது வடக்கு மாகாண அமைச்சர்கள் நியமனம். (உ)

## ஒரு...

விளக்கங்களை வழங்க வேண்டியுள்ளது.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினால் முன்னிலைப்படுத்தப்பட்டு வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டவர். அவர் அதிகூடிய வாக்குகளைப் பெறுவதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் கூட்டுக்கட்சிகளும் உழைத்ததை எவரும் மறக்கமாட்டார்கள். ஏகோபித்த ஆதரவு என்பது தமிழ் அரசுக் கட்சியின் ஊடாகவே வந்தது. தேர்தலில் வெற்றி பெற்றவுடன் தான் எந்தக் கட்சியுமில்லை எனக் கூறி கட்சித் தலைமையை மதிக்காமல் தொடர்பேதுமின்றி செயற்பட்டு வந்தார் சி.வி.விக்னேஸ்வரன். கொழும்பிலிருந்து வந்தவருக்கு வீட்டுடனான பணிமனை வசதிகள் யாவும் ஏற்பாடு செய்து கொடுத்தது தமிழ் அரசுக் கட்சியே.

வடக்கு மாகாண சபையில் முறைகேடுகள் தொடர்பில் அமைச்சரவை மாற்றப்பட வேண்டுமென்று பேசப்பட்டு வந்தது. விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. முதலமைச்சருக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அமைச்சரவையை மாற்றி அமைத்திருக்கலாம். விசாரணைக்குழுவை நியமித்தால் அதன் பரிந்துரையின்படி செய்வதே நீதியும் தர்மமும் ஆகும். அவ்வாறு செய்யாது பழிவாங்கும் போக்கை முதலமைச்சர் கடைப்பிடித்தது மோசமான செயல்.

ஊழலுக்கு தமிழ் அரசுக் கட்சி துணைபோவது போல் ஒரு மாயையைக் காட்டும் அருட்திரு.மங்களராஜா, முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் முடிவைக் கட்சி முழுமையாக ஏற்றுக் கொண்டிருப்பதை தெரிந்துகொள்ளவேண்டும்.

விக்னேஸ்வரன் தனியாக அல்ல கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வேண்டியவர். கூட்டாகச் செயல்படுவதற்குத்தான் மக்களின் ஆணை பெறப்பட்டது. மக்களின் ஆணை என்பது ஒரு கேலிக்கூத்தல்ல என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்கள் எல்லாவற்றிலும் கட்சியின் செயற்பாடுகளை மதித்து மக்கள் ஆணை வழங்கினார்களேயல்லாமல் தனிப்பட்ட விக்னேஸ்வரனுக்காக அல்ல. இதை அருட்திரு.மங்களராஜா புரிந்துகொள்ளவேண்டும்.

அருட்திரு.மங்களராஜா விக்னேஸ்வரன் கொண்டிருக்கும் கிறிஸ்தவ எதிர்ப்பு மனோபாவம் பற்றி ஒருபோதும் கவனம் செலுத்தாமை வருத்தத்துக்குரியது. இது தொடர்பாக நான் பல விடயங்களை விக்னேஸ்வரனுக்கு எதிராக குறிப்பிடமுடியுமென்றாலும் நாகரிகம் கருதி தவிர்த்துக்கொள்கின்றேன்.

யாழ்ப்பாண கத்தோலிக்க திருச்சபை ஒரு தலைப்பட்சமான அரசியல் நிலைப்பாட்டை எடுப்பது எந்தளவுக்குச் சரியானது என்று எனக்குத் தெரியவில்லை.

யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு தமிழ் அரசியல் கட்சிகள் விடயத்தில் ஒரு தலைப்பட்சமாக இயங்கவில்லை. நான் நீண்டகாலம் நீதி சமாதான ஆணைக்குழுவின் செயலாளராகச் செயற்பட்டவன்.

தனிப்பட்ட முறையில் எவரும் தத்தமது விருப்பத்துக்கு ஏற்ப அரசியல் கட்சிகளை ஆதரிக்கலாம். அது ஒவ்வொருவரதும் உரிமையும் சனநாயக சுதந்திரம்கூட. நிறுவன ரீதியாகப் பார்க்கும்போது கத்தோலிக்க திருச்சபை பொதுவானதாக, பாரபட்சமற்ற நடுநிலையைக் கொண்டிருக்க வேண்டும்.

நீதி சமாதான ஆணைக்குழுவின் தலைவர் உண்மைக்குப் புறம்பாக வேண்டுமென்றே மக்கள் மத்தியில் கசப்புணர்வை தூண்டும் வகையில் மறைமுக அரசியலை முன்னெடுத்துள்ளமை பெரிதும் கண்டனத்துக்குரியது.

மேய்ப்பரான தாங்கள் மாகாணசபைப் பிரச்சினையை சாதுரியமாக முடிவுக்குக் கொண்டு வந்தீர்கள். எதிர்காலத்தில் கசப்புணர்வுகள் தொடராமல் நீதி சமாதான ஆணைக்குழு 'உண்மைக்குச் சான்று பகர' என்ற மகுடவாசகத்துக்கு அமைய உண்மையாகவே உண்மைக்குச் சான்று பகர்ந்து செயல்படுமென நம்புகிறேன் என்றுள்ளது.

கட்சியின் இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து அருட்திரு மங்களராஜா, "இது பழைய விடயம். இது பற்றி இப்போது செய்தி வெளியிடவேண்டிய தேவை இல்லை" என்று உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார். ஆயரின் கருத்தை உடனடியாகப் பெறமுடியவில்லை. (உ-5-101)

## பதவி...

மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயிடம், அமைச்சர் பா.டெனீஸ்வரன் நேற்று இரவு அலைபேசியூடாகத் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனை அமைச்சரவையிலிருந்து முதலமைச்சர் நீக்கியுள்ளார். ஆளுநருக்கு இது தொடர்பில் அறிவித்துள்ளார். கடந்த வாரம் ஆளுநருக்கு அனுப்பிய கடிதத்தில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் தான் இப்போதும் பதவியில் தொடர்வதாகத் தெரிவித்திருந்தார்.

இதனால் இதிலுள்ள சட்டச்சிக்கல் காரணமாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆளுநர் ஆலோசனை கோரியிருந்தார்.

இந்த நிலையில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் குரேயை அலைபேசியில் தொடர்பு கொண்டு நேற்றுப் பேசியுள்ளார்.

அமைச்சுப் பதவியிலிருந்து சுயமாக விலகுவதற்கான கடிதத்தை வழங்க மாட்டேன் என்று அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார். அமைச்சர் ஒருவரைப் பதவி நீக்குவது தொடர்பில் உள்ள சட்ட ஏற்பாடுகளையும் பா.டெனீஸ்வரன் ஆளுநருக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை இன்று (நேற்று) அல்லது நாளை காலை (இன்று) கிடைக்கும் என்று ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (5)

## விந்தன்...

பரிந்துரைத்த க.விந்தனின் பெயரை உள்ளடக்க முடியாமைக்கு வருந்துகின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

மாகாணசபை உறுப்பினர் விந்தனுக்கு முதலமைச்சர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சுகாதார அமைச்சை நடத்துவதற்கு உங்களுக்குப் போதிய அனுபவம் இருக்கின்றது என்பதை என்னை வந்து சந்தித்து நீங்கள் தெரிவித்தீர்கள். உங்கள் தன்னம்பிக்கையை வெளிப்படுத்தினீர்கள். அதை நான் மெச்சுகின்றேன். பலருடனும் கலந்தாலோசித்த பின்னர் சுகாதார அமைச்சுக்குப் பொருத்தமானவர் தொழில் ரீதியாக உரிய தகமை உடையவரே என்ற முடிவுக்கு வந்து மருத்துவக் கலாநிதி குணசீலனைத் தேர்ந்தெடுத்துள்ளேன். அவரும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

இந்த விடயத்தில் உங்கள் கட்சியின் சிபார்சை ஏற்க முடியாமைக்கு வருந்துகின்றேன். போக்குவரத்து அமைச்சு எனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படவுள்ளது. அதனைக் கொண்டு நடத்த என்னுடன் இணைந்து கடமையாற்றக் கூடிய மாகாணசபை உறுப்பினர் தேவைப்படுகின்றார். உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் எனது அமைச்சுடன் நெருங்கிப் பணியாற்ற அழைக்கின்றேன் என்று முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (உ-5)

## விஜயதாசவை...

கோரிக்கை விடுத்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழுவின் தீர்மானத்துக்கு அமைவாகவே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது என்று கட்சியின் பொதுச்செயலாளர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவுக்கு 99 ஆண்டுகள் குத்தகைக்குக் கொடுத்தமையை நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாச கடுமையாக விமர்சித்தார். அதன் பின்னர் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறும் வகையில் தொடர்ச்சியாக செயற்பட்டு வந்தார் எனவும், முன்னாள் ஆட்சியாளர்கள் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதில் மென்தன்மையைப் பேணினார் எனவும் அவர் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. கடந்த 17ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அவற்றுக்குப் பதிலளிக்கும் அவகாசம் நேற்றுமுன்தினம் வரை வழங்கப்பட்ட போதிலும் அமைச்சர் பதிலளிக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில், அனைத்து அமைச்சுப் பதவிகளில் இருந்தும் அமைச்சர் விஜயதாசவை நீக்க வேண்டும் என்று கட்சி தீர்மானித்தது. இந்தக் கூட்டம் முடிந்த கையோடு சூட்டோடு சூடாக அரசதலைவர் மைத்திரிபாலவுக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது. அந்தச் சந்திப்பு முடிவடைந்த பின்னர் அரச தலைவருடன், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் சந்தித்துப் பேசினார். இதன்போது, விஜயதாசவை அனைத்து அமைச்சுப் பொறுப்புக்களிலிருந்தும் நீக்குமாறு அரச தலைவரிடம் தலைமை அமைச்சர் கோரிக்கை விடுத்தார். அதற்கு அரச தலைவரும் இணங்கினார் எனத் தெரியவருகின்றது. (உ-5)

# விக்னேஸ்வரா வி. கழக கால்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 23
புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும், கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றும், நேற்றுமுன்தினமும் அதற்கு முன்யை நாளும் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற ஓர் ஆட்டத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் சுப்பர்ராங் விளையாட்டு கழக அணியை எதிர்த்து இரணை மாதாநகர் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் சென். மேரிஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பிறிதொரு ஆட்டத்தில் உடுப்புக்குளம் அலையோசை விளையாட்டு கழக அணியை எதிர்த்து செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் செந்தமிழ் விளையாட்டுக் கழக 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் இரணைமாதா நகர் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் செந்தமிழ் விளையாட்டுக் கழக 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பிறிதொரு ஆட்டத்தில் இரணைப் பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவு வரை எந்த அணியாலும் கோலைதனையும் பதிவுசெய்ய முடியவில்லை. இதனால் ஆட்டம் சமநிலை கண்டது.

மற்றொரு ஆட்டத்தில் சுப்பர்ராங் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அலையோசை விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவு வரை எந்த அணியாலும் கோலைதனையும் பதிவுசெய்ய முடியவில்லை. இதனால் ஆட்டம் சமநிலை கண்டது.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் வவுனியா மருதநிலா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் அலையோசை விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் உருத்திரபுரம் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

நேற்றுக் காலை இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அலையோசை விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் அலையோசை அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் வவுனியா மருதநிலா அணியை எதிர்த்து எதிர் சென். யூட் அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் சென். யூட் வெற்றிபெற்றது. (ம-23)

# உதயசூரியன் அணி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஓக. 23
குடத்தனைசெல்வா விளையாட்டுக் கழகம் அன்னை வேளாங்கன்னி ஆலயத் திருவிழாவை முன்னிட்டு நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் உதயசூரியன் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

குடத்தனைசெல்வா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளம்பிறை விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி 9 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிகிந்தன் 34 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் மைக்சின் 3 இலக்குகளையும், ஜஸ்ரின், தர்சன், சிவறூபன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

79 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இளம்பிறை விளையாட்டுக் கழக அணி 73 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 5 ஓட்டங்களால் வெற்றிபெற்றது உதயசூரியன் அணி. பந்துவீச்சில் ஜஸ்ரின் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

(ம-23)



# சென். ஜோசப் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஓக. 23
விடத்தல்தீவு யூனியன் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் அரிப்பு சென். ஜோசப் அணி சம்பியனானது.

விடத்தல்தீவு பிரதேச சபை பொது விளையாட்டுமைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அரிப்பு சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பண்டிவிரிச்சான் சென். சேவியர் அணி மோதியது.

இரண்டு அணிகளும் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தியமைக்கு ஏற்ப முதல் பாதியின் முடிவு வரை கோலெதுவும் பதிவாகவில்லை. இரண்டாம் பாதியின் 21ஆவது நிமிடத்தில் அரிப்பு சென். ஜோசப் விளையாட்டுக் கழகத்தின் றொசின்ரன் தனது அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார். பதிலடி கொடுப்பதற்கு சென். சேவியர் பலமுறை முயற்சித்தது. எந்த முயற்சியும் கைகூடவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது சென். ஜோசப் அணி.

ஆட்டநாயகனாக ஆர். எஸ். றெனோசன் லம்பேட், தொடராட்ட நாயகனாக றொசிங்ரன் குரூஸ் ஆகியோர் தெரிவாகினர்.

(ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 23
நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும் இணைந்து யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் காலிறுதி ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# ஐக்கியம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 23
சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் ஜோசவாஸ்நகர் ஐக்கிய அணி கிண்ணம் வென்றது.
அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான இந்தத் தொடரின் இறுதியாட்டம் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.



பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது.

இரண்டு அணிகளும் ஆரம்பம் முதல் மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியும் கோல்கள் இல்லாமல் நகர்ந்து முடிந்தது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் எந்த அணியும் தனித்து ஆதிக்கம் செலுத்தவில்லை. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:1 என்ற கோல் கணக்கில் ஐக்கியம் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# உருத்திரபுரம் வி.கழகத்தின் கால்பந்தாட்ட முடிவுகள் சில

யாழ்ப்பாணம், ஓக. 23
உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து அழைக்கப்பட்ட கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சில ஆட்டத்தின் முடிவுகள் வருமாறு.

இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் திருநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருவையாறு விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் திருநகர் விளையாட்டுக் கழக அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாந்தபுரம் கலைமகள் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.


இரவு 9 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உதயதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பரந்தன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் உதயதாரகை விளையாட்டுக் கழக அணி 9:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம-23)






ஸ்பெய்னின் பார்சிலோனா நகரில் அண்மையில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டனர். பார்சிலோனா அணி நேற்றுமுன்தினம் களமிறங்கிய பெடிஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் உயிரிழந்தவர்களுக்கு உருக்கமான அஞ்சலிகள் செலுத்தப்பட்டன. பார்சிலோனா அணியின் வீரர்கள் அத்தனை பேரும் தத்தமது ஜேர்சிக்குப் பின்னால் தமது பெயருக்குப் பதிலாக 'பார்சிலோனா' என்று குறிப்பிட்டு விளையாடினார்கள். ஆட்டத்துக்கு முன்பாக இரண்டு அணியின் வீரர்களும் இணைந்து அஞ்சலி செலுத்தினர். (ம)



# மீண்டும் வந்தார் கிறிஸ் கெய்ல்

மேற்கிந்தியத் தீவுகளின் ஒருநாள் ஆட்டங்களுக்கான அணியில் சுமார் 2 வருடங்களின் பின்னர் இடம் பிடித்தார் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் தற்போது டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடர் முடிவடைந்த பிற்பாடு செப்ரெம்பர் 16ஆம் திகதி ரி-20 ஆட்டம் நடைபெறவுள்ளது. அதன் பின்னர் செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் ஆரம்பமாகிறது. இந்தத் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. கெய்ல் அணியில் இடம்பிடித்தார். சுமார் இரண்டு வருடங்களின் பின்னர் கெய்லுக்கு அணியில் இடம் கிடைத்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் விவரம் - கோல்டர் (தலைவர்), சுனில் ஆம்பிரிஸ், பிஸ்கூ, கம்மின்ஸ், கெய்ல், கோப், சாய் கோப், அல்சாரி ஜோசப், லூயிஸ், ஜேசன் மொகமட், ஆர்லி நேர்ஸ், பவல், சாமுவேல்ஸ், ஜெறோம் ரெய்லர், வில்லியம்ஸ்.

இங்கிலாந்தில் எதிர்வரும் 2019ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணி நேரடித் தகுதி பெற வேண்டுமாயின் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரின் அத்தனை ஆட்டங்களிலும் வெற்றிபெற வேண்டும் என்ற சிக்கல் உள்ளது. இந்தப் பின்னணியிலேயே கெய்ல் அணியில் இணைக்கப்பட்டுள்ளார். கெய்ல் மட்டுமல்லாது சாமுவேல்ஸும் நீண்ட காலத்தின் பின்னர் அணியில் இடம்பிடித்துள்ளார். அவர் கடந்த ஒரு வருடகாலமாக அணியில் இடம்பிடித்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# ஒட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமிகள்

## இலங்கை அணி தொடர்பில் நிக் போத்தாஸ் விமர்சனம்

இலங்கை அணியின் தொடர் தோல்விகள், அதன் மீதுள்ள அரசியல் தலையீடுகள் ஆகியன தொடர்பில் 'ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமிகள்' என்று விமர்சித்துள்ளார் இலங்கை அணியின் பயிற்சியாளர் நிக் போத்தாஸ்.

தென்னாபிரிக்காவில் வைத்து தோல்வியடைந்த இலங்கை அணி, அதன் பின்னர் பங்களாதேஷ், சிம்பாப்வே அணிகளுக்கெதிராகவும் குறிப்பிடும் படியான தோல்விகளைப் பெற்றுக் கொண்டது. பின்னர், இந்தியாவுக்கெதிரான டெஸ்ட் தொடரை 0:3 என்ற கணக்கில் இழந்த அந்த அணி, இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்திலும் தோல்வியடைந்துள்ளது. இதையடுத்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றிலேயே இலங்கை அணி குறித்து 'ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமிகள்' என்று தெரிவித்தார் போத்தாஸ்.




"வீரர்களுடன் எனக்குக் கோபம் இருக்கிறதா? இல்லவே இல்லை. எவ்வளவு முடியுமோ, அவ்வளவுக்குக் கடினமாக அவர்கள் உழைக்கின்றனர். உதவும் பயிற்றுநர்கள், மிகச்சிறப்பாக உள்ளனர். திட்டமிடுதலுக்கும் வீரர்களுக்கு உதவுவதிலும், அவர்கள் அளவுகணக்கின்றிச் செயற்படுகின்றனர். அணியின் அறைக்குள் இருப்பவர்கள் யாரிலும் நீங்கள் குறைகாண முடியாது. இவர்கள், அற்புதமான திறமை படைத்த வீரர்கள். அவர்களுக்கு நீங்கள் சிறிதளவு நேரம் வழங்கி, சிறிதளவு அன்பு வழங்கி, சிறிதளவு பரிவு வழங்கி, நம்பிக்கையை வளர்த்தால், சாதகமான முடிவுகளை நீங்கள் பெறமுடியும். அணி வீரர்கள் தெரிவில் தொடர்ச்சியான தன்மையை நீங்கள் பெற்றால், பெறுபேறுகளில் முன்னேற்றத்தைக் காண முடியும்" என போத்தாஸ் மேலும் தெரிவித்தார். (ம)

# பாகிஸ்தான் செல்கிறது மேற்கிந்தியத் தீவுகள்

பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் செய்து மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடச் சம்மதித்துள்ளது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

கடந்த 2009ஆம் ஆண்டு இலங்கை அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிய போது, லாகூரில் வைத்து அவர்கள் பயணித்த பேருந்து மீது ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூடுநடத்தினர். இலங்கை வீரர்கள் சிலர் காயமடைந்தனர். இதற்குப் பின்னர் பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ள ஏனைய அணிகள் பின்னடிப்புச் செய்கின்றன. சிம்பாப்வே மட்டும் ஒருமுறை பாகிஸ்தானுக்குச் சென்று விளையாடியுள்ளது. அங்கு சென்ற சிம்பாப்வே அணிக்கு வரலாறு காணாத பாதுகாப்பை பாகிஸ்தான் அரசும், கிரிக்கெட் சபையும் ஏற்படுத்தின. சிம்பாப்வே அணி சுற்றுப் பயணம் செய்த காரணத்தால் ஏனைய அணிகளும் தமது மண்ணுக்கு வரும் என்று எண்ணிய பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இலங்கை மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தது. இந்தஅழைப்பை அண்மையில் இலங்கை கிரிக்கெட் சபை ஏற்றுக் கொண்டது. இதன்படி இரு அணிகளுக்கும் இடையில் ஒருரி-20 ஆட்டம் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.


மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையும் பாகிஸ்தானின் அழைப்பை ஏற்றுக்கொண்டுள்ளது. இரு அணிகளுக்கும் இடையில் நவம்பர் மாதம் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)




# இலங்கை ரசிகர்களுக்கு மகேல அறிவுரை

இலங்கை அணியின் தொடர் தோல்விகளால் ரசிகர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளனர் என்பதை ஏற்றுக் கொண்டுள்ள இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மகேல ஜெயவர்தன, எனினும் இதுபோன்ற தருணங்களில் ரசிகர்கள் மிகுந்த பொறுமையுடன் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.


இந்தியாவுக்கு எதிராக நடைபெற்ற முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் இலங்கை அணி மிகமிக மோசமாக தோல்வியைச் சந்தித்தது. ஆட்டம் முடிந்த பின்னர் இலங்கை அணியினரை அவர்களின் விடுதிக்கு அழைத்துச் செல்வதற்காக



பேருந்து வந்தபோது சுமார் 50 க்கும் மேற்பட்ட ரசிகர்கள் இலங்கை அணிக்கு எதிராக கோசமிட்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். "இலங்கை அணியில் அரசியல் வேண்டாம்" என்று அவர்கள் கூக்குரலிட்டனர்.

ரசிகர்களின் இந்த நடத்தை மிகவும் தவறு என்று குறிப்பிடுகிறார் மகேல.

"ரசிகர்களின் ஆதங்கம் எனக்குப் புரிகிறது. ஆனால் இதுபோன்ற நெருக்கடியான தருணங்களில் ரசிகர்கள் இவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது. இது வீரர்களுக்கு மேலும் நெருக்கடிகளையும், அழுத்தங்களையும் கொடுக்கும். வீரர்களுக்குத் தேவை ரசிகர்களின் ஆதரவே." என்று மகேல தனது ருவிற்றர் பக்கத்தில் குறிப்பிட்டார். (ம)



ஆஸ்திரேலிய அணி பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் பங்களாதேஷ் அணி கடந்த சில தினங்களாக கடும் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. (ம)

# பெயரை மாற்றுகிறது ராஜஸ்தான் ரோயல்ஸ்

ஐ.பி.எல். தொடரில் விளையாடும் அணிகளில் ஒன்றான ராஜஸ்தான் ரோயல்ஸ், தனது பெயரை மாற்றவுள்ளது என்று தகவல்கள் வந்துள்ளன.

சூதாட்டத்தில் ஈடுபட்டது என்று தெரிவித்து ராஜஸ்தான் அணிக்கு இரண்டு வருடங்கள் தடை விதிக்கப்பட்டது. இதனால் கடந்த வருடமும், அதற்கு முன்னைய வருடமும் ராஜஸ்தான் அணி களமிறங்கவில்லை. இந்த வருடத்துடன் தடை முடிவடைந்துள்ளது. அடுத்த வருட ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் அணி களமிறங்கவுள்ளது. எனினும், முன்னைய பெயருடன் அந்த அணி களமிறங்க விரும்பவில்லை என்றும் பெயரை மாற்ற விருப்பம் தெரிவித்து இந்திய கிரிக்கெட் சபைக்கு கோரிக்கை வைத்துள்ளது என்றும் அறியமுடிகிறது. (ம)

## தோல்வியில் இருந்து மீண்டு பதிலடி கொடுக்குமா இலங்கை



இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.
பல்லேகல மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. முன்னதாக முடிவடைந்த ஆட்டத்தில் இந்திய அணி மிகமிக இலகுவான வெற்றியைப் பெற்றது. நாளையும் இந்திய அணி வெற்றிபெற்றால், அடுத்த மூன்று ஆட்டங்களிலும் வென்றால் மட்டுமே தொடரைக் கைப்பற்ற முடியும் என்ற இக்கட்டான நிலைக்கு இலங்கை தள்ளப்படும். எனவே தொடரில் தன்மீதான அழுத்தத்தைப் போக்க நாளைய ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றி பெற வேண்டும் என்ற நிலை உள்ளது. (ம)

V2 TRAVELS
வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு.
(VISA EXTENSION)
யாழ்ப்பாணத்திலேயே இப்பொழுது செய்து கொடுக்கப்படும்.
0768227499

பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்துள்ள யுவதிகளிற்கு தொழிற்பயிற்சி மற்றும் உடனடி வேலை வாய்ப்பு.
அலுவலகப் பணியாளர், வெளிக்கள அலுவலர், பண்ணை உதவியாளர், வியாபார மேம்படுத்தல் உத்தியோகத்தர் போன்ற வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம். தூர இடத்தவர்களிற்கு இலவச தங்குமிடம் வழங்கப்படும்.
விண்ணப்பிக்க அழையுங்கள். 076 838 4466, 077 809 6226.
சீர் உயிர் நிறுவனம், பொற்பதி வீதி, கொக்குவில்.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
O/L, A/L கற்றோர், இளைஞர் யுவதிகள், வீட்டுப்பெண்கள் தொழில்புரிவோர், வெளிநாடுசெல்வோர் இணையமுடியும்.
சாம்ஸன் ஆசிரியரின் 3 மாத நேரடிபேச்சுப் பயிற்சி வகுப்பில், ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்களும் தமிழ்போல சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 26.08.2017
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.ப 01.00-03.00
4. மாலை 03.00-05.00
வாரநாள் வகுப்புகள் (திங்கள் மற்றும் புதன்)
1.காலை 08-10 2.காலை 10-12 3.மாலை 03-05
நீங்கள் ஆங்கிலம் பேசவேண்டுமா? இல்லையா?
SAAMSON
Experts in English Training
403, பெருமாள் கோயில் அருகில், வெலிங்டன் சந்தி யாழ்நகர்
021 320 3313
077 1570 486

## ரென்னிஸ் தரப்படுத்தல்: ரபேல் நடால் முதலிடம்



பன்னாட்டு ரென்னிஸ் சம்மேளனம் தனது தரப்படுத்தல்களை நேற்றுப் புதுப்பித்துக் கொண்டது. ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால் சுமார் 3 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் முதலிடம் பிடித்தார்.
தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள முர்ரே, காயம் காரணமாக சின்சினாட்டித் தொடரில் இருந்து வெளியேறினார். பெடரரும் களமிறங்கவில்லை. இதனால் போட்டியின்றி முதலிடத்துக்கு முன்னேறினார் நடால்.
7 ஆயிரத்து 645 புள்ளிகளுடன் நடால் முதலிடத்தில் உள்ளார். பிரிட்டன் வீரர் அன்டி முர்ரே 7 ஆயிரத்து 150 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். சுவிற்சர்லாந்து வீரர் பெடரர் 7 ஆயிரத்து 145 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், வாவ்ரிங்கா 5 ஆயிரத்து 690 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், சேர்பிய வீரர் ஜோகோவிக் 5 ஆயிரத்து 690 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். (ம)

பணிப்பெண் தேவை
யாழ்ப்பாணத்தில் வயோதிபப் பெண் ஒருவரை தங்கி நின்று பராமரிக்க நடுத்தர வயதுடைய பெண் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு :- 077 450 5587

வீடு வாடகைக்குண்டு
யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு.
077 111 9671, 021 221 1171

Electrical wiring
வீட்டு மின் சுற்று அமைத்தல்



மாணவர்கள் அடிப்படையிலிருந்து சுயமாக தொழில் துறையை மேம்படுத்துவதற்கு தேவையான Theory மற்றும் Practical உடன் கூடிய குறு நேர பாடநெறி பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
Course fee 11,500/-
Register fee 2,500/-
மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்
077 673 44 44
BRC
BRITISH ROYAL COLLEGE
267, Power House Road, Jaffna.
T-021 493 6666 M-076 584 22 22
E-mail: collegebritishroyal@gmail.com
Web: www.britishroyalcollege.com

Mobile Phone Repairing
கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி



மாணவர்கள் அடிப்படையிலிருந்து சுயமாக தொழில் துறையை மேம்படுத்துவதற்கு தேவையான Theory மற்றும் Practical உடன் கூடிய குறு நேர பாடநெறி பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
Course fee 11,500/-
Register fee 2,500/-
மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்
077 673 44 44
BRC
BRITISH ROYAL COLLEGE
267, Power House Road, Jaffna.
T-021 493 6666 M-076 584 22 22
E-mail: collegebritishroyal@gmail.com
Web: www.britishroyalcollege.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.0 8.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.